உ

சிவமயம்

# அரியவும் பெரியவும்

## பெரியபுராணச் சிந்தனைகள்

(முதலாம் பாகம்)



வெளியீடு :

**துர்க்காதேவி தேவஸ்தானம்,**

தெல்லிப்பழை, இலங்கை.

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

421

ம. திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அரியவும் பெரியவும்

## பெரியபுராணச் சிந்தனைகள்

(முதலாம் பாகம்)

ஆசிரியர்:

**மு. கந்தையா,**

ஏழாலை.

உருதிரோற்காரி தை

1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1984
பிரதிகள் : 1000
பதிப்புரிமை : ஆசிரியருக்கே உரியது

வெளியீடு :
**துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை, இலங்கை.

அச்சுப்பதிவு :
திருமகள் அழுத்தகம்,
சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய
நிர்வாகசபைத் தலைவர்
சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி
**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

## "சேக்கிழாரடி சென்னி இருத்துவாம்"

திருத்தொண்டர் புராணம் என்னும் நூல் சைவ மக்களின் அரிய சொத்து. இதனைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் ஒரு தெய்வீகக் கவிஞர். தில்லையம்பலவனால் உணர்த்த உணர்ந்தவர். இவ்வுணர்வே இறையின்பத்தை அடைந்தோரது நிலையை விளக்கப் பெரிதும் தூண்டியது. சிவ பக்தியும் சிவனடியார் பக்தியும் சிறப்புற்றோங்க வேண்டுமென்ற குறிக்கோளுடனே 12ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட இப்பெரிய புராணம் அறிஞர்களுக்கு நிறைந்த ஆத்மீக ஆய்வுகளைக் கொடுத்து வருகிறது. தமிழ் நாட்டிலும் நம் நாட்டிலும் இந்நூலை நயந்து நயந்து எழுத்தெண்ணி இன்புற்றுப் படிப்பவர்கள் ஒரு சிலர் இன்றும் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் தனிப்பெருமைக்குரியவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். இப்பெரியார் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்ப்புலமையும் ஆங்கிலப்புலமையும் வடமொழி வன்மையும் ஒருசேரப் பெற்றவர். நீண்டகாலம் ஆசிரியப் பணியில் ஈடுபட்டவர். சிறந்த புலவர்; நல்ல எழுத்தாளர்; சுவையான பேச்சாளர்; பெரியபுராண படனத்தைப் பல ஆண்டுகள் நம் நாட்டுத் திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் நடாத்திச் சைவ உணர்வையூட்டிவருபவர். இப் பெரியார் பலகாலம் பெரிய புராணத்தைப் பயின்ற காரணமாகவும் அதனை நயந்து கொண்ட சிறப்பாலும் எழுந்த அரிய கருத்துக்களைத் திரட்டி "அரியவும் பெரியவும்" என்ற ஆய்வுக் கட்டுரைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளடங்கிய இந்நூலை ஆக்கித்தந்துள்ளார். உயர்வகுப்பு மாணவர்களுக்கும் சைவ சமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் ஆகியோருக்கும் மிகப் பயன்தரக் கூடிய முறையில் ஆய்வு சிறப்பாக அமைந் துள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் இயற்றப் பட்ட பெரிய புராண சூசனம் போன்று சுருக்கமும், தெளி வும், விளக்கமும் கொண்டது இந்நூல். எனவே இதனை அச்சிட்டு வெளியிடுவதில் எங்கள் தேவஸ்தானம் பெரு மகிழ்ச்சியடைகிறது.

காலத்துக்குக் காலம் இத்தகைய அரிய நூல்களை வெளி யிட்டு உதவும் பணியை எமது தேவஸ்தானம் மேற்கொள் வது ஒரு சிவ புண்ணியச் செயலாகும். இந்த நோக்கிலேதான் கடந்த ஆண்டு "பெரிய புராண வசனம்" என்ற சிறந்த புராணநூல் வெளியிடப்பட்டது. நாவலர் பெருமானின் நற்பணிகளை நாம் நினைவு கொள்கிறோம் என்பதற்கு இது ஒரு சான்றாகும். இதனைத் தொடர்ந்து பெரிய புராணச் சிந்தனையாக அமையும் "அரியவும் பெரியவும்" என்ற இந்நூலை வெளியிடுவதும் மிகப் பொருத்தமாகும்.

இந்நூலை ஆக்கி அளித்து நல்லபடி அச்சேற அவ்வப் போது கண்காணித்து உதவிய எமது மதிப்பார்ந்த பண்டிதர் திரு. மு. கந்தையா B. A. அவர்களுக்கு எமது தேவஸ் தானம் உளங்கனிந்த நன்றியைச் செலுத்துவது முதற் கடனாகும். சென்ற ஆண்டு கயிலாயம் சென்று தரிசனம் முடித்து அருட்பிரவாகத்தோடு திருப்பனந்தாள் ஆதீனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகளின் ஆசியுரை ஒன்றை இந்நூலுக்குப் பெற்றுக்கொள்ளவேண்டு மென்று பெரிதும் விரும்பினோம். இதனை ஏற்றுக்கொண்ட சுவாமிகள் அவர்கள் அரியதோர் ஆசியுரையொன்றை உரிய காலத்தில் அனுப்பி வைத்துள் ளார்கள். அவர்களின் பொன்னார் திருவடிக்கு எமது வணக்கம் உரித்தாகுக. அத்துடன் அரியதோர் அணிந்துரையை நல்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு அழகு செய்த எங்கள் வணக்கத்துக்குரிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவுக்கு எமது தேவஸ்தானம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்து கிறதில் பேருவகையடைகிறது.

எமது வேண்டுதலை உவந்தேற்று, தமக்குளவாம் பெரும் பொறுப்புகளுக்கிடையிலும் எவ்வகையிலோ அவகாசங்கண்டு இந்நூற் சிந்தனைகளுக்குச் சிந்தனையாயமையும் வகையில் அரியதோர் மதிப்புரை உதவியுள்ள திருக்கேதீச்சரத் திருப் பணிச் சபைத் தலைவர், சித்தாந்த வித்தகர் திரு. மு. ஞானப் பிரகாசம் B. A., B. SC. ஐயா அவர்களுக்குப் பெரும் நன்றிக் கடப்பாடுடையோம்.

சதா வேதாகம சைவ சித்தாந்த ஆராய்ச்சி யுண்மை யனுபவச் சுவையிலேயே திளைத்திருக்கும் தமது முதுசுவை நாவால் இந்நூற் பொருளையுஞ் சுவைத்த சுவையுணர்வு தோன்றத் திவ்வியமான அணிந்துரை அளித்திருக்கும் வடகோவை சோம. ஈசாந சுப்பிரமணிய சிவாசார்யர் அவர் களுக்கும் எம்பெரு நன்றி வணக்கம் உரியதாகும்.

இந்நூலை அழகு தரும் முறையில் பிழையின்றிச் செம்மையான முறையில் அச்சிட்டு உதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும் எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆண்டு தோறும் வெளியிட முன்வரும் சிறந்த சைவத்தமிழ் நூல் களை அவ்வப்போது பெற்று ஆதரவு நல்கும் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
1-4-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
(அதிபர், ஸ்ரீ காசிமடம்)
வழங்கிய

# ஆசியுரை

சைவ முதற் காப்பியம் திருத்தொண்டர் புராணம்; மன்றுளார் அடியார் புகழை இன்றும் நின்று நிலவச் செய்து வருவது. அதன் அளப்பரிய கவித்துவத்தில் மூழ்கி அரிய நன்முத்துக்களை எடுத்துக் கோத்து 'அரியவும் பெரியவும்' எனும் நூலாக அளிக்கின்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பணி பாராட்டிற்குரியது.

என்ன இது? ஏன் இது? — என்பார்க்கு விளக்கம் தரும் முன்னுரை; தொண்டர் மாக்கதையின் தீவிய சொற்றொடர் களால் அமைந்த தலைப்புகள்; எளிய, ஆழ்ந்த பொருள் நயமிக்க சொற்கோவைகளால் அடியார் பெருமை விளக்கம்; பண்டைத் தமிழ் நூல்கள், சித்தாந்தம், வேதாகமங்கள் இவற்றிலிருந்து பொருந்தும் இடங்களில் மேற்கோள்கள்; அடியார் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குத் தத்துவார்த்தமான விளக்கங்கள் — இவைகளை ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது அது ஒரு அரிய ஆராய்ச்சிப் படைப்பாகவும், அனைத் துத் திறத்தாரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் வகையில் பெரியதொரு கருவூலமாகவும் தோற்றம் தருகின்றது. நூலின் கரு அரியது; அது விளக்கப்படுகின்றமை பெரியது.

தெய்வத் தமிழ்க் காவியச் சிந்தனையால் விளைந்துள்ள இந் நூலின் வெளியீடு சிறக்கவும், இத்தகு திருவருட் பணிகளில் தொடர்ந்து ஈடுற்று அன்பர் நலன்கள் நனியெய்தவும், நிறைந்த புலமையும், நிலைத்த பத்திமையும் மிக்க செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோர் நீடினிது வாழவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்து கின்றோம்.

சுபம்
சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி—பாராட்டு—வாழ்த்து

## பெரியபுராணம் பற்றிய சிந்தனை

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

பன்னிரு திருமுறைகள் — பதினான்கு சாத்திரங்கள் — வேதாகமங்களில் வேண்டிய பகுதிகள் — ஆகிய இவற்றிலும், இவற்றின் வழிவந்த நூல்களிலும், மிக்க பயிற்சி உள்ள வர்களே, அருமையும் பெருமையும் வாய்ந்த பெரிய புரா ணத்து நாயன்மார்கள் பற்றி ஓரளவு சிந்திக்கக் கூடிய வர்கள். அவர்கள் இலைமறை காய்போல ஆங்காங்கு இருக்கக் கூடும். அவர்களில் பகிரங்கமாக அறியக் கூடிய ஒருவர், இந்த யாழ்ப்பாணத்தில் உளராயின் அந்த ஒரே ஒருவர் பண்டிதர் மு. கந்தையா B. A, அவர்களேயாவர். அவர் பெரிதும் பாராட்டுக்குரியர்.

பண்டிதர் இயற்றிய ஆராய்ச்சியின் பெறுபேறான சிந்தனை நூலை,

பெரிய புராணத்
‘திறவு கோல்’

என்று வருணிக்க என் மனம் நாடுகின்றது.

* * *

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் முன்னமே பெரிய புராண வசனத்தை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுது பெரியபுராணம் பற்றிய சிந்தனைத் திறவுகோலை வெளியிட முன்வந்திருப்பது வெகு பொருத்தமேயாம். இது முதற் பாகம். அடுத்த பாகங்களையும் வெளியிடும் என்று நம்பலாம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கும், தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் நன்றி தெரிவிப்போமாக.

* * *

பண்டிதர் அவர்களின்
சிந்தனை நூல்,
என்றும் நின்று நிலவிப் பயன் செய்வதாக
என்று,
திருவருளை வேண்டுதல் செய்து வாழ்த்துவோமாக.

திருத்தொண்டர் திருவடிகள்
சரணம்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
15-03-84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மதிப்புரை

## பெரிய புராணச் சிந்தனைகள்

திரு. மு. ஞானப்பிரகாசம், B. A., B. SC.
(தலைவர், திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை)

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பு சைவசமயத்துக்கே சிறப்பாக உரியது. இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பில் நிகழக் கூடிய பல்வேறு அநுபவ நிலைகளை, சிவஞானபோதம் 10ஆம், 11ஆம், 12ஆம் சூத்திரங்கள் கூறுகின்றன.

மேற்படி சூத்திரங்கள், 'பாசம் ஒருவ, தண்ணிழலாம் பதி' எனவும், 'ஏகனாகி இறைபணி நிற்க' எனவும், 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' எனவும் கூறும் பகுதிகள் மந்திரங்கள் போல்வன. அவை சுருக்கினால் சுருங்கி ஒய்வன; விரித்தால் விரிந்து செல்வன. ஆண்டான் அடிமைத் தொடர்பின் கீழ் அமைந்து நின்று, சைவ சித்தாந்த தரிசனத்தின் உயிர் நிலையங்களைத் தொட்டுக் காட்டுவன மேற்படி மந்திரங்கள். அநுபூதி மயமாய் விளங்கும் இந்த உயிர் நிலையங்களைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டும் நூல் பெரியபுராணம்; காட்டுகின்ற ஆசிரியர் தெய்வச் சேக்கிழார். நிகழ்காலம் எனப் பேசப்படும் இக்கால வெள்ளத்தில் சமயத்துறையில் மிதந்து நிற்பது விளம்பர வித்தையே. இந்த ஜால வித்தையிலிருந்து தப்பிப் பிழைத்து நிற்பவர்கள் மிகச் சிலரே. இவர்களுள் ஒருவர் 'பெரிய புராணச் சிந்தனைகள்' என்ற இந்நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள். அவரது சைவ சித்தாந்த நூலுணர்ச்சியும் சைவசித்தாந்த வகுப்புக்கள் நடாத்தும் திறனும் பிரசித்தி பெற்றவை. தம்மைப்போல ஒரு சிலராயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரத்தோடு சிவஞானபோதத்தையும் பெரிய புராணத்தை யும் ஒப்பவைத்து, ஆராய்ந்து விளங்கிக்கொள்ள முயலுதல் வேண்டும் என விரும்புவர். இத்தகைய விசார விளக்கங்க ளின்றி, ஆழமாக நோக்கும் திறனின்றி, பெரிய புரா ணத்தை மேல்வாரியாக அன்பு நூல் என்று சொல்லிக் கொண்டு திரிபவர்கள், தம்மைத் தாமே ஏமாற்றுபவர். அடி யார்கள் வாழ்வில், ஒரு சந்தர்ப்பத்தில்தான் அவர்கள் சொரூபம் பளிச்சிடுகிறதென்றும் அச்சொரூபத்தில்தான் சாமான்ய உலகியல் தர்மம் சலித்து விடுகிறதென்றும் 'மேன்மைகொள் சைவநீதியும் அயரா அன்புநிலை' யும் அத்தருணத்தில்தான் தோற்றம் பெறுகின்றன என்றும் ஆசிரியர் அவர்கள், இந்த முதற்பாக நூலின்கண்ணே விளக்கும் திறன் அற்புதமானது.

பெரிய புராணச் சிந்தனைகள் முதற்பாகம் எனத் தொடங்கப்பெற்றிருக்கும் இந்நூல் முழுவதும் எழுதப் பெற்று, சைவ உலகில் ஒரு அமைதியான சைவ இயக் கத்தை உருவாக்கி வைக்குமெனில், அதுவே இந்நூற் பயனாகும். அவ்வாறான ஒன்றை, எல்லாம் வல்ல இறை வனின் திருவருள், இந்நூலாசிரியர் வாயிலாக எமக்கு வழங்கவேண்டுமென்று, தெய்வத் திருவருளாகிய அந்தப் பெரும் பெட்டகத்தையே திரிகரணசுத்தியோடும் வணங்கி அமைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

வேதாகம சைவசித்தாந்த பானு

**வடகோவை சிவஸ்ரீ சோம. ஈசாந சுப்பிரமணிய சிவாசார்யர்**

**வழங்கியது**

ஏழாலையூர் பண்டிதர் சிவத்திரு மு. கந்தையா அவர்கள் நமது சகோதரர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா மூலம், அருமையும் பெருமையும் வாய்ந்த நூலொன்றை எமக்கு அனுப்பிவைத்தார். அதற்குப் பெயர் ''அரியவும் பெரியவும்' என்பது. அது தமிழ்த்தாய்க்கு இன்று பிறந்த சிற்றிடைக் கன்னி எனவும், இவளைத் தமிழ் மக்களிடையே உலாவ வைப்பதற்கு, ஆடை அணிகலன்கள் அணிதல் வேண்டு மெனவும் கேட்டுக் கொண்டார். மும்மொழிப் புலவரான பண்டிதரின் நூலுக்கு, அணிந்துரை எழுதுவது, எமக்கு இயலுவதொன்று என எண்ணினேன்.

ஆயினும், அவருடைய அன்புக் கட்டளையை மறுக்க இயலாது அணிந்துரை எழுத ஒருவாறு மனம் ஒருப்பட் டேன். நூலைப் பிரித்தவுடன் நூலாசிரியரே என்ன இது? ஏன் இது? என்ற கேள்வியை எழுப்பி முகவுரையில் இந்த நூலில் என்ன அடங்கியிருக்கிறது என்பதை விளக்க முயலு கிறார். அஃதாவது, ''பெரியபுராணத்தில் இடம் பெறும் அறுபத்துமூவர்பாலும் புறமுக அன்புநிலை முற்றமுடிய மறைந்தொழிய அகமுக அன்பே முழுமையாக அவர்க ளிடத்தில் விட்டு விளாசி நின்ற விசித்திரம் சுவாரஸ்ய மானது. அதே வேளை அதற்குப் பின்னணியாக அவர்கள் பால் உரம் பெற்றிருந்த ஞானவீறும் அதற்கு முன்னோடி யாக அவர்கள்பால் ததும்பியிருந்த சரியை, கிரியை ஆசார அமைதிகளும் அபாரமானவை'' என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்பது வள்ளுவர் வாய்மொழி. இதற்கு இலக்கியமானோர் பெரிய புராணத்து நாயன்மார்கள். குருலிங்க சங்கம பத்தியில் உறுதியாக நின்ற இவர்கள் 'சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்கள்', 'சர்வ சங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள்', இம்மையிலேயே பரம்பொருளோ டொன்று சேர்ந்த இயல்பினர். இவர்கள் நிலை நின்மலதுரியாதீதம் எனப்படும். இந்நிலையில் இவர்கள் செயல் அனைத்தும் சிவன் செயலே ஆகிவிடும். எதனு லெனில், ''செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப் பையக் கெடுத்தார் பரங்கெட்டார்,'' அஃதாவது தற் போதம் இழந்த நிலையில் தாம் செய்யும் செயலெல்லாம் அரன் பணியே ஆகின்ற நிலை இவர்கள் நிலை. இந்நிலையில் இச்சீவர்களின் பிறவித்துன்பம் நீங்க உடனுக நின்று மற்ற வர்கட்குப் பாதகம் பழி போலத் தோன்றுஞ் செயல்களை இவர்கள் செய்தாலும் தமக்குச் செய்த சிவதர்மமாகவே கொண்டு சிவபிரான் அருள்புரிவார். இவர்களுடைய நிலை பேறு தமக்குக் கிடைக்கவில்லையே என்று மெய்யடியார் ஒருவர் அங்கலாய்க்கிருர்.

**செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசிலர்**
**எய்தற் கரியதனை எய்தினர்கள் — ஐயோநாம்**
**செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்**
**செய்யாமை செய்யாத வாறு.**

பெரியபுராணத்துட் கூறப்படும் அடியவர்கள் ஒவ்வொரு வரும் செய்த தொண்டுகளும், அவர்களுக்கு அதிலிருந்த உறைப்பும், அவர்களுக்கு வெவ்வேருன நிலையில் சிவபிரான் அருள் புரிந்த தன்மைகளும் திருஞானசம்பந்த சுவாமிக ளாலே திருமுகப்பாசுரத்தில்,

**'ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண் பும்**
**கேட்பான் புகில் அளவில்லை'**

எனத் திருவாய்மலர்ந்தருளப் பெற்றுள்ளன. மநுநீதி கண்ட சோழர் அரண்மனையில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை, கன்றை இழந்த பசு ஒன்று அடித்துக் கதறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பசுவின் துயரம் தீர்க்க வழிதெரியாத மன்னன் மந்திரிமாரை ஆலோசனை கேட்க, மந்திரிமார் பிராயச் சித்தத்தால் கன்று நெரித்த பாவத்தைப் போக்கலாம் என ஆலோசனை கூற, அந்தப் பிராயச்சித்தத்தால் பசுவின் துயரம் தீராதென்றும் ''உண்மைநூற் கருத்தின்படி பிராயச் சித்தமென்பது செயற்பழி செய்தவனைச் சேராதிருக்கப் பண்ணு வதாகப் பாவனுசாமர்த்தியத்தாற் புத்தி பண்ணி நடத்தும் சடங்கு முறையான ஒரு தற்காலிக தந்திரம். அது பலன் படுந் தன்மையும், ஆபத்திலகப்பட்டவனுக்குக் கிடைக்கும் முதலுதவி அல்லது ஒத்தி வைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குரியவனுக்குக் கிடைக்கும் சகாயம் அளவினதாகவே அமையும். எவ்வாருனுலும், அது செய்தவனளவில் மட்டுப் படுவதன்றி, செயற்கிலக்காகி வருந்தும் உயிரின் துயருக்கு மாற்று மருந்தாதல் ஒரு போதும் இல்லை. மந்திரிகள் நோக்கில் எப்படியிருந்தாலும் மன்னன் நோக்கில் அது ஒரு பொய்த் தந்திரமளவே'' என்றும் இந்நூலாசிரியர் மன்ன வன் சிந்தனையில் வைத்துக் கூறுவது சிந்திக்கத்தக்கதும், சுவாரஸ்யமானதும் கூட.

இது போலவே திருநாளைப் போவார் சரிதவிளக்கம் கூறுமிடத்தில் சாமுசித்தராய்ப் பிறந்த நந்தனுர் சிதம்பரத் திலேயே முத்தி பெறுவதற்கென்று பிறந்தவரென்றும், பிறப் புச் சார்பான எந்த ஒரு சூழ்நிலையும் அதற்குக் குந்தகம் அல்ல என்றும், குருவருளால் மலநீக்கம் பெற்றுச் சுத்த நிலை உற்றவர்க்கும், கன்மம் ஒழிந்த போதிலும் உடல் சம்பந்தியாய் இருக்கும்வரை, 'இன்னல் தரும் இழிபிறவி இது தடை' என்ற உணர்ச்சி இருக்கும் என்றும், நந்தனுர் இறைவன் கட்டளைப்படி தீயில்மூழ்கி இவ்வுணர்வு நீங்கி அந்தணவடிவத்தோடு எழுந்து நடராஜப்பெருமான் திரு வடிகளை அடைந்தார் என்றும் அமைவன போன்ற சைவ சித்தாந்த விளக்கங்கள், சைவசமயிகள் அனைவரும் படித்துச் சிந்திக்க வேண்டியவை. இவைபோன்ற பல விளக்கங்கள், இந்நூலில் ஆங்காங்கு நிறைய உண்டு. கணு அரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல் நீக்கித் துண்டங்களாக்கி வைக்கப்பட்டிருக்கும் கருப்பந் துண்டுகளில் எப்பகுதி இனிமையானது என்று சொல்ல யாரால் இயலும்?

பெரிய புராணத்தைப் படித்து உணரவிரும்புவோர்க்கும், அவ்வடியார்களுடைய அநுபூதி நிலையை உள்ளபடி அறிந்து அனுபவிக்க விரும்புவோர்க்கும் உபயோகமாகும் படி பெரியபுராணத்து நாயன்மார் பதின்மர், மனுநீதி கண்ட சோழர் ஆகிய இப்பதினொரு சிவானுபூதிச் செல்வர்களின் வாழ்க்கைத்திறத்தினை விளக்கும் வகையில் பண்டிதர் அவர்களாலே எழுதப்பட்ட சிவானுபூதி விளக்கம் நிறைந்த 'அரியவும் பெரியவும்' என்ற இந்த நூல் உண்மைச் சைவர்களுக்குப் பெரியபுராண உண்மைக் கருத்துக்கள் பலவற்றையும் விளங்கச் செய்யும் மணிவிளக்காகப் பிரகாசிக்க வேண்டுமென்றும், ஏனைய நாயன்மார்களுடைய வரலாறுகளுக்கும் இவ்வாருன அநுபூதி விளக்கவுரைகள் எழுதிச் சைவ உலகிற்குப் பணிபுரிய இந்நூலாசிரியர்க்கு நல்ல திடகாத்திரமான தேகம், அறிவாற்றல், ஆயுள் இவைகள் மேன்மேலும் வளர அருள்புரியும்வண்ணமும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| என்ன இது? ஏன் இது? | 1 |
| அம்பலத்தாடுவான் | 11 |
| 'தருமந்தன் வழிச்செல்கை கடன்' | 18 |
| 'இனிப்பெறும் பேறென்றில்லார்' | 29 |
| 'தபோதனர் தீரவே பசித்தார் செய்வதென்?' | 35 |
| 'பொய்தரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனான்' | 42 |
| 'இன்றெனக்கையன் செய்தது யார் செய்ய வல்லார்?' | 49 |
| 'சிறிய என் பெரும்பிழை பொறுத்தருள் செய்வீர்' | 56 |
| 'அன்பு பிழம்பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ!' | 65 |
| 'இங்கிது தன்னாற்போதாது என்னையும்கொல்லவேண்டும்' | 75 |
| 'ஆ! ஆ! என் குற்றேவல் அழிந்தவா!' | 84 |
| 'வென்றவர்தந் திருப்பெயரோ வேறொரு பேர்' | 91 |
| 'வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்' | 100 |
| விஷய சூசிகை | 109 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௬

# என்ன இது? ஏன் இது?

அன்பு என்றதுமே நமக்கு மிகவும் பரிச்சயப்பட்டுப் போன ஒன்று அது என்ற நினைவு எவர்க்கும் எழுதல் இயல்பு. அது ஒன்றும் சும்மாவல்ல; உண்மையாகவேதான் உலகில் எந்த ஒரு மனிதன்தான் அன்பில்லாதவனுயிருக்கின்ருன்? எந்த ஒரு பிராணிதான் அன்பற்றதாயிருக்கிறது? துஷ்டனுக்குக்கூடத் தன் பெண்டு பிள்ளைகளிடத்தில் அன்பு. பாம்புக்குக்கூடத் தன் குட்டியில் அன்பு. ஏன் அதிகம்? உடலொடு உயிர்க்கு வந்த சம்பந்தமே அன்பொடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயன்தான் என்றுவிட்டார் திருவள்ளுவர்.

> "அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
> கென்போ டியைந்த தொடர்பு."
>
> — திருக்குறள்.

உடலிலிருந்துகொண்டு அன்போடு பழகுதற்கென உடலில் வந்ததாகிய உயிர் முதலில் உடலையே அன்பு செய்கின்றது. தோற்புரையில் முள் தைக்கவே உயிருக்கு நொந்து போகிறது. அவ்வளவுக்கு, உடல்வேறு தான் வேறென்றில்லாது பிரிப்பற நின்றுணரும் அத்துவித அன்பு அது. மேல், படிப்படியாக, உடலுயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது எதுவெதுவோ அதுவது ஒவ்வொன்றிலும் இந்த அன்பு பற்றிப் பற்றிப் படரும் பாங்கினதாயிருக்கின்றது. தாய், தந்தை, சகோதரர், உற்ருர், பெற்ருர், நாடு, மொழி, தேசம் பற்றி நிகழும் அன்பு ஒவ்வொன்றும் இத்தன்மையதேயாம்.

உயிர் உணர்வுமயமானது. உணர்தல் மயமாகத்தான் உயிரிடத்தில் அறிவும் நிகழ்கிறது. 'To say that experinece is cognitive is correct'—A. I. Iyer of Oxford. அங்ஙனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியும் பொருள் ஒவ்வொன்றிலும் அதுவதுவாய் — அது வதன் பண்பியல்புகளின் மயமாய் — அழுந்தி நின்று அறிதல் உயிர்ப் பண்பு. Experience - அநுபவம்; அநுபவம் - அழுந்தி யறிதல். இங்ஙனம் அழுந்தியறியும் வஸ்துக்களில், தான் இன் பங்காணுந் துறைதோறும் உயிரின் உணர்வு உருகிக் கசியுந் தன்மை உளதாகும். இத்தகைய உருக்கக் கசிவே அன்பின் பண்பாவது. அது குளிருந்தன்மையது; ஆதலால் ஈரம்; ஒட்டுந் தன்மையதாதலால் பசை; உள்ளெல்லாம் உளையவைத்து எழுதலாற் பரிவு; கட்டுந்தன்மையது ஆதலால் பாசம்; உயிரைத் தளிர்க்க வைப்பதாதலால் அமிர்தம்.

உலக போகங்களே தஞ்சமென்றிருக்கும் நமது லௌகீக வாழ்வு நிலையில் இந்த அன்பு, தானல்லாத புறப்பொருள்க ளாகும் உலக விஷயங்களையே பற்றி வெளிமுகப் பாய்ச்ச லாகப் போய்க்கொண்டிருக்கையில் அது புறமுக அன்பு எனவும் இந்தநிலை எதிர்மாறாகித் தானாகிய உயிரையும் தன்னுயிர்க்குயிராகிய சிவத்தையும் நாடி உள்முகப் பாய்ச்ச லாகப் பிரவர்த்தித்துக்கொண்டிருக்கையில் அகமுக அன்பு எனவும் வகை வேறுபடும்.

இந்த அகமுக அன்பு நிலைக்குக் குந்தகமாக இருவகை அன்பு நிலைகள் உள எனவும் முன்னோடியாகவுள்ள அவ்விரண் டனையும் உருக்கிக் கழித்த பின்னரே அகமுக அன்புநிலை லபிக்கும் எனவும் திருமூலர் தெரிவிப்பர்.

''என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்.''

என்னன்பு 'நான்' என்னும் உணர்வொடு கலந்த பசுத் துவ அன்பு. முன் அன்பு—முன்னெல்லாம் உடலும் உடல் சார்ந்தனவுமான பொருள்களில் நிகழ்ந்த அன்பாகிய பாச அன்பு.

புறமுக அன்பு பெரும்பாலும் இன்பச் சாட்டில் துன்பக் கலப்பும் உள்ளதாய் இருத்தல் ஒரு காரணம். நின்று நிலைக்குங் கால அளவிலும் திருப்தி தருந் தன்மையளவிலும் சிறிய தாய் இருத்தல் ஒரு காரணம். காலாகாலமாக உயிர் மீள மீள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காரணங்களுக்குள்ளாகிக் களைத்த களைப்பினுல் நேரும் அந்தரங்க அலுப்பு ஒரு காரணம். அந்நிலையில், இதைவிட நல்லதாய், துன்பக் கலப்பற்றதாய் நீடுநின்று நிலைப்பதாய் நிறைவுள்ளதாய் உள்ள அமரத்துவ அன்பொன்றில்லையா! என ஆராயும் மறித்துணர்வு ஒரு காரணம். ஆக இத்தியாதி காரணங்களால், ஒருவரின் சிவ புண்ணிய வசமாக, புறப்பொருள்களை நாடி வெளிமுகப்பாய்ச்சலாயிருந்த புறமுக நாட்டம் முற்றுகக் கெட்டொழிந்து உயிராகிய தன்னையும் தன் தலைவனுகிய சிவனையும் நாடும் நிலையொன்று வந்தேயாகும். அந்நிலையில்தான் அது அகமுக அன்பாகும். அகக் கண்ணுல் தன்னைக் காணும் அன்பு அது. அது ஆனந்தமானது. 'அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்' —திருமூலர். நிலைத்த நிறைவுள்ள இன்பம் அதன் பலனுகும். அதுவே சிவனடியார் அன்பியல். 'அன்பினுல் இன்ப மார்வார்' எனச் சேக்கிழார் குறிப்பிடுவது இவ்வன்பையும் இதனுற் பயன் கொள்வோரையுமே.

சைவ சித்தாந்த ரீதியாக அதன் பரிபாஷையிற் குறிப்பிடுவதானுல், உயிரிடத்தில் நிகழும் ஞானநிலை உணர்வு மாற்றங்களான 'ஆன்ம சுத்தி' யும் 'சிவதரிசன'முஞ் சித்தியாகும் அந்நிலையில் லபிக்கும் உணர்வுருக்கமே அன்பின் யதார்த்த நிலையாகும். அந்தநிலை சம்பவிப்பதற்கு முன் முன் பல வேறு நிலைகளில் நிகழ்ந்துவந்த உணர்வுருக்கங்களுக்கும் 'அன்பு' என்றே பெயர். ஆனுல், கிணறு வெட்டும்போது மண்படையில் வந்த ஊற்றுமல்ல, களிமண்படையில் வந்த ஊற்றுமல்ல, மக்கிப் படையில் வந்த ஊற்றுமல்ல, வைரக் கற்படையில் வந்த ஊற்றே நிலையான ஊற்று, மெய்யூற்று ஆதல்போல மேற்குறித்தவாறுன அகமுக அன்பே நிலையான அன்பு, மெய்யன்பு எனப்படுதற்குரியதாகும்.

புறமுக அன்பு முழுவதும் நிலையற்ற அநுபவங்களை நிலையற்ற சாதனங்களால் அடையும் நிலையற்ற அன்பாதலால் அது பொய்யன்பு. அசத்தை அசத்தாலறியும் அசத்தான அன்பு என்பது இதற்குச் சைவசித்தாந்த பரிபாஷை. அதற்கெதிர், நிலைபேறுள்ள அநுபவத்தை நிலையான சாதனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் அடையும் நிலையான அன்பு ஆதலால் அகமுக அன்பு மெய்யன்பு. சத்தைச் சத்தாலறியும் சத்தான அன்பு அது என்னும் சைவசித்தாந்தம்.

பொய்யன்புக்குச் சாதனம் நிலையற்ற கருவியாகிய மனம். மெய்யன்புக்குச் சாதனம் நிலையுள்ள கருவியாகிய திருவருள். பொய்யன்புக்குப் பலன் உலக விஷயங்களைப்பற்றி நீர்க்குமிழி போல் தோன்றி யழிவதாகிய சிற்றின்பம். மெய்யன்புக்குப் பலன் சிவத்தைப் பற்றிப் பேராமற் பிரியாமல் நிலைத்து நிற்பதாகிய பேரின்பம். பொய்யன்புக்குச் சிவம் புலப்படுதல் ஒருபோதுமில்லை. மெய்யன்புக்குச் சிவமன்றி வேறெதுவும் புலப்படுதலில்லை. பொய்யன்பு அடைதற்கெளியது. ஆனல் நிலைப்பரியது. அதற்கெதிர், மெய்யன்பு அடைதற் கரியது. ஆனல் நிலைப்பெளியது. 'அருமையில் எளிய அழகே போற்றி'—திருவாசகம்.

இங்ஙனமாய அன்பின் இருவேறு நிலைகளையுங் குறித்துத் திருமூலர் தரும் உயர்மட்ட விளக்கமும் ஒன்றுண்டு. அதனைத் தெளிய விளங்குதலில் ஏற்படுஞ் சிரமமுமொன்றுண்டு. முதலில் பொய்யன்பு நிலையாளரை நோக்குகிறர் திருமூலர். அவரைப் பொறுத்தமட்டில், இவர்கள் நிலை அவருக்கு ஏதோ விபரீதமாகப்படுகிறது. அவர்களை அறிவிலார் என்று மதிப்பிடுகிறர். தம் மதிப்பீட்டுக்குக் காரணமுஞ் சொல்கிறர். அவர்கள் 'அன்புஞ் சிவமும் இரண்டென்கிறர்கள்.' அதுவே தானும் காரணம். தமக்கு வேருன உலக விஷயங்களைத் தாம் அன்பு செய்கிற பாணியிலேயே அவர்கள் தமக்கு வேருக இருக்கும் ஒன்ருகச் சிவனையும் பாவித்துக்கொண்டு அன்பு செய்வதாகச் சொல்கிறர்கள் என்பது அவர் குறிப்பு. அதனல், 'அன்பே சிவம்' என்ற அருமை அவர் எவர்க்கும் விளங்காது என்றுங் கூறிவிடுகிறர். இக்கட்டத்தில் இவருடைய இக்கூற்றைத் தெளிந்து கொள்வதில் சிரமமொன்று இருக்கத்தான் செய்கிறது. என்னை?

எல்லோரு மறியக்கூடுமளவுக்கு, 'அன்பு' என்பது உயிரில் நிகழும் உருக்கப் பண்பாகிய ஒருகுணம். உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் தெரிவிக்குமளவுக்கு, 'சிவம்' என்பது அந்த அன்புக்கு விஷயமாகும் ஒரு திவ்வியப் பொருள். அங்ஙன மாக, 'அதுவே இது' என்ற வாய்பாட்டில் 'அன்பே சிவம்' என்பதானுல் இது என்ன? என்பது கேள்வி.

சர்வ மயக்க நிவாரண சஞ்சீவினி சைவசித்தாந்தம். சைவசித்தாந்தத்திலேயே அக்கேள்விக்குத் திருப்தியான விடை உண்டு.

சிவத்துக்கு அதன் சொரூபநிலையில் தனக்கென வடி வொன்றில்லே. அதனுல், மெய்யன்பாளர்க்குத் தன துண்மை நிலையை உணர்த்தவேண்டிச் சிவம் ஒரு அற்புத நிலையை எய்துகிறது. எங்ஙனம்? அன்பரிடத்தில் நிகழும் அன்பையே தனக்கிடமாகக் கொண்டு அந்த அன்பின் மய மாகவே அது தானிருந்து அவர்க்குத் தன்னை உணர்த்தி விடுகிறது. அந்நிலையில் அதனை உணரும் மெய்யன்பரொரு வர்க்கு அன்பு வேறு சிவம் வேறல்ல. அன்பை விட்டுச் சிவத்தையோ சிவத்தைவிட்டு அன்பையோ அவர் காணும் நிலையில்லே. அன்பினிற் கண்டது கண்ட அளவே அன்றி அதற்கு அப்பாலுமில்லே; இப்பாலுமில்லே. "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்ற திருவாசக உண்மை இங்கு எழுந்து பேசல் காணலாம்.

இங்ஙனமாகிய அன்பு நிலையில் நிற்கும் மெய்யன்பர்க்கு அவரைப் பொறுத்தமட்டில் அன்புஞ் சிவமும் அத்துவித பாவத்தால் ஒன்று. 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே' என்ற மணிவாசக உண்மை மறுவலும் எழுந்து பேசுகிற சித்திரம் இங்கே கருதத் தகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்காளத்தி தரிசனம் பண்ணும்போது சுவாமிகள் அகத்தில் அன்பின் மயமாய்ச் சிவம் பிரகாசிக்க, புறத்தில் அவர் முன்னிலேயில், சந்நிதியில் நின்றுகொண்டிருக்கும் கண்ணப்பநாயனுர் ஊடாகக் காளத்தியப்பர் பிரகாசிக்க அகத்திலும் புறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் ஒன்ருகச் சுவாமிகளுக்கு விளைந்த தரிசன இன்பத்தின் மதுகையைச் சேக்கிழார் எழுதிக்காட்டும்,

"உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை
உருவினையும் அவ்வுள்ளத் துள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்கிப்
பள்ளத்தின் இழிபுனற்போற் பரந்து செல்ல"

என்ற உயிரோவியம் திருமூலரின் "அன்பே சிவமாவது" என்றதன் உண்மை விளக்கத்தையே சித்திரிப்பதாகும்.

பெரியபுராணம் அன்புநூல் என்னும்போது அது கொண்டு காட்டும் அன்பு முற்றிலும் அகமுக அன்பாகிய இம்மெய்யன்பேயாதல் ஒருதலை. பெரிய புராணம் கூறுவது அன்பு நெறி என்னும்போது அது முற்றிலும் இந்த மெய் யன்பு நெறியே என்றலும் அங்ஙனமே. அங்ஙனமாகவும் அன்புநெறி ஒன்றே போதும், அறிவாசார நெறி அநாவசியம் எனச் சிலபோது நம்முள்ளம் பேதலித்தலுந் தப்பாது. அது தவறு. அன்பு என்பதனை, வரிசை நோக்கால் நோக்காது பொது நோக்கால் நோக்குதலால் நேரும் இத்தகைய பேத லிப்புக்குள்ளாகாதிருத்தல் அவசியத்தின் மேல் அவசியம். ஞான ஒழுக்கநிலையாகிய அறிவாசார நெறியின் பின்னணி யிலேயே இத்தகைய அகமுக அன்பு நெறி லயங் கொண் டிருக்கும் உண்மையையும் அறிதல் வேண்டும்.

பெரியபுராணத்தில் இடம்பெறும் அறுபத்துமூவர் பாலும் புறமுக அன்புநிலை முற்றமுடிய மறைந்தொழிய அகமுக அன்பே முழுமையாக அவர்களிடத்தில் விட்டு விளாசி நின்ற விசித்திரம் சுவாரஸ்யமானது. அதேவேளை அதற்குப் பின்னணியாக அவர்கள்பால் உரம்பெற்றிருந்த ஞானவீறும் அதற்கு முன்னோடியாக அவர்கள்பால் ததும்பியிருந்த சரியை கிரியை ஆசார அமைதிகளும் அபாரமானவை. குறித்த இப்பிறப்பில் சிலரிடம் வெளிப்படையில் இருந்த தாக இல்லாவிடினும் முற்பிறப்பில் அவர்க்கு அச்சரியை கிரியை விளைவுகள் நிரம்ப இருந்தமையையுஞ் சேக்கிழார் சுட்டியுணர்த்தாது விடுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உதாரணத்தில் வைத்து இதனை அறிதல் சாலும். ''அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று—படியிலாப் பரிவு தாஞேர் படிவமாம் பரிசு தோன்ற ———'' என்று கண்ணப்பநாயஞர் காளத்தியப்பரைக் கண்ட முதல் அவசரத்திற் கண்ணப்பர் நின்ற நிலையைக் காட்டுவர் சேக்கிழார். காளத்தியாரைக் கண்டது கண்ட மாத்திரத்தே கண்ணப்பர் ஒரே பரிவுமயமாய் விடுகின் ருர். பரிவுமோ படியிலாப் பரிவு — ஈடிணையற்ற பரிவு. இப்பரிவுக்குப் பின்னணியாய் நின்றதென்ன ? 'அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார்' என்ற உணர்வு. சிவத் தைக் கையும் மெய்யுமாய்க் கண்டுவிட்டதோர் தெளிவுணர்வு. அப்பர் சுவாமிகள், 'தேடிக் கண்டுகொண்டேன்' என்ற வகை யினதான ஒருணர்வு. சித்தாந்தத்தில் மெய்யுணர்வு எனப் படுவது அதுவே. அதுவே ஞானம். கண்ணப்பர்க்கு விளைந்த படியிலாப் பரிவு அந்த ஞானத்தின் பின்னணியிலேயே விளைந்திருப்பதைச் சேக்கிழார் காட்டிய விதம் இவ்விதம்.

இனி, இந்நிலையில் விளையும் இந்த ஞானமோ அன்போ அகஸ்மாத்தாய் ஏற்பட்டதன்று. அதற்கு முன்னீடாக எவ் வளவோ சரியை கிரியை விளைவுகள் அவர்பால் இருந்துள்ளன. இப்பிறப்பில் இருந்ததாகச் சரித்திரம் இல்லாவிட்டாலும் முற்பிறப்பில் விளைந்தனவாக அவை நிறைய இருந்தன. 'முன்புசெய் தவத்தி னீட்டம் முடிவிலா இன்ப மான, அன்பினை எடுத்துக் காட்ட' என இதனையுஞ் சேக்கிழார் இனிது புலப்படுத்தியிருத்தல் கண்கூடு. சித்தாந்த பாணியில் சரியை கிரியைகள், ஏன் யோகமுங்கூட, தவம் என்றே பெயர் பெறும். 'தவ முயல்வோர் மலர் பறிப்பத் தாழ்ந்து விடு கொம்புதைப்ப'—என்பது சம்பந்தசுவாமிகள் தேவாரம். 'இறப்பில் தவத்தால் மருவுவனும் ஞானத்தை வந்து'— என்பது சிவஞானபோதம்.

அறுபத்து மூவரில் ஒவ்வொருவரும் அன்பியலிலேயே நின்றவர்கள். அவர்கள் அன்பியற் செய்திகளை அறிதல் மட்டில் நாம் அமைதியுறுதற்கில்லை. அந்த அன்பியல் களுக்கு நிலைக்களனுய் இருந்த பாச வைராக்கியம், சிவத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம், தன்னிழப்பு, தொண்டுநிலை, சிவன் குறிப்பே தம் குறிப்பாய் நிற்கும் விவேகம் போன்ற அதிமனித, அமாநுஷிக, அதிசயப் பண்புகள் அவரவரிடத்தில் எந்த ரீதியில் எந்த எல்லைக்கோட்டில் நின்றன என மனமொருங்கி அலசிக் காணுமளவில்தான் விஷயம் அதிகம் இருப்பதாகும். சைவசித்தாந்த நாவுக்குச் சுவை தரும் திவ்விய பக்ஷணங் களாக அவற்றை ஏற்று ரசிக்கும் பலப்பேறு கைகூடாத வரை நாம் பெரியபுராணத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாக்கியம் பெறுதற்கில்லை எனலாம்.

இயற்பகை நாயனாரின் தாம்பத்தியக் கண்ணோட்டப் பரிவு நிலைக்கும் குங்குலியக்கலய நாயனாரின் புத்திரவாத் சல்யத்துக்கும் கோட்புலி நாயனாரின் பால் குடிக் குழந்தைப் பரிவுக்குங் கூட வேட்டு வைத்திருக்கின்றது அவரவர்களின் பாசவைராக்கியம். 'செய்த பிழைக்குத் தாமே நாம் பொறுப்பு. செய்யாத பிழைக்கு நாம் உத்தரவாதியல்லவே' என்ற யதார்த்தவாதத்தைத் தூக்கியெறிந்துவிட்டது அமர்நீதி நாயனாரின் தொண்டுநிலை. மழைவிடாததற்கு நானென் செய்வது என்ற விவேகப் பொறுதியை அடித்துடைத்து விட்டிருக்கின்றது திருக்குறிப்புத் தொண்டரின், சிவன் குறிப்பே தன் குறிப்பாய் நிற்குந் தொழும்புறுதி. திரு நாவுக்கரசு என்ற பெயரை 'வேறொருவர் பேர்' என்ற தற்காக அப்பர் சுவாமிகள் மேல் அப்பூதியாரை எரிந்து விழ வைக்கின்றது, அந்த அப்பூதியார் ஆளைக் காணு முன் னமே தன்னைத் திருநாவுக்கரசருக்கு ஒப்புக் கொடுத்துவிட் டிருந்த அர்ப்பண வடிவிலான ஆன்ம வீறு.

'பொய்தரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனான்' என்பதில், 'பார்க்கிலன் போனான்' என்பது இயற்பகையாரின் பாச வைராக்கிய நிலையைச் சேக்கிழார் சுட்டிய சுட்டு. 'பேறுமற் றிதன்மே லுண்டோ பெருப்பேறு பெற்று வைத்து வேறினிக் கொள்வதென்' என்பதில் 'வேறினிக் கொள்வதென்' என்பது குங்குலியக்கலயநாயனாரின் பாசவைராக்கியத்தைச் சேக்கிழார் தொட்டுக் காட்டிய துறை, செழுந்தவர்தந் திரு மேனி குளிர்காணுந் தீங்கிழைத்த தொழும்பனேற் கினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிதுவே செயல்' என்பதில், 'தொழும்பனேன்' என்பது ஆண்டான் குறிப்பே தன்குறிப்பாக நிற்கும் அடியானாகிய திருக்குறிப்புத் தொண்டரின் ஆத்ம சுபாவத்துக்குச் சேக்கிழார் கொடுத்த சொல்லுருவம். இப்படி இப்படிப் பெரிய புராணம் முழுமையிலும் கிடப்பவை அநேகம். இத்தகையன ஒவ்வொன்றும் பாணினி சூத்திரங்கள் போல்பவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூத்திரமாகவே கொண்டு வியாக்கியானித்து விமர்சித்துச் சிந்தித்துத் தெளிந்து சீரிக்க வேண்டுந் தெய்விகப் புதிர்கள்.

இவ்வகையில் இவற்றின்பாற் சிந்தை செலுத்துவோர், சாமானியமாக நம்மிடையிற் பேசிக் கொள்ளப்படுவதுபோல அன்புநெறி அறிவுநெறி என இருவேறுநெறி கொள்ளற் கிடமில்லை. உள்ளது ஒருநெறியே; அது ஞானமாய் விளைந்து பக்தியாய்க் கனியும் இருதன்மைகளுடையதே யன்றித் தனித் தனி இரண்டல்ல என்ற உண்மையையும் உளங் கொள்ளா தொழியார். அத்துடன், கல்வி கேள்விகளால் வரும் உணர்ச் சியுடன் உலகத்தோடொட்ப நிற்றலைக் குறிப்பதாயுள்ள அறிவு என்ற பதம் திருவருள் விளக்கத்தால் தலைவனைச் சிவனையும் அடியனாகத் தன்னையும் உணரும் நிலையைக் குறிப்பதாக உள்ள ஞானத்துக்குப் பிரதிபதமாக உபயோகிக் கப்படலாந் தகுதியற்றதென்பதையும் இலகுவிற் கண்டு கொள்வர்.

உண்மை நோக்கில், அன்பாய்க் கனிந்து கனிந்துருகும் நிலையே ஞானத்தின் யதார்த்தநிலை. 'ஞானம் ஈசன்பா லன்பே என்றனர் ஞானமுண்டார்' என்ற சேக்கிழார் வாக்கு இவ்வுண்மையையே பிரதிபலிப்பதாகும். அன்புநூல் என்று பெரியபுராணத்தை அணுகுவோர் அதன் நிறை பலனைப் பெறுதற்கு ஞானநூல்களாகிய சைவசித்தாந்த சாஸ்திரங்களின் விரிவு விளக்கங்களை வேண்டுமட்டும் பெற் றிருக்க வேண்டுவதன் அவசியமும் இதில் வைத்தே உணர் தற் பாலதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், சிவனடியார் திருவேடத்தையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே கண்டு வழிபட விதித்த சூத்திரம் சிவஞானபோதத்திற் பன்னிரண்டாஞ் சூத்திரம். அதுவே பொருளாக, அவ்விலக்கணத்துக் கிலக்கியமாக அமைந்த பெரியபுராணம் திருமுறை நிரலிற் பன்னிரண்டாந் திருமுறை. அன்றியும், பாசநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய ஞானத்தை முடிந்த முடிபாய்த் தெரிவிக்கும் பதிஞேராஞ் சூத்திரம் "அயரா அன்பின் அரன்கழல் செலும்" என்றதன்மூலம், ஞானத்தின் பின்விளைவு யாதாகுமெனக் கையோடே காட்டியிருப்பதும் கண்கூடு. எனவே, பெரிய புராணத் திருத்தொண்டர்பால் தழைவுற்றிருந்த அன்பியல் முழுவதும் ஞானத்தின் வழித்தாகிய அன்பியல்பே என்பது இவ்வகையாலும் உறுதி பெறுவதாகின்றது. பதிஞேராஞ் சூத்திரப் பொருள் நிறைவில் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருள். அதாவது ஞானத்தின் நிறைவில் அன்பு.

பெரியபுராணச் சிந்தனைகள் என்னும் இந்நூல் மேற்போந்த இவ்வகையான விசாரங்கள் விளக்கங்களின் விளைவாகவே எழுந்ததாகும். இவை பற்றிய மெய்யுணர்வைத் தூண்டி இச் சிறுநூல் சைவ உலகிற்குப் பயன்பட அருளுமாறு திருவருளை வேண்டி அமைகின்றேம்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலத்தாடுவான்

'அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே — அவர் — ஆட்டங் கண்டு நாட்டங் கொள்வோம் பாங்கிமாரே'. எவரோ ஒரு திவ்விய புருஷர் நாவில் என்றோ ஒலித்த ஒரு திவ்விய துவனி இவ்வாறிசைக்கின்றது. ஆம்! அம்பலத்திலாடுகின்றார்; ஆடிக்கொண்டேயிருக்கின்றார்; அன்றும் இன்றும் என்றும் — அசைத்த அசைவு சலிக்காமல், எடுத்த கால் பதிக்காமல் ஆடிக்கொண்டேயிருக்கின்றார் அம்பலவாணர். அவர் ஆட்டத்திலேயே லயங்கொண்டிருக்கின்றது அகிலமும். பிரபஞ்ச நடனம் என்ற செட்டான சொற்றொடரிலே சிக்கன பரமாக அடக்கி வைத்து அவர் ஆட்டத்தின் பெருமையெல்லாம் ஒருங்கே போற்றப்பட்டு வருகிறது. 'கொஸ்மிக் டான்ஸ்' என்ற ஆங்கில வாணி மூலம் இது அகில உலகும் அறிந்த இரகசியமாயும் போயிருக்கிறது. அவருடைய ஆட்டமும் அகிலத்தையும் அளாவியது. இந்த ஆங்கில வாணியும் அகிலம் அளாவியதாயிற்று.

அண்டமும் பிண்டமுமாய் விரவியுள்ள பிரபஞ்சம் முழுவதும் ஒரே அசைவு மயமாயிருப்பது ஒட்டு மொத்தமான ஒருண்மை. இன்று நேற்று அறிய வந்ததல்ல, பண்டைய பழம் பேருண்மை. இந்த உண்மையே இந்த உலகத்துக்கு 'ஜகத்' (ஓயாமல் அசைந்து கொண்டிருப்பது) என்ற பெயரை வரத்தியிருக்கிறதென்றால் பிறகு பேசுவானேன்!

'இந்தப் பூமி ஏன் சுழன்றுகொண்டிருக்கின்றது' எனக் கேட்டால் சுழலாதிருக்கும் பட்சத்தில் தான் நிலைக்க முடியாதிருக்கும் நிர்ப்பந்தத்தினால்தான் சுழன்றுகொண்டிருக்கின்றது என்றால் மட்டுமே அது சரியான விடை என்கிறார்கள். பூமி மட்டுமென்ன? பூமியைச் சார்ந்தசையும் மற்றுங் கிரகங்களுந்தான், கிரகநாயகன் என்று கிளந்தோதப்படும் சூரியனுந்தான், சூரியனுக்கும் மேல் 350 ஒளி வருடங்களுக்கு அப்பால் 300 சூரியனைக் கொள்ளுமளவு பருமனும், ஒரு லட்சமளவு சூரியர்களின் வெப்பத்தைத் தரும் உஷ்ண சக்தியும் உள்ளதாக இருக்கும் திருவாதிரை நக்ஷத்திரமுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், திருவாதிரையையே ஒரு நக்ஷத்திரக் குஞ்சாக்கி விடுமளவுக்கு மிகப் பெரியனவாய் அதற்குமப்பால் நூற்றுக் கணக்கான ஒளி வருடங்களுக்கு மேல் உள்ள 'அன்ராறீஸ்', 'எப்சிலன்' ஆதியனவுந்தான் சுழலாத பட்சத்தில் தாம் நிலைக்கமுடியாத அதே நிர்ப்பந்தத்தினுலேயே சுழன்று கொண்டிருக்கின்றன. எல்லாம் ஒரே அசைவுமயம்.

இவ்வுலகில் இருந்தவை, இருக்கின்றவை, இருக்கப் போபவை; நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போபவை; வெளிமுகத்திலும் உள்முகத்திலும் உள்ளவை; தூலத்திலுஞ் சூக்குமத்திலுந் தங்கியுள்ளவை அனைத்தும் ஒரே மூலசக்தி யின் சம்பந்தமுள்ளவை. விஞ்ஞான ஆய்வின் அதிநுணுக்க மான தரிசனத்தின்படி அது — அம்மூலசக்தி — அணுவாயே இருக்கும். அதற்கு மேலாக எதுவுஞ் சொல்லக் கூடியதா யில்லை, என்ற அபிப்பிராயம் பொதுவாக விஞ்ஞான ஆய் வாளரிடையே இருப்பதாகத் தெரிகிறது. 'இங்கு நாமறிய உள்ளனவெல்லாம் உருவெளித் தோற்றங்கள் மாத்திரமே. இத்தோற்றங்கள் அனைத்தினுக்கும் உள்ளீடாகவுள்ள அணு வொன்றே உண்மை எனலாம்' என்ற அபிப்பிராயம் 'டெமோகிறிரஸ்' என்பவரின் அணு ஆய்வுக் கொள்கையின் சார்பாகக் கூறப்படுகிறது. இவர் கருத்தின்படி உலகு முழு வதும் அணு ஆதாரத்திலுள்ளது என ஆருங் கருதற்கிட னுண்டு.

மேலும், பிளக்கப்படும் அணுத்துகள்கள் நுண்ணிய ஆய்வு கருவிகளுக்குக்கூடத் தோன்ருதிருந்துகொண்டே தம் கதிர்க்கற்றைகளின் மூலம் புலப்படுத்திக் கொண்டிருக்கும் அதிவேக அதிசய ஆட்டச் சிறப்பை 'பபிள் சேம்பர்' என்ற தமது அணு ஆராய்ச்சிப் பட்டறையில் வைத்து நுண்ணிய படக்கருவிகள் மூலம் கண்டு கண்டு பிரமித்து, 'இவ்வாட்ட இயல்பைச் சரியாகச் சொல்வதாயின், அணுத்துகள்கள் ஆடல் புரிகின்றன என்று சொல்லுமளவில் நில்லாது அத் துகள்கள் தாமே ஆடலாயிருக்கின்றன என்றுஞ் சொல்ல வேண்டியிருக்கின்றது' என்கிருர்களாம் இன்றைய அணு விஞ்ஞானிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல், இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னமே, 1886 அளவில், 'லாப்லேஸ்' என்ற மேதாவி, இங்கு தோற்றங்கள் என்று கருதப்படுவனவற்றுக்கெல்லாம் உயிர்ப்பு அளித்துக் கொண்டும், சகலவகை இயக்கங்களையும் ஏக காலத்தில் ஒருங்கே தானுக அறிந்துகொண்டும், இறந்தகாலம் எதிர்காலம் இரண்டினையும் நிகழ்காலத்திலேயே வைத்துக் கண்டுகொண்டும் இருக்கக்கூடிய உணர்வு மயமான சேதன வஸ்து ஒன்று எல்லாவற்றுக்கும் மூலாதாரமாக இருந்தேயாக வேண்டும்' எனக் கூறிவைத்த கருத்தும் உண்டு. இக் கருத்து 'அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்' என ஔவை மூதாட்டியார் கூறும் மெய்ஞ்ஞான உண்மைக்கு விஞ்ஞானங் கைதருமளவுக்கு விசேடமாக அமைகின்றது. ''அசேதனம் ஜகத் விப்ரா சேதன ப்ரேரணம் விநா'' — பௌஷ்கரம். ஒரு சேதன வஸ்துவினுற் செலுத்தப்படாவிடில் பிரபஞ்சம் அசைவற்று அசேதனமாயே கிடக்கும்.

சடவஸ்து வேறு, சேதனவஸ்து வேறு; அசையும் ஆற்றல் வேறு, அசைவிக்கும் ஆற்றல் வேறு; அசையுந்தன்மையெல்லாம் சடவஸ்துக்களின் பேரில், அசைவிக்குந் தன்மையெல்லாம் சேதன வஸ்துக்களின் பேரில்தான் இருக்க முடியும். அணுக்களும் சடவஸ்துக்களே. ஆதலின் அவற்றை அசைக்கும் சேதனவஸ்து அவற்றுக்கு வேறுக இருந்தேயாக வேண்டும் என்ற விளக்கத்தின் பிரகாரம் அசையுஞ் சடவஸ்துவாகிய பிரபஞ்சத்துக்கு மூலமாக அசைவிக்குஞ் சேதன வஸ்து உண்டு என்ற உண்மையை ஒத்துக் கொள்வதை விட மறுப்பது கஷ்டம் என்றநிலை விஞ்ஞான ரீதியாகவும் உருவாகி வருவதாகத் தெரிகிறது. இங்ஙனம் வரவர விஞ்ஞானம் சமயஞானத்துக்குப் பணிப்பெண்ணுக (hand maid) முன்னேறி வரும் இப்பாங்கு வரவேற்கத் தக்கதே; வாழ்க விஞ்ஞானம்!

இவ்வகையில், ஆடுவதனைத்தையும் லயந்தவருமல் ஆட்டிக் கொண்டே, அதே சமயம் சற்றுஞ் சலனமற்று ஸ்திரமான ஒன்றிலேயே தாம் இருந்துலாவுவதாக ஒவ்வொருவருக்கும் ஒருவித சாமான்ய அமைதி புலப்படுமளவுக்கு இப் பிரபஞ்சத்தை நிலக்கவைக்கும் பாங்கில் அம்மூலசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் ஆட்டமயமாகவேயிருப்பதில் அருத்தமுமுண்டு பொருத்தமுமுண்டு. 'அரங்கிடை நூலறிவாளர் அறியப் படாததோர் கூத்தும்' என இதனைப் போற்றுவர் திருநாவுக் கரசு சுவாமிகள். அதன் அசைப்பு வேகத்தால் இவை ஆடுகின் றன. அதேவேளை அசைப்பதாகிய தான் அசைக்கப்படுவன வாகிய இவற்றுடன் ஒன்றிநின்று தானும் ஆடுவதால், இவற் றின் ஆட்ட அசைவு புறத்திலே சற்றும் புலப்படாதிருக்கும் அதிசயப்புதிரும் வாய்த்து விடுகின்றது. 'இறைவன் உயிர்க்குக் காட்டுதல் மூலம் தானுங் காண்பன்' என்பது சிவஞான போதம் பதினொராஞ் சூத்திரந் தெரிவிக்குஞ் சித்தாந்த உண்மை. இறைவன் இயக்குதல் மூலம் இயங்குவன்; ஆட்டுதல் மூலம் ஆடுவன் என்பனவும் அங்ஙனமே.

'எந்திரம் யாம் உண்ணின் றியக்குகின்றாய் நீயன்றே'— கந்தபுராணம். ஆட்டம் இருக்கும்வரை அரங்கும் இருந்தே யாகும். அம்பலவாணர் ஆட்டத்துக்கு அரங்கு அம்பலம். அம்பலம் என்பது வெளி, ஆகாசம். ஆகாசம் இருவகை. ஒன்று பூதாகாசம் மற்றையது சிதாகாசம். அண்ட புவனங் களுக்கு இடைவெளியாக நாமறிவது பூதாகாசம். இதைப் போலல்லாது இதைவிட அருவாய் இதற்குள் அகப்படாமல் நிர்மலமாய் நித்தியமாய் உள்ளது சிதாகாசம். அண்டத்தைக் கடந்தது அது. ஆனல், நம் அதிர்ஷ்ட வசமாக அண்டத்தில் அது தோற்றமளிக்குமிடம் சிதம்பரம், அச்சிதாகாசம் பிண் டத்தையுங் கடந்தது. ஆனல், அதிர்ஷ்டவசமாகப் பிண் டத்தில் (உடல் வளாகத்தில்) அது காட்சியளிக்குமிடம் நமது இருதய மேல் வெளி. அவ்வெளியே தஹராகாசம். தஹராகாசம், சிதாகாசம், சிற்றம்பலம் மூன்றும் ஒன்றே. அம்பலவாணர் என்ற பெயரே சிதாகாசம் அவர் சொந்தமனை என்பதைத் தெளியக் காட்டுமே! அண்டசிதாகாசம் போற் பிண்ட சிதாகாசமும் அவர் சொந்தமனை என்று ஏலவே சாந்தோக்ய உபநிடதங் குறிப்பிட்டு, அதையல்லவோ தேட வேண்டும், அதையல்லவோ அறியவேண்டும், அதையல்லவோ தெளியவேண்டும் என வாயூற வாயூற வர்ணித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யதித மஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஷ்ம தஹரேஸ்மின் அந்தராகாசஸ் தஸ்மின் யதந்தஸ் ததன் வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஞ்ஞாசி தவ்யம்''— சாந்தோக்யம் 8.1.1.

பிரமபுரம் எனப்படும் இந்தச் சரீரத்திலே தஹர புண்டரீகம் என்ற வீடுள்ளது. அந்த வீட்டினுள்ளே சிற்றம்பலம் என்ற தஹராகாசம் இருக்கிறது. இந்தத் தஹராகாசத்தில் உள்ளது எதுவோ அது (தாண்டவப்ரஹ்மம்) தேடற்பாலது. அறிதற்பாலது. — என்பது தமிழில் இதன் பொருள்.

இந்த உபநிஷதரிஷிகளின் வாரிசுகளாக உள்ளவர்களுள் அன்று தில்லைவனத்தில் விளங்கியவர்கள் வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் மாமுனிவோர் இருவர். அவர்கள் இருவரும் தத்தம் இருதயத்தில் தஹரபுண்டரீக வீட்டிலுள்ள சிதாகாசத்தில் அம்பலவாணர் ஆட்ட மகிமைகளையெல்லாங் கண்டு கண்டு சீரித்து ஆராமை மிகுதியால் அவற்றைப் புறத்திலும் காண விரும்பி வேண்டிக் கொண்டதன் விளைவாகவே அண்டசிதாகாசமாகிய சிதம்பரத்தில் ஒரு தைப்பூச தினத்தன்று அம்பலவாணரின் ஆடல் திருவுருவம் தரிசிப்பிக்கப் பெற்றதாக வரலாற்றுண்மை தெரிவிக்கும்.

அதே ஆடல் திருவுருவமே நடராஜ மூர்த்தம். மேற்கண்டவாறு அகிலமுந் தன் ஆட்டத்துள் அடங்கக் கொண்டு நின்றாடும் அம்பலவாணர் அருட் செயலின் திட்பம் நுட்பம்; செறிவு உறவு; ஒத்திசை ஒருப்பாட்டுநிலை எல்லாம் ஒருங்கமைய இம் மூர்த்தம் அமைந்த அமைப்பே அலாதியானதும் அற்புதகரமானதும் ஆம். ''அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே'' என விமர்சித்தார் சித்தர் கருவூர்த் தேவர்.

இந்த அற்புதத் தெய்வத் திருவடிவில் இறைவனுகிய சிவனுக்குரிய இலய போக அதிகார நிலைகள் மூன்றுமுள. அறக்கருணை மறக்கருணைக் குறிகள் இரண்டுமுள. சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியக் குறிகள் ஐந்துமுள. வகை வேறுபட்ட அசைவு விசேடங்களை யெல்லாம் ஒரே கட்டுப்பாட்டில் அடங்கக் கொண்டு நிற்கும் ஒரு நிலை எப்படியிருக்கும் எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் உதாரத்துவ கெம்பீரங்களும் உள. பாசநீக்கமும் சிவப்பேறுந் தருபவர் தாமே என உணர்த்தும் தனித்துவ நெறிப்பாடும் குறிப்பும் உள.

இத் திருவுருவிலுள்ள உடுக்கையில் சிருஷ்டி, அமைத்த கரத்தில் திதி, அக்கினியில் சங்காரம், ஊன்று பதத்தில் திரோதானம், நான்ற (தொங்க வைத்துள்ள) பதத்தில் அநுக்கிரகம் — இவை ஐந்தொழில்கள். இடது கண்பார்வை நீட்டிய கையின் விரல் நுதியிற் சென்று லயிக்க அவ்விரல் தூக்கிய திருவடியைச் சுட்டி நிற்கும் நிலை அறக்கருணை; ஊன்றிய பதம் முயலகனை அழுந்த அமுக்கி நிற்கும் நிலை மறக்கருணை — இவை இருவகைக் கருணைகள். அலகில் சோதியனாய் இருத்தல் இலயம்; நிலவுலாவிய நீர்மலி வேணியனாதல் போகம்; அம்பலத்தாடுவானாதல் அதிகாரம் — இவை மூன்று நிலைகள். ஒரு கால் மட்டும் ஊன்ற நின்று கொண்டே அதிர வீசி ஆடுந்திறம் எல்லா ஆட்டங்களும் தனது ஆட்டத்தில் இலயித்து ஒன்ற நிற்கும் உதாரத்துவ கெம்பீரம். ஆணவ உருவகமாகிய முயலகனை அழுந்த மிதித்து நின்றுகொண்டே தூக்கிய திருவடியைக் காட்டுதல் பாச நீக்கமும் சிவப்பேறும் உணர்த்தியவாறும். இந்தவகையில் அமையும் இந் நடராஜ மூர்த்தம் இத்தனை அதிசயப் படைப்பாயிருத்தலை,

''பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தொண்டர்காள் இவர்தந்
திருவுரு இருந்தவா பாரீர்!''

எனப் பூந்துருத்திகாடநம்பிகள் விடுக்கும் விடுப்பு உலகறிய ஊர்ஜிதஞ் செய்கின்றது. இதனை இன்னும் ஒருபடி மேற் சென்ற கற்பனை இனிவுங் கனிவுந் துளும்ப பதஞ்சலி ஸ்தவம் என்ற நடராஜஸ்துதி வர்ணிக்கும்.

''லோகான் ஆஹூயசர்வான் தமருக நினதை:
லோகசம் சார மக்னான்
கத்வாபீதிம் தயாளு: ப்ரணதபயஹரம்
குஞ்சிதம் வாமபாதம்
உத்ருத்யேதம் விமுக்தேரயனம் இதி கராத்தர்சயன்
ப்ரத்ய யார்த்தம்
த்ருத்வா வஹ்னிம் சபாயாம் கலயதி நடனம்
யச்சிவோ நஸ் ஸ: பாயாத்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமருக நினதை:- உடுக்கை ஒலியினுலே, லோக சம்சார மக்னுன் லோகான் - உலக வியவகாரத்திலேயே அமிழ்ந்தி யுள்ள உலகத்தவர்கள், சர்வான் ஆஹூய - எல்லாரையும் அழைத்து, அபீதிம் கத்வா - பயமின்மையை ஆக்கி, தயாளு:- கிருபா மூர்த்தியாகிய நடராஜப் பெருமான். ப்ரணத பய ஹரம் குஞ்சிதம் வாமபாதம் - பணிவோர் பயத்தை நீக்கு வதான குஞ்சிதபாதம் என்னும் தமது இடது திருவடியை, உத்ருத்ய - உயர்த்திக்கொண்டு, இதம் விமுக்தே: அயனம் - இது முத்திக்குவழி, இதி - என்று, கராத்தர்சயன் - தமது நீட்டிய கையினுலே காட்டுகிறவராய், ப்ரத்யயார்த் தம் வஹ்னிம் த்ருத்வா - நம்பிக்கை விளைக்கும் பொருட்டு மற்ெருரு கையில் அக்கினியையும் தாங்கிய வண்ணம் (அக்கினி சாட்சியாக இது உண்மை என்று காட்டுவாராய்), சபாயாம் நடனம் கலயதிய: - சபையில் நடனஞ் செய்பவர் எவரோ, ச: சிவ:- அந்த நடராஜசிவம், ந: பாயாத்- எங்களைக் காக்க—என்பது தமிழில் அதன் விளக்கம்.

இங்ஙனம் அம்பலத்தில் ஆடும் தன் அருட்செயலின் குறிக்கோள் இனிது நிறைவுற, அதே நடராஜ சிவம் முன் ேனுடியாகவே அடியவர் மனைகள் தோறும சென்று சென்று அவரவர் நிலைமையை உலகறிய வைத்துவரும் விசேட கருணை யும் பிரசித்தமானது. அவ்வகையில் அதன் அருள் நோக் கிற்கு ஆளான திருத்தொண்டர் வரலாற்றை நூல் செயப் புகும் சேக்கிழார் நாயனுர் தாம் நூல் முதலில் போற்றித் துதித்துக் கொள்ளுதற்கு ஏற்புடைக் கடவுள் அவரேயாகக் கொள்ளுதல் இன்றியமையாததே. அவரையே வாழ்த்தி வணங்குகிருர். அவர்தம் மலர்சிலம்படியையே வாழ்த்தி வணங்குகிருர். அவரை 'அம்பலத்தாடுவான்' என்றே குறிப் பிட்டு வாழ்த்தி வணங்குகிருர்.

முத்தீ யாளர் நான் மறையவர் மூவாயிரவர் நின்னே
டொத்தே வாழுந் தன்மை யாள ரோதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்து
ளத்தா வுன்ற ஞடல் காண வணைவது மென்றுகொலோ.

— திருவிசைப்பா.

சிவ சிவ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தருமந்தன் வழிச் செல்கை கடன்"

மன்னுநிதி மன்னனொருவன் தனக்கு ஏகவாரிசாயுள்ள ஒரேயொரு புத்திரனைத் தன் தேர்ச்சில்லின்கீழகப்படக் கிடத்தி அவன் நெஞ்சில் தன் தேர்ச்சில் அழுந்திச் செல்லுமாறு ஊர்கின்றான். முன்னமே, அச் செயலைச் செய்யுமாறு பணிக்கப்பட்ட அவன் மந்திரி யொருவன் அக் கொடுமைக்குத் தன்னையுட்படுத்த இசைந்து நிற்குந் தன் விதியை நொந்து துயர் தாங்காது தற்கொலையே செய்துகொண்டான். அதற்கும் முன்னாகவே மன்னனது மந்திரி ஒருவன் மைந்தன் மேற் குற்றமின்மையை அதி ஆராய்வாக எடுத்துரைத்துமுள்ளான். விஷயம் வேறெதுவுமல்ல; மைந்தனது தேர்ச்சில்லுக்குப் பசுக்கன்று ஒன்று பலியாய் விட்டது. இது எந்த வகையிலும் மைந்தன் அறிந்து செய்த குற்றமல்ல என்பதை ஆதாரபூர்வமாக மந்திரி எடுத்து நிறுவிய திறமும் வெகு பிரமாதம். இந்நிகழ்ச்சியைச் செய்யுள் செய்யுஞ் சேக்கிழார் 'சொல்லுந் திறம் வல்லார்' என்பது பிரசித்தம். அவரே சொல்கின்றபடி:

அது நிகழ்ந்த இடம் 'அரசுலாந்தெரு'. எனவே பொது ஜனங்கள் ஜந்துக்களின் போக்குவரத்துக்குரிய வீதியல்ல. எதுவும் அகஸ்மாத்தாய் உட்புகமுடியாத அளவுக்குக் கட்டுக் காவலுள்ள ஒரு வீதி. மைந்தன் சென்ற தேரும் 'நெடுந்தேர்' என்ற அளவிலுமல்ல அது 'மணிநெடுந்தேர்'. எனவே அது எந்த ஒரு ஜெந்துவும் தூரத்திலே கண்டு விலகிக் கொள்ளவும், காணாத பட்சத்திலும் மணியொலியைக் கேட்டு விலகிக் கொள்ளவும் வாய்ப்பளிக்குந் தேர். அத்தேர் தானும் ஒன்றியாய்ச் சென்ற தேரல்ல, அளவில் தேர்த்தானை சூழச் சென்ற தேர். ஆகவே, எந்த ஒரு அசம்பாவிதமும் தற்செயலாகக்கூட நிகழ்ந்து விடாமல் தடுத்து நிறுத்தற்குப் போதிய சேனாவீரர்களைக் கொண்ட அத்தேர்கள் சூழச் சென்ற தேர் இத்தேர் என ஆகிறது. இன்னும் இத்தகைய சேனாபல ஏற்பாட்டுக்கான முன்னோடி ஆயத்தங்களுடன் சென்ற தேர் என்றதனாலே அத்தருணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வீதியிற் பிரத்தியேக பாதுகாப்பு நடவடிக்கைகளும் பிரமாதமாயிருந்திருக்கும் என்பது குறிப்பு. மேலும் தேருக்குப் பலியானதும் 'இளைய ஆன்கன்று'. அச்ச பய மறியாத ஆன்கன்று. 'இளங்கன்று பயமறியாது' என்ற படிக்கு அது தன்னியல்பான துள்ளிக்குதிக்கும் வேகவசத்தால் தேர்ச்சில் இடையில் தானுக அகப்பட்டது — என விரிவும் விளக்கமும் கொண்டது மந்திரியின் விமர்சனம்.

தொடர்ந்து நிகழ்ந்த உரையாடலில் 'மைந்தன் பேரில் தவறில்லை' என்பதை ஏனை மந்திரிகளும் ஆமோதித்திருக் கின்றனர். அத்துடன் பழி பழிதான் என்பதையும் அவர்கள் ஒத்துக்கொள்ளத் தவறவில்லை. ஆனுல், இது புத்தி பூர்வ மாக நிகழ்ந்த பழியல்ல; அபுத்தி பூர்வமாக நிகழ்ந்த பழி தானே. ஸ்மிருதி கூறுகின்றபடி, உரிய பிராயச்சித்தத்தி ஞல், அது தீர்க்கப்படலாம் எனத் தமது மந்திராலோசனையை வெளியிட்டனர். அப்படியே செய்வதுதான் தொன்றுதொடு நெறி, அதாவது வழக்கு வலிவுள்ள — நடைமுறை அங்கீ காரமுள்ள நீதி வழி எனவும் எடுத்துக்காட்டினர்.

என்னதான், எவ்வளவுதான் எடுத்துரைத்தும் மன்னன் மனம் மசியவில்லை. மன்னனது ஆய்வுத்துறை மந்திரிகளின் ஆய்வியல் மட்டத்தை ஊடறுத்து அதிகதூரம் உட்சென்று கொண்டிருக்கின்றது.

சே! இவர்கள் என் நினைத்து என் சொல்கிறுர்கள்! இவர்கள் கூற்றுக்கும் நிகழ்ச்சியின் உண்மை இருந்தவாற் றிற்கும் வெகுதூரமாகிறதே, என்பது மன்னன் அபிப்பிராயம். அதனுல் 'உங்களுக்குத் தர்மம் விளங்காது' என்ற பாங்கில்

'அறநெறியின் செவ்விய உண்மைத்திறம்
நீர் சிந்தைசெய்யா துரைக்கின்றீர்'

என அவர்களைச் சாடுகின்றுன். அத்துடன், 'இதுபோல் முன் நிகழ்ந்தது' என்கிறீர்களே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எவ்வுலகில்? எப்பெற்றம்? இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறிந்துவிழுந் ததுவிளம்பீர்'

எனக் கடாவுகின்றான். மேலும், 'தொன்றுதொடு வழக்கு' என்றீர்களே! நீங்கள் கருதும் அவ்வழக்கு இன்று இந் நேரம் இப்பசு படும் துயரத்துக்கு மருந்தாக வல்லதோ என்று அவர்கள் கருத்தோடு மிண்டுகிறான். உங்கள் பொய் அபிப்பிராயத்துக்கு நான் இசைவேனானால் தருமம் உருப் பட்டமாதிரித்தான்! என்று அழல்கின்றான். முடிவில் 'உது உங்கள் வழக்கம்' என்று, மந்திரிமார் பாரம்பரியத்தில் காலாதிகாலமாக இருந்துகொண்டேயிருக்கும் அவர்கள் பலவீனமொன்றைக் கூசாமல் குத்தியுங் காட்டுகின்றான்.

என்ன இது? ஏன் இது? இந்த அளவுக்கு இம் மன்னன் மனம் மாண்டிருப்பது எதில்? எவ்வாறு? என்று மலைக்க வைக்கின்றது சந்தர்ப்பம்.

இங்கு மநுவேந்தன் பிரச்சினை தர்மப்பிரச்சினை. ஏதானு மோருயிர் துன்புறத் தான் காரணமாதல் தர்மமல்ல, யாதானு மோருயிர் துன்புறக்காணின் அதன்துயர் துடைக்க முயலாதிருப்பதுந் தர்மமல்ல என்பது மன்னன் கொள்கை. வாழ்வியல் துறைதோறும் ஆழஅகல இடம்பிடித்துக் கொண் டிருப்பதோர் அரும்பண்பு தர்மமாகும். பசுக்காத்தல் தர்மம்; அஹிம்சை தர்மம், ஆலயபரிபாலனம் தர்மம் என்பனபோல இன்ன இன்ன காரியங்கள் தர்மம் என்னும் வழக்குண்டு. எனினும், தர்மம் என்றால் இன்னது என்று சுட்டி வரை யறுத்துக் கூற ஒரு வரைவிலக்கணமில்லை. ஆனால், இன்ன இன்ன காரியம் இன்ன இன்ன அமைதியில் நடைபெறத் தக்கது என்ற ஒருவகை ஆன்றோர் ஒழுகியற் பண்பாக அது இருந்துகொண்டிருத்தல் மட்டும் உண்மை. அவ்வாறான ஒழுகியற் பண்புகள் அனைத்தினுக்கும் தலைமைப் பண்பாக உள்ளது சீவ இரக்கமாகிய தயை என்னும் பண்பு. 'தயா மூலோ தர்ம:' என்பது ஸ்மிருதி.

உலகியலில், குடும்பவியல், சமூகவியல், அரசியல், ஆத்மவியல் என்ற ஒவ்வோர் துறையும் தர்மத்தின் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு படிவங்கள். அவ்வொவ்வோர் துறையும் சுயநலமற்ற சீவஇரக்கத்தின் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே அது உண்மைத் தர்மமாகும். உண்மைத்தர்மத்தின் உரைகல் சீவஇரக்கம் எனல் அமையும். இந்நோக்கு ஏனைய துறைகளிலும் பார்க்க மிகத் துடிப்பாக அரசியல் துறையில் இடம்பெறவேண்டியது. சீவஇரக்கத்தின் அடிப்படையில் நின்று அரசன் தன்னுயிர்போல் மன்னுயிர்களையுங் கண்டு அவற்றுக்குத் தன்னாலோ, தன்படைகளாலோ, கள்வராலோ, பகைவராலோ, கொடுவிலங்குகளாலோ துன்பம் நேராமற் காக்கும் கைங்கரியமே அரசியல் என்ற விளக்கம் பிரதானமாகும்.

அரசியலின் உயிர்மூச்சாகிய இப்பண்பு தனது மந்திரிகளின் காட்சியிற் படவில்லை. தம் கண்காண நிகழ்ந்த நிகழ்ச்சியை அவர்கள் சீவஇரக்கக் கண்ணோட்டத்திற் பார்க்கத் தவறியிருக்கிறார்கள். அதனால், அவர்கள் அரச தர்மத்தின் அடிப்படையை அலட்சியம் பண்ணியிருக்கிறார்கள் என்பது மன்னனின் தெளிவான அபிப்பிராயம். அவ்வபிப்பிராயத்தின் விளாசுதலே,

" அறநெறியின் செவ்விய உண்மைத்திறம்
நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர் "

என்ற மன்னன் வாக்காகக் கிளம்பி மந்திரிகளைச் சாடுகின்றது. அறநெறி - தர்மம். செவ்விய உண்மைத்திறம் - அதன் நேரிய சீரிய உண்மைப் பண்பு.

மேலும், சீவ இரக்கமே அரசியலின் உயிர்மூச்சு என்ற மட்டிலுமல்ல, அவ்விரக்கமே தன் உயிர்மூச்சு என்ற மட்டிலுமல்ல, அது தன் உயிரே ஆகநின்ற இம் மன்னனியல்பும் அபாரமானது. 'பிறிதின் நோய் தன் நோய்போற் போற்றுதல்' எனத் திருவள்ளுவர் தெரிவிக்கும் இரக்கப் பண்பு அப்படியே தத்ரூபமாக இம் மன்னனிடத்திற் பிரதிபலிக்குந் திறமும் அலாதியானது. சேக்கிழார் வாக்கில் அது வருமாறு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவ்வுரை கேட்ட வேந்தன்
ஆவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல்
வேதனை யகத்து மிக்கிங்
கிவ்வினை விளைந்த வாறென்
றிடருறு மிரங்கு மேங்குஞ்
செவ்விதென் செங்கோ லென்னுந்
தெருமருந் தெருளுந் தேருன்."

"மன்னுயிர் புரந்து வையம்
பொதுக்கடிந் தறத்தி னீடும்
என்னெறி நன்ருல் என்னும்
என்செய்தால் தீரு மென்னும்
தன்னிளங் கன்று காணுத்
தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை யரச னுற்ற
துயரமோ ரளவிற் றன்ருல்."

இங்ஙனம் பசுவுற்ற துயரம் தானுற்ற துயரமாய்க் கொண்டு நிற்கும் மன்னனுக்கு மந்திரிகள் கூறும் பிராயச் சித்தப் பரிகாரம் எம்மாத்திரம்! தாக்குண்டு தவிப்பவன் தவிப்புத் தீர்த்தலா? தாக்கினவன் கைநோவுக்கு மருந்து தேடுதலா? எது பிரதானம்? என்றிருக்கின்றது மன்னன்நிலை.

உண்மைநூற் கருத்தின்படி பிராயச்சித்தமென்பது செயற்பழி செய்தவனைச் சேராதிருக்கப் பண்ணுவதாகப் பாவனுசாமர்த்தியத்தாற் புத்திபண்ணி நடத்தும் சடங்கு முறையான ஒரு தற்காலிக தந்திரம். அது பலன்படுந் தன்மையும், ஆபத்திலகப்பட்டவனுக்குக் கிடைக்கும் முதலுதவி அல்லது ஒத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குரியவனுக்குக் கிடைக்கும் சகாயம் அளவினதாகவே அமையும். எவ்வாருனுலும், அது செய்தவனளவில் மட்டுப்படுவதன்றி, செயற்கிலக்காகி வருந்தும் உயிரின் துயருக்கு மாற்று மருந்தாதல் ஒருபோதும் இல்லை. மந்திரிகள் நோக்கில் எப்படியிருந்தாலும் மன்னன் நோக்கில் அது ஒரு பொய்த்தந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளவே. மன்னன் கூற்றில் வைத்து இதனைத் தெரிவிக்குஞ் சேக்கிழார், 'சழக்கு' என்ற சொல்லையே பிரயோகித்திருக்கக் காண்போம். சழக்கு – பொய். இச்சழக்குக்குத் தான் இசைவதானல், "தர்மந்தான் சலியாதோ" என்பது மன்னன் விசாரம்.

'இஷ்டப்ராப்தி அநிஷ்டபரிஹாரோ லௌகிகோபாயோ தர்ம:' — உயிர் ஒவ்வொன்றினதும் நல்விருப்பங்கள் நிறைவேறவும், தீங்கென்று உணரப்படுபவை விலகவுஞ் செய்யப் படுஞ் செயலின் கண்ணது தர்மம். 'தர்மே சர்வம் பிரதிஷ்டிதம்' — எல்லாம் தர்மத்திலேயே நிலைபெறுத்தப்பெற்றுள்ளது. இவ்வகையில் தர்மம் சுமைதாங்கி. எனினும் 'தர்மம் என்று ஒரு பொருள் உளது' என, தன் இருப்பு அநுசரிக்கப்படா தொழியின், ஆகக் கூடிய அநிஷ்டங்கள், அதிக்கிரமங்களால் சம்பந்தப்பட்டவரை நலியவிட்டு அது தலையை உள்வாங்கிக்கொள்ளுதலும் உண்டு. 'தன்னை அநுசரிப்பவனைத் தர்மம் தாங்குகிறது; அது செய்யாதவனைத் தர்மம் கைநெகிழ விட்டுவிடுகின்றது' என்பது பிரசித்தமான உண்மை. தர்ம அநுசரணையுள்ளவன் இயற்கையால் விளையும் எந்தக் கஷ்டநிலையிலும் தலைதப்புவான். அல்லாதவன் தலையழிவான். 'தர்மம் தலைகாக்கும்' என்பதற்குச் சாதகமாக வரலாற்றுரீதியில் எத்தனையோ அத்தாட்சிகளுண்மை பிரசித்தம்.

இக் கட்டத்தில் ஆசங்கை ஒன்றுக்கு இடமுண்டு. என்னை? தர்மந்தான் உருவறியாப் பண்டமாயிற்றே! அதை அறிந்தநுசரித்தல் எங்ஙனம் என்பது ஆசங்கை. உருவறியாத ஒன்றெனினும் ஆன்றோர்களாகிய நம் முன்னோர் பாரம்பரியம் மூலமாகக் காலாதிகாலமாக அது தொடர்ந்து வருகின்றது. அவர்கள் வாழ்க்கைப்பண்பாட்டில் அவர்களால் தழுவப்பட்டன எவையெவை? விலக்கப்பட்டன எவையெவை? எனக் கணிக்கப்பட்டு வந்த அவதானக் குறிப்புக்கள் சமூகத்தின் வாழ்க்கையநுபவப் பட்டியலில் நிரம்பவுள. அவர்கள் மேற்கொண்டொழுகிய விதிவிலக்குக்களை அநுசரித்தொழுகுதல் மூலம் தர்மம் நடைமுறையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்பட்டு வருவது. இன்னும், வேண்டுவார் கற்றறிந்து தெரிந்துகொள்ளுமாறு ஸ்மிருதிகளிலும் மற்றும் சமய நூல்கள் ஒழுக்க நூல்களிலும் அவை விபரிக்கப்பட்டுமுள்ளன. எவ்வகையாலோ அவற்றை அறிந்து அநுசரிப்பது அவரவர் வாழ்க்கையோடொட்டியுள்ள அவசிய கடமையாகும். இதற்குமேலாக ஆசங்கை கொள்வதில் அர்த்தமில்லை.

இந்நியதி எல்லோர்க்கும் ஒரு பொது. அதேவேளை அரசனுக்கு இது ஒரு தனிச் சிறப்பு. ஏன்? தர்மவிஷயத்தில் அரசனுக்குரிய பொறுப்பு ஒரு இரட்டைப் பொறுப்பு. ஒன்று, அவன் தான் இந்நியதியில் வழுவாதிருக்க வேண்டும். எனில், புற ஏதுக்களால் வழுவுவிக்குஞ் சந்தர்ப்பங்கள் நேரும் பொழுதிலும் வழுவாதிருக்கவேண்டும். மற்றது, தன்பிரஜைகளையும் அந்நியதி நெறியில் வழுவாது நிறுத்த வேண்டும். இவ்விரண்டில் இரண்டாவதை விட முதலாவது வெகு முக்கியம் வாய்ந்ததாம். என்னை? தான் தர்ம நியதியில் நில்லாதவன் பிறரை அந்நியதிப்படுத்துவான் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இம் மன்னன் கோட்பாடு இருந்தபடிக்கு, இவன் குறித்த பசுவுக்குத் துயரமேற்படாத வண்ணம் முன்னேடியாகவே காத்திருக்க வேண்டியவன். அது ஏதோ தவறிப் போயிற்று. இனி, பசு படுந்துயரைத் தீர்க்க வேண்டியது அவன் பொறுப்பு. அதுவும் கையாலாகாத தொன்றுயிருக்கிறது. என் செய்வது, 'சிவனே' என்றிருக்கவும், அவன் தயாரில்லை. இவ்வகையில் மன்னன் நிலையோ தர்மசங்கடமான நிலை. மாற்று வழியாக எதுவுஞ் செய்வதற்கில்லை. தன் முன்னேரின் பாரம்பரியப் பண்பாகக் கொண்டு தான் அதுவரை காத்தோம்பி வந்த தன் தர்மத்தில் தான் சலியாதிருத்தல் ஒன்றே செய்யக் கிடந்தது.

'அந்நியன் ஓர் உயிர் கொன்றால் அவனைக் கொல்வது' அவன் அநுசரணையில் இருந்து வந்த தர்மநியதி. இப்பொழுதும் அதன் வழிச் செல்லுதலே தனக்கு வழியெனத் துணிந்தான். 'தருமந் தன்வழிச் செல்கை கடன்' என்ற அளவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கருதியதையே செய்து முடித்தான் மன்னன். பசுவின் துயர்தீர்த்தல் என்றதன் குறிக்கோளை அது நிறைவேற்றும் என்பது அவன் துணிபல்ல. ஆனால், ஒரு திருப்திமட்டும். அவ்வாறு செய்தலின் மூலம் பசு அடைந்த அதே வேதனையைத் தானும் அடையும் வாய்ப்புண்டாகும் என்ற ஒரே திருப்திமட்டும்.

''இவ்வான் மணமழியுந் துயரகற்ற மாட்ட ாதேன்
வருந்துமிது தனதுறு பேரிடர்
யானுந் தாங்குவதே கருமம்'' எனச் சேக்கிழார் வாக்கில் இவ்வுண்மை ஒலிக்கக் காணலாம்.

தர்ம அநுசரணையில் தர்மசங்கடமானநிலை ஏற்பட்டால் அதற்கேற்ற உபாயமுந் தர்ம அநுசரணையை மேலுந் தீவிரமாக அநுசரித்தலேதான். அந்நிலையில் ஆகவேண்டிய பலனை எவ்வகையாலோ ஆக்கி வைக்கும் ஆற்றல் தர்மத்துக்குண்டு என்பது இங்கு நிதர்சனமானதோர் உண்மையாய் விடுகிறது. இங்கு பசுவின் துயர் தீர்தல் மன்னன் குறிக்கோள். அவனது தர்ம அநுசரணையின் ஆற்றல் தெய்விகத்தின் மூலம் பசுவின் துயர் தீர்ந்தேவிட்டது. தர்மந் தரும் பலன் எத்துறையிலுங் குறைவுபடாத நிறைபலன். இங்கு பசுவின் துயர் மட்டுமன்று, பசுவின் துயரைத் தானுந் தாங்குவதே கருமம் எனத் துணிந்த மன்னன் தன் நீதியியல்பின் வண்ணம் மைந்தனைக் கொன்றுவிட்டால் அரச சந்ததி அற்றொழியுமே எனக் கவன்ற மந்திரிகளின் துயருந் தீர்ந்து போகிறது. மன்னன் துயரும் தீர்ந்துபோகிறது. முன், மந்திரியொருவன் தற்கொலை செய்துகொண்டானே என்றிருந்த துயருங் கூடத் தீர்ந்து போகிறது. தர்மம் சர்வசுக (இன்ப) சாதனம் ஆய்விடுகின்றது.

'' அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உயிர்த்தெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன் வேந்தனும் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' அடிபணிந்த மைந்தனைத்தன் ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினுன் மநுவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்றும் மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே ''

சர்வார்த்த சித்திகரமான ஒரு சம்பூர்ண சர்வமங்களப் பேறு இம்மன்னனின் தர்ம அநுசரணைக்குக் கைம்மேற் பலனுகக் கண்டிருக்கின்றது.

இவ்விளைவு முழுவதையும் தானே முன்னின்று விளை வித்திருக்கின்ருர், அக்கட்டத்தில் அரசன் 'கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்' காட்சியளித்திருந்த திருவாரூர் வீதி விடங்கனுகிய சிவபெருமான்.

அவரவர் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி அவரவர் தர்மக் கடமையோடே கிடக்கிறது என்பது பொன்னுன ஒருண்மை. 'ஸ்வே ஸ்வே கர்மண் யபிரத: சம்சித்திம் லபதே நர:'— தன்தன் கடமையில் வழுவாது முழுமூச்சான ஈடுபாடுள்ள மனிதன் ஆன்மசித்தியை அடைகிருன் — என்பது ஸ்மிருதி வாக்கியம். வழுவாது ஈடுபடுவோன் என்பதை, வழுவுவிக்குஞ் சூழ்நிலை ஏற்பட்ட போதிலும் வழுவாது ஈடுபடுவோன் என விரித்துக் கொள்ளல் பொருந்தும். கர்மத்தில் ஈடுபாடு கொள்பவன் என்ருல், அங்ஙனம் வழுவுவித்தற்கு முன்னிலை யாக உருத்து நிற்கும் ஏதுக்களில் ஈடுபடாது அவற்றைப் புறக்கணித்து அவற்றினெதிரே தன் கர்மத்திலேயே ஈடுபடு பவன் என விளங்கல் வேண்டும். நல்லதொரு ஆத்மீக உண்மையாகப் பொதுவிற் பலரும் சொல்லிக்கொள்ளும் இக்கருத்தின் சைவசித்தாந்த பரமான விளக்கம் சுவாரஷ்ய மானது.

சிவமே அனைத்துயிர்க்கும் வாழ்முதல். உயிர்க்கு வாழ்வை அமைத்துக் கொடுப்பதும் அது. வாழ்வியலநுபவங் களுக்கு உடனுதவியாய் நின்று உபகரிப்பதும் அது. வாழ் வின் ஆகக் கடைசி முடிவில் வாழ்க்கையின் உறுதிப் பயனுக அடையப்படுவதும் அது. ஒவ்வோருயிருஞ் சிவனுலேயே வாழ்கின்றன. சிவப்பேற்றுக்காகவே வாழ் கின்றன. 'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' என்பது மணிவாசகம். இவ்வாழ்முதலாகிய சிவமே அவரவர்க் காம் கடமைப் பொறுப்புக்களை வகுத்துக்கொடுத்து அவ்வப் பொறுப்புக்களின் பின்னணியில்தானே, திருமூலர் சொல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, கண்காணி (கங்காணி) யாயும் நின்றுகொண்டிருக்கின்றது. தத்தங் கடமைகளைச் சதா கவனித்துக்கொண்டு சிவமாகிய அந்தக் கங்காணி நிற்கும் இரகசியத்தைப் பலர் அறிவதில்லை என்றும், அதனால், கடமையை இடமாகக் கொண்டு பலரும் பலபல கள்ளங்களைச் செய்து வருகிறார்கள் என்றும் திருமூலர் தருஞ் செய்தி சுவாரஸ்யமானது.

"கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லைக் காணுங்கால்"

— திருமந்திரம்

அங்ஙனம் எந்த ஒரு கடமையினூடும், தர்மத்தினூடும் நின்றுகொண்டிருக்கும் அக்கங்காணி அந்த அந்தக் கடமை, அந்த அந்தத் தர்மம், அதுஅதற்குரிய சீரிய நேரிய உண்மைப் பண்பில் நிகழக் காணும்போது கண்காண வெளிப்பட்டு நின்றே அவரவர்க்கு வேண்டும் ஆத்மசித்தியை அளித்து விடும்.

இச்சித்தாந்த உண்மைக் கருவூலமாய்த் திகழும் நூல் பெரியபுராணம். அதில் வரும் தொண்டர் வரலாறுகள் ஒவ்வொன்றும் இவ்வுண்மைக்கு உரைகல். அதே பெரிய புராணத்தின் கோபுரவாயில் என்னும்படி இம்மனுவேந்தன் வரலாறு அமைந்துள்ளதன் பொருத்தம் உற்றுணர்ந்து நயத்தற் பாலதாகும்.

"அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்"

எனவும்,

'முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ'

எனவும்,

இவ்வுண்மை இரகசியத்தை இம்மன்னன் சரித்திரத்திலேயே சேக்கிழார் பெருமான் செப்பேடு செய்து வைத்த நலம் போற்றத்தகும்.

அவரவர் மேற்கொள்ளுந் தருமத்தின் கண்காணிப்பதிகாரியாக நின்றுகொண்டிருக்குஞ் சிவம் அவ்வத் தருமத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர் கொண்டிருக்கும் உறுதியின் உண்மைநிலையை அதுவதற்கேற்ற ஒவ்வோர் பரிசோதனை மூலம் ஊர்ஜிதப் படுத்தும் நிகழ்ச்சி திருத்தொண்டர்புராண வரலாறுகளிற் காணும் பொது அம்சமாகும். அச்சிவம் அவரவர் தொண்டு தொழும்பு நிலைகளில் இருந்தாற் போல் ஒரு எக்கச்சக்க மான சூழ்நிலையை உருவாக்கி அதன் மூலம் அவரவர்களைக் கொஞ்சம் ஆட்டிப்படைத்து அவரவர் உண்மைத் தகுதியை உறுதி செய்து கொள்ளும் இயல்பு அவ்வரலாறுகளிற் பெரும்பான்மை.

இம் மன்னன் சார்பிலும் குறித்த பசுவின் நிகழ்ச்சி, அச்சிவம் தானாகவே ஏற்படுத்திய ஒரு எக்கச்சக்கமான சூழ் நிலை. அரசவீதியில் அனைத்து வகைப் பந்தோபஸ்து ஏற்பாடு களுக்குள் ஒன்றற்கும் அகப்படாமல் தப்பி ஒருவர் கண் ணிலுமே படாமல், சூழவந்த தேர்ச்சில்லுகளில் எதிலுஞ் சிக்காமல் மைந்தன் தேர்ச்சில்லிலேயே அந்தப் பசுக்கன்று அகப்பட்டது ஒன்று; ஆபத்தை அறிவிக்கும் வழியென்ன என்று தெரிந்தநுசரிக்கும் ஆறறிவு மனிதர் தரத்துக்கு மாறி ஐந்தறிவுப் பிராணியாகிய அப்பசு அரசனின் ஆராய்ச்சி மணியை அடித்ததொன்று; சேக்கிழார் காட்டு மாறு, அன்று என்றுமில்லாத அளவுக்குப் பேரவலத்தொனி யில் அந்த மணியோசை நெஞ்சதிர நிலைதளர முழங்கிய தொன்று; சாமானிய பசுத்தன்மைக்குப் பலமடங்கு அதிகமாக அப்பசுவினது அழல் மூச்சின் அகோரமும், கதறல் ஒலியின் கர்ணகடூரமான காழ்ப்பும் அமைந்திருந்த தொன்று. இவையனைத்தும் அன்றைக்கென அவனுக்கென அச்சிவம் ஏற்படுத்திய எக்கச்சக்கமான சூழ்நிலை; அவனுக் கென அமைந்த பாரதூரமான பரிசோதனை.

பாடவிஷயத்தில் முறையான பயிற்சி பெற்றவன், எவ்வளவு கடுமையாயிருப்பினும், சோதனையில் தவறுவ தில்லை. சீவஇரக்கமே கண்ணாக ஆட்சி செலுத்தும் தன் பாடத்தில் முதிர்ந்த பயிற்சி பெற்றவன் மநுவேந்தன். ஆதலின் இப்பரிசோதனையில் அவன் தவறவில்லை.

பெரியபுராணத் தொண்டருள் ஒருவனாக அமையா விடினும் மநுவேந்தன், தொண்டர் தொண்டுறுதியின் நிலைக்கு ஒரு கலங்கரை விளக்கம். அன்றெனில் பெரியபுராணத்தில், அவன் வரலாறு அமைதற்கியைபில்லையல்லவா!

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# 'இனிப்பெறும் பேறென்றில்லார்'

இவர்களுக்கு இதுபோதும். மேலதிகமாக எதுவும் வேண்டியதில்லை என ஒருவகை அடியார்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் சேக்கிழார். அவர்கள் இம்மையிலேயே அம்மையநுபவம் பெற்றுள்ளவர்கள் என்பது அவர்தருங் கருத்து.

இம்மையநுபவம் அசுத்தமாயா புவனங்களில் நிகழ்வது. அம்மையநுபவம் சுத்தமாயா புவனங்களில் நிகழ்வது. வாழ்வாங்கு வாழ்வது அசுத்தமாயாபுவனத்தில், வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவது சுத்தமாயா புவனத்தில்.

சரித்திரமறியப் பல்லாயிரவர் சிவபதமுற்ற தலம் தில்லைச் சிதம்பரம். சிதம்பரம் சிதாகாசம். ஏனைய ஆகாசம்போல் அது ஜடாகாசமன்று. அதனால் அங்கு வாழ்ந்த தில்லைவாழந்தணர்கள் சிதாகாச வாசிகள்.

பிண்டமாகிய உடம்பில் இருதயம் போல அண்டமாகிய உலகில் சிதம்பரம். பிண்ட இருதயத்தில் தகராகாசம்போல அண்ட இருதயத்தில் சிற்றம்பலம். தகராகாசம் என்றதன் தமிழ்ப்படிவம் சிற்றம்பலம். பிண்ட இருதயத்திலுள்ள, தகராகாசத்தைச் சாந்தோக்ய உபநிடதம் குறிப்பிடுகின்றது. 'அதிலுள்ள ஆத்மா (ப்ரஹ்மம்) வை அதி' என்று உபதேசிக்கிறது.

அவ்வகையால் அச்சிதம்பரவாசிகளின் தரம் வேறு. நாங்கள் மானுட கணங்கள். அவர்கள் சிவகணங்கள். திருஞானசம்பந்தர் ஒருமுறை சிதம்பரஞ் சென்றிருந்தபோது, திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் கிட்ட அழைத்து, 'இதோ பாரும்' என்று காட்டினார். கண்டவராகிய பாணரின் கண்ணுக்கு அங்கிருந்த தில்லைவாழந்தணர் சிவகணங்களாய்க் காட்சியளித்தனர். இச்செய்தி பெரியபுராணத்தில் ஓரிடத்தில் பேசப்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் உயர்வுற்ற இச்சிதம்பரத்துச் சிற்றம்பலத்தில் எழுந்தருளும் நடேசப் பிரானுக்கு அர்ச்சகர்களும் அபிமானி களுமா யமைந்தவர்கள் தில்லைவாழந்தணர். திருத்தொண்டத் தொகைக்கு அடியெடுத்தபோது அவர்கள் பெயரே திருவா ரூரான் திருவாக்கில் முதலில் ஒலித்திருக்கின்றது. அவர்களுக் கெனப் பெரியபுராணத்தில் தனியான புராணமுண்டு. அப் புராணத்தின் சாராம்சம் திருத்தொண்டர் புராணசாரச் செய்யுளொன்றிற் பின்வருமாறு அமைகின்றது.

இவர்கள் நடராஜப் பெருமானுக்கு அணுக்கத்தொண் டர்கள். அவருக்குக் குடை, கொடி, ஆலவட்டம், தீபம், தூபம், பட்டு, பணி, மாலை ஆகியன தாங்கிச் சேவிக்கும் உரிமை பெற்றவர் திருத்தொண்டத் தொகையில் முதலிடம் பெற்றவர். முத்திப்பேறென்ற கவலையேயில்லாதவர்கள். முத்தீயோம்புபவர்கள். பக்திக்கு எல்லையில்லாதவர்கள்— புராணசாரச் செய்தி இது.

இவர்களின் தொண்டுக்கு முன்னிலையான நடேசப்பிரான் அதீதபரசிவவஸ்து. ஆதியாய் நடுவாய் அளவிலா அளவாய் உள்ளவர். அனைத்தையும் அறிவிக்கும் அறிவும் அறியுமறிவுந் தாமாயிருப்பவர். சோதி அறிவிக்குமறிவு. உணர்வு அறியு மறிவு. “சோதியா யுணர்வுமாகி” எனச் சேக்கிழார் இத னைத் துல்லியமாகக் காட்டியுள்ளார். அவர் தோன்றிய பொருள்களிலெல்லாம் அது அதுவாய் நிற்பர். உலகத்துட னும் உயிர்களுடனும் அத்துவிதமாய் நிற்கும் ஏகப்பொருள் அவர். இப் பொருளைக் குறிக்க வேதம், “ஏகமேவ அத்வி தீயம்” என்றது. ஆனுல், அத்தொடர் அத்துவிதம் என்ருல் ஏகம் என்று சிலர் தவருகப் பொருள் கொள்வதற்கும் ஆதாரமாயிருந்துவிட்டது. அவ்வகையில் எவ்வகை விளக்கப் பிழையும் நிகழ்தற்கிடமிலாவகையில் ‘பேதியா ஏகம்’ என் ருர் சேக்கிழார். இது அவ் வேத வாக்கியத்தையே முன் பின்னுக மாற்றிவிட்டது போலமைந்து பொருட்செம்மை நிற்குந் திறம் உவகையூட்டுவதாகும். அந்த நடராஜப் பிரான் சக்தி சிவான்மகமாய் இருப்பவர். அவர்நிலை, ‘போதியாநிற்கும்’ என்று சுட்டும் சேக்கிழார் வசனம் திவ்வியமானது. ‘இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள் சொல்கிறேன்' என்பதுபோல நிற்கும் அதன் இயல்பை அப்படியே பிரதிபலிக்கின்றது இத்தொடர். அவர் நிலே, 'என்று வந்தாய்' என உசாவியவாருய் இருந்தது என்ருர் அப்பர் சுவாமிகள்.

இவ்வகையில் நடேசப்பிரான் இயல்புகள் எல்லாம் அற்புத மானவை. 'அற்புதத் தெய்வ மிதனின் மற்றுண்டே' எனப் போற்றுகின்றது ஒரு திருவிசைப்பா.

"பத்தியா யுணர்வோ ரருளேவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தாவா பாரீர்" என்கின்றது

மற்ருெரு திருவிசைப்பா. இத்தகைய இவரியல்பை, 'அற் புதக் கோலம் நீடி' என்ற சேக்கிழார் வாக்கருமை அருமை யேதான்! ஆதலின், இவர்க்கு அணுக்கத் தொண்டரான தில்லைவாழந்தணர் எத்தகையராதல் வேண்டும்!

'பறப்பை (நெய்த்தொன்னே) படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும் சிறப்பர்'. 'கற்ருங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்ருர்' என இவர்களேக் குறிப்பிட்டார் திருஞானசம்பந்தர். நந்தனுர் சிதம்பரத்தை அணுகிய போது அங்கெழும் ஆகுதிப் புகையின் பொலிவு கண்டு அஞ்சி எட்ட நின்றுகொண்டார் என்பர் சேக்கிழார். இத் தில்லைவாழந்தணர்கள் வேள்வியாளர்கள் என்பது இவற்ருற் புலனுகும். வேள்வியாளரெனில் பொதுவில் வைதிகர் என்ற அபிப்பிராயந் தோன்றும். வைதிகரெனில் பரார்த்த சிவ பூசைக்கு அருகதையற்றவராவார்களே என்ற ஆகம அபிப் பிராயமும் முன்னிற்கும். இவற்றுக்கு அவகாசம் ஏற்படா வண்ணம் இவர்களது வைதிக இயல்பையும் அது அவர்களின் சைவ உயர்நிலைக்கு வாயிலாயமைய அவர்கள் சிவபக்தர் களாய் விளங்கியவாற்றையும் திறம்படத் தெரிப்பர் சேக்கிழார்.

"வருமுறை எரிமூன் ருேம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியிற் செல்லும்
அருமறை நான்கி னேடா றங்கமும் பயின்று வல்லார்
திருநடம் புரிவார்க் காளாந் திருவினுற் சிறந்த நீரார்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிகர் சாஸ்திரம் பூர்வமீமாஞ்சை என்பது. அது, 'அதாதோ தர்ம ஜிஜ்ஞாசா' —இனி தர்மம் பற்றிய ஆராய்ச்சி —என ஆரம்பிக்கின்றது. எதையும் நன்கு விளைத்தற்கு உரிய சாதனமெனச் சுருதியால் விதிக்கப்பட்டதெதுவோ அதுவே தர்மம். அது யாகாதிகளே என்ற கருத்து அந்நூலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கிணங்க அவர்கள் யாகாதிகளை முறைப்பட இயற்றி உயிர்கள் அருட்செழிப்பில் திகழ வைத்தார்கள். வைதிகத்தின் குறிக்கோளாகிய தர்மத்தை அவர்கள் அவ்வகையால் ஓம்பினார்கள். இங்ஙனம் வேத வேள்வியியற்றும் பிறரில் அநேகர் இதுவே முதலும் முடிவுமென்று நின்றுவிடுவார்கள். அவர்கள் உத்தரமீமாஞ்சையையும் மதிப்பதில்லை. இவற்றைத் தந்த கடவுளையும் பொருள்செய்வதில்லை. அவர்கள் வேதத்தையும் வேள்வியையும் மாத்திரம் உபாசித்துக்கொண்டு வேள்வியே பலன்தரும் தெய்வம் வேண்டாம் என இறுமாந்துவிடுவார்கள். அவர்களை மீமாஞ்சகர் என்ற பெயரில் புறச்சமயத்தே ஒதுக்கியுள்ளது சைவசித்தாந்தம். அவர்களே வெறும் வைதிகர். பிற்காலத்தில் ஸ்மார்த்தர்' எனப்பட்டோரும் அவரே.

தில்லைவாழந்தணர்கள் அந்நிலையினரல்லர். அவர்கள், 'தருமமே பொருளாக்கொண்டு தத்துவநெறியில்' சென்றவர்கள். தருமமாகிய வேள்வியைப் பொருள் செய்து உலகில் அருளை மிகுவித்துக் கொண்டு மெய்ப்பொருள் ஆராய்ச்சியிற் சென்றவர்கள். தத்துவநெறி—மெய்ப்பொருள் ஆராய்ச்சி.

பூர்வமீமாஞ்சைக்கு அடுத்தது உத்தரமீமாஞ்சை. அது, 'அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாசா'—இனி பிரமம் பற்றிய ஆராய்ச்சி —என அடியிட்டுத் தொடங்குகிறது. பிரமத்தின் இயல்பை நன்கு விசாரித்துப் பிரஹ்மோபாசனை பண்ணுதல் ஞானம் என்ற பொருள் அதிற் பிரதிபாதிக்கப்படுகின்றது. இதனைப் பிரமாண நூலாகக் கொண்டோர் பலர், 'நானே பிரமம்' என்ற ஒரு சுழியில் அகப்பட்டு ஏகான்ம வாதியராயும் அதற்கினமான பிறவகையினராயும் ஆகிவிடுகிறார்கள். 'நானே பிரமம்' என்ற பின் அவர்களுக்கு, ஆராதனையுமில்லை; ஆளாந்தன்மையுமில்லை, அடித்தொண்டுமில்லை. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களையும் புறச்சமயிகள் என்றே கண்டிருக்கின்றது சைவ சித்தாந்தம். அவர்கள் புறம் ஆயினமைக்குப் பிரதான காரணம் ஆகமநெறிக்கு அவர்கள் புறமாயிருத்தல் ஆகும்.

தில்லைவாழந்தணர்கள் இக்கதிக்கு ஆளாகிற்றிலர். 'நான் பிரமம்' என்ற உணர்வே ஞானம் என்ற நிலையில் அவர்கள் இல்லை. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தெரிவித்தருளியவாறு 'ஞானம் ஈசன்பாலன்பே' எனத் தெளிந்திருந்தார்கள் அவர்கள். அதனால் அவர்கள் நடராஜப்பெருமானுக்கு ஆளாந்தன்மை யெய்தினார்கள். இது வைதிகம் பற்றிய பொதுநிலையிலிருந்து அவர்களை எத்தனையோமடங்கு சிறப்பித்துயர்த்திக் காட்டுவதாயிற்று. இக் கருத்தைத் தெரிவிக்கும் சேக்கிழார் செய்யுட்பகுதி முக்கியமானது.

'' திருநடம் புரிவார்க் காளாந் திருவினாற் சிறந்த நீரார் ''

என்பது அப்பகுதி. திருநடம்புரிவாராகிய நடராஜப்பெருமானுக்கு ஆளடிமைத்தொண்டு பூண்டிருந்தமையே அவர்கள் திரு. அத்திருவினால் அவர்கள் சாதாரண வைதிக நிலையிலிருந்துமட்டுமன்றி ஏகான்மவாதநிலையிலிருந்தும் உயர்ந்து சிறந்து தோன்றினர் என்ற விளக்கம் இப்பகுதியில் தரப்படுகிறது. இன்னும், அவர்கள் ஆகம ஆராய்ச்சியில் மிக்கிருந்தார்கள் எனப் பின்வரும் கருத்தொன்று இத்தன்மைக்கு மேலும் ஆதாரமாகிறது. 'ஞானமே முதலாம் நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்' என்பது அடுத்துவரும் அக் கருத்தாகும். அவர்களுடைய நாற்பாத விசாரணைத் திறம் இதனாற் பேசப்பெறுகிறது. நாற்பாதங்கள் ஆகமங்களுக்கமைந்தவை. அவற்றைச் சரியை முதலாக எடுத்தோதுவதே வழக்கம். இங்கே 'ஞானமே முதலா'......என வருகின்றமை கவனித்தற்குரித்து. இங்கு ஞானமுதல் என்பது சரியை முதல் என்பதுபோலன்று.

நாற்பாதங்களில் ஞானமே முக்கியம். ஏனை மூன்று பாதங்களும் அதற்கு முன்னோடியாய் அமைபவை. அவற்றை அனுட்டிப்பதன் நோக்கமும் பெறுபேறும் ஞானமே. அவ்வகையில் ஞானமே முதலாம் என்பதற்கு, ஞானத்தையே முதன்மையாக—பிரதானமாகக்கொண்ட என்று கொள்ளும் விசேட பொருள் உளதாகும். அவர்கள் நாற்பாதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயந்திரிபறத் தெரிந்து அதனாலும் மேம்பாடுடையவ ராயினர்கள் என்பது இத்தொடர்ப் பொருளாகும். இன்னும் ஞானத்தை முற்கொண்டு கூறியமையானே அவர்கள் அனை வரும் ஞானிகள் என்பதும் தெரிவிக்கப்பட்டவாறுயிற்று. அன்றியும், இத்தொடர் குறிப்பிடுவது ஆகம ஆராய்ச்சி யையே என்பதும் இதனாலே பெறப்படும். ஞானபாதம் முத லாகக் கூறுதல் ஆகம மரபேயாகும்.

இவ்வெல்லாவற்றுக்கும் மகுடமிட்டாற்போல அமை கின்றது அவர்கள் சிவனடியார்கள் என்ற கருத்து.

"உறுவது நீற்றின் செல்வம்
எனக்கொளும் உள்ளம் மிக்கார்
பெறுவது சிவன்பால் அன்பாம்
பேறெனப் பெருகி வாழ்வார்"

என்ற செய்யுட்பகுதி அவர்கள்பால் அமைந்திருந்த திருநீற் றன்பும், சிவ அன்பும் துலங்க நிற்கின்றது. 'பத்தி தருவது நீறு'. ஒருவர் திருநீற்றன்பர் என்றால் திரும்ப 'சிவபக்தர்' என்பது சொல்லவேண்டா. இருந்தும் இங்குச் சொல்லும்படி யாயிற்று, ஏன்? சிவபத்தியொன்றே அவர்கள் எதிர்பார்ப்பின் முடிவான பேறு. அப்பால் எதுவும் அவர்பால் இல்லை என்பதற்காக. "அன்பே அமையும் அதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே" —அப்பர்.

வேத வேள்வியாளர்களாகிய தில்லைவாழந்தணர்கள் தத்துவ ஆராய்ச்சியின் மிக்கவர்களாய்த் தம்மையுணர்ந்து தலைவனாகிய நடராசப்பெருமானுக்கு ஆளடிமைத்திறம் பூண்டு, நாற்பாத உணர்வின் மிகுந்து சிவஞானிகளாய் திரு நீற்றன்பும் சிவ அன்பும் மேலிட்ட சிவனடியார்களாய் விளங் கிய திறம் இங்ஙனம் சேக்கிழாரால் வகைபெற விரித்து விளக்கப்பட்ட இயல்பு போற்றற்பாலதாகும்.

இந்நிலையில் இம்மையே நடேசப்பிரானுக்கு அணுக்கத் தொண்டுபூண்டு சிவகணங்களாம்படி விளங்கிய அவர்களைப் 'பெருமைக் கெல்லை யாயினர்' எனவும் 'இனிப்பெறும் பேறொன் றில்லார்' எனவும் சேக்கிழார் போற்றுவதும், 'வீடுந் துறந்த நெறியார்' எனத் திருத்தொண்டர் புராணசாரந் தெரிப் பதும் யதார்த்தமே யதார்த்தம்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தபோதனர் தீரவே பசித்தார் செய்வதென்?'

தம் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருள்வது இறைவன் அருட்செயல்களிலொன்று. பூமியில் வாழ்ந்து பாசவைராக்கியம் முதிரப்பெற்ற பக்குவம் வாய்ந்த அன்பர் மனைகளில் அவர் எழுந்தருளிய செய்திகள் பெரியபுராணத்தில் இடம்பெறுகின்றன. அத்தகைய அருள் நிகழ்ச்சிகள் இறைவனுடைய நவந்தருபேதங்களில் ஒன்றாகிய மகேஸ்வரரால் நிகழ்வன என்பது அபிப்பிராயம். அங்ஙனம் மாறுவேடங்களில் தம்மனைக்கு எழுந்தருளிய மகேஸ்வரனை அன்பர்கள் முகமலர்ந்து வரவேற்று அகனமர்ந்த அன்பினோடுபசரித்து அமுதூட்டிப் பேறுபெற்ற உண்மைகள் அச்செய்திகளில் வெளியாகின்றன. அவ்வநுபவத்தின் வழிவழி சிவனடியாரை வரவேற்றுபசரித்து அமுதூட்டும் நிகழ்ச்சி மகேஸ்வர பூசை எனப் பெயர் பெறுவதாயிற்று. வந்த அடியவரை மகேஸ்வரராகக்கொண்டு பூசித்தல் மகேஸ்வர பூசையின் முக்கியாம்சமாகும்.

இளையான்குடி யென்பது தென்னகத்தில் ஓரூர். அங்கு சூத்திர குலத்தில் 'மாறன்' என்ற பெயரில் மெய்யன்பரொருவர். சூத்ரா: ப்ரேஷ்யகரா: — சூத்திரர் என்போர் ஏவல் மேவல் செய்பவர்கள் என்ற விளக்கம் வடமொழியாளர் வழிமரபில் வந்த ஒன்று. இங்கு அக்கருத்தில் அது இடம்பெற்றிலது. இம்மெய்யன்பர் சுயமாகத் தொழில் நடத்தும் ஒரு வேளாண் செல்வர். வேளாண் தொழிலின் ஆத்மிகப் பண்பாகிய வாய்மையையும் அதனிலக்கணத்தையும் அடைமொழியாகக் கொண்டே இங்கு சூத்திரகுலம் சேக்கிழாரால் அறிமுகஞ் செய்யப்படுகிறது.

'நம்பு வாய்மையின் நீடு சூத்திர நற்குலம்'

சூத்திர குலப்பண்பு வாய்மை. வாய்மையின் பண்பு நம்புதற் கிடனாந் தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கிருந்த பூருவஜன்மப் பயிற்சி வசத்தால் மகேசுர பூசைத் தொண்டு யதோக்தமாக நடைபெறுகிறது. மகேஸ்வரரை வரவேற்கும் இலக்கணத்துச்கு அவரே இலக்கியமாகிறார். அவரைத் தொட்டுக் கூறுகிறபோது சேக்கிழார் வாக்கில் அவ்விலக்கணம் சோபிக்குமளவுக்கு எல்லேயேயில்லே.

" ஆர மென்பு புனைந்த ஐயர்தம்
அன்ப ரென்பதோர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினும்
நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்ப துரப்ப தம்பரி
வெய்த முன்னுரை செய்தபின் "

" கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு
சுவைத்தி றத்தினி லொப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி
னமுது செய்ய அளித்துளார் "

இச்செய்யுட்களின் ஓசையும் பொருளும் மகேஸ்வரர் வரவேற்பின் உயர்பண்பை ஒற்றித்து நின்றுணர்த்தும் பாங்கு நயமாயிருக்கின்றது. வரவேற்பில் நிகழும் பரிவிருந்தவாற்றைச் சொற்றொடர்கள் உணர்த்துகின்றன. வரவேற்பின்கண் விரையும் அவருடைய உள்ளத்தின் விரைவைச் செய்யுளோசை குறித்துணர்த்துகின்றது (Suggests).

'வந்தவர் யாவர்' என்பதில்லே. சிவவேடங்கண்ட அளவில் மெய்யடியாரே என்ற மனப்பதிவு. அவ்வளவுக்கு அநந்நியமான பக்தி. 'இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக் கவராதே தொழுமடியார்' என அப்பர் விதந்துரைத்த அடியாரினத்தைச் சார்ந்தவர் அவர். முன்னேடிஉபசாரங்களிற் செழிக்கும் பரிவுக்கு எவ்வகையிலும் சோடை போகாது சமையற் பரிபாகச் செழிப்பு.

'நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில்' அமைந்த திவ்வியமான உண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவனடியார் விருப்பு வெறுப்பின்றி எதையும் சாப்பிடுவார்' என்பது வேறு. அடியார்க்கென விசேட சுவைமிக்க உணவு தயாரிப்பது வேறு. உண்பார் நோக்கிலமைதற்பாலது அது. ஊட்டுவார் நோக்கில் அமைதற்பாலது இது. சுவையுணர்வு தோன்ருமலே உண்ணவேண்டிய நிலை அடியார் நிலை. அந்நிலையைப் பேணிப் போற்றவேண்டியது ஊட்டுவார் கடன். உணவில் ஏதேனும் ஒரு சுவைக் குறைவிருந்து அது காரணமாக அவர்க்கு மறக்கப்பட்டுக்கிடந்த பழைய சுவையுணர்வு வாசனை தலைகாட்டச் சிறிது சந்தர்ப்பம் அளிக்கப்படுமாஞல் அது அவர்க்கு ஊட்டுவாரிழைத்த ஒரு தவருய்விடும். ஆதலால் அடியார்க்கு அமுதூட்டுபவர்க் கிருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சி மிகப் பெரிது. கோயிற் பூசைக்குத் திரவியங்கள் அளித்தலிலும், நைவேத்தியந் தயாரித்தலிலும் அமையவேண்டிய பொறுப்புணர்ச்சியும் இத்தகையதே.

'இச்சையி னமுது செய்ய' என்பதில் இச்சையின் என்ருல் விருப்பத்திற்கிணங்க என்பது பொருள். இதை அடியார்க்குச் சார்த்தியுரைத்தல் சிறக்காது. ஊட்டுவார்க்குச் சார்த்தியுரைத்தலே உசிதமாகும். ஊட்டுபவர் தம் எண்ணம் நிரம்ப அடியவர் உண்ணுமாறு கண்டு பூரிக்க வேண்டும். ஊட்டுபவர் காணும் உடனடிப் பெறுபேறு அதுவேயாம்.

இங்ஙனம் மகேசுரபூசைக்கொடை நாளுக்கு நாள் பெருகுகிறது. அத்தனைக் கத்தனை அன்பர்வளம் நாளுக்கு நாள் சுருங்குகிறது. எல்லாம் இறைவன் செயல். பொருள்வளம் உள்ளநிலையில் இதுவரை அவரது மகேசுரபூசைச் சிறப்பைச் சிவபெருமான் தோன்ற வைத்தார். இனி, வளமற்ற நிலையில் வைத்து அதனை அவரே தோன்ற வைக்கப் போகிருராம்! சொல்கிருர் சேக்கிழார்.

வளஞ் சுருங்கியும் அன்பர் உளஞ்சுருங்கிய பாடில்லை. உடைமைகளெல்லாம் விலைபோயின. தம்மை விற்றே தீர்க்க வேண்டிய அளவுக்குக் கடன் பளுவும் ஆயிற்று. இறுதிக்கட்டத்திற் சில நாள் அடுப்பிற் காளான் பூத்தநிலை. அன்பரும் மனைவியும் தொடர்ந்து சிலநாள் பட்டினி.

மாரிகாலம். அடைமழைநாள். நள்ளிரவு. அன்பரும் மனைவியும் பசியை அடக்கும் ஆற்றலுங் கைபோய்விட்ட அயர்ச்சிநிலையில் உறக்கம்............ மழையில் நனைந்து வந்த ஒருவர் கதவில் தட்டுகிருர். எழுந்து பார்க்கிருர் அன்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவரோ சிவனடியார். பசியாலிளைத்த பரிதாபக்கோலம். ஈரம் நீக்கி இருக்கை தரப்பட்டாயிற்று. 'இவருக்கல்லவோ இப்போதல்லவோ அமுதூட்ட வேண்டும்' என்ற ஆசை அன்பருளத்தில்.

இந்நிலையில் மாறற்கும் மனைவியார்க்கு மிடையில் ஒரு அந்தரங்க சம்பாஷணை. முன் பின் கஷ்ட நிலைமைகளைத் தொட்ட ஒரு சொல்லேனும் மனைவியார் வாக்கில் வெளி வரவில்லை. ஒரே ஆள் இரண்டு கதாபாத்திரங்களாகி எதிரெதிர் நின்று நடிப்பது போல்வதோர் அமைதி. ஒரே உள்ளமே இருநிலையெய்தி எதிரெதிர் பேசுவதுபோலிருக் கிறது அச்சம்பாஷணையின் அன்யோன்யம்.

'தபோதனர் தீரவே பசித்தார், செய்வதென்' அன்பர் வினு. மனைவியார் யோசனையிலாழ்கிருர். 'நாங்கள் பட்டினி யிருப்பது ஏதோ உண்மைதான்! இவர்க்கு இப்போ அமு தமைக்க ஒரு வழிசொல்' என்கிருர் அன்பர் மீண்டும். ஒன்றுந் தோன்றவில்லை. அயலாரில் எமக்குக் கடன்தர வேண்டியவர் இனி ஒருவரும் பாக்கி இல்லை. தூரஇடங்க ளிற் போய்க் கடன் பெறுவதற்கும் காலம் அகாலமாய் விட் டது. என் தீவினைப்பயனே இந்தநிலை' என்பது மனைவியார் பதில். இத்தொடர்பில் இடம்பெற்ற மௌனத்திரையைக் கிழித்துக் கொண்டு எழுந்தொலிக்கிறது மனைவியார் குரல். 'இன்று பகல் வயலில் விதைத்த நென்முளைகள் இந்நேரம் வயல் வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கும். அதை வாரிக் கொண்டு வந்தால் ஏதோ இயன்றவாறு அமுதாக்கலாம்'.

இவ்வுபாயத்தைச் சொன்னதுஞ் சொன்னுர். ஆனுல்,

தள்ளாப் பருவத்தினராகிய கணவரோ போதாக் குறைக்குப் பட்டினியாலும் வாடியநிலை. மழையோ ஓயாத அடைமழை. இருளோ காரிருள். வயலோ வெள்ளக்காடு. இந்நிலையில் அவ்வுபாயங் கைகூடுவது கஷ்டசாத்தியமே கஷ்டசாத்தியம். இதை நினைக்கவே மயக்கம் போட்டுக் கொண்டு வருகிறது மனைவியார் நிலை இது. 'அல்லதொன் றறியேன் என்று அயர்வுற' என்கின்ருர் சேக்கிழார்.

அதைக் கேட்ட கணவரோ, 'பழந்தன மிழந்தன படைத் தவரை ஒத்தார்'. இழந்த பழஞ்சொத்து எங்கோ கிடக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு யாரோ சொல்லக் கேட்டவரை ஒத்தார். கையோடே அதை எடுத்துக் கொள்ளத் துணிந்தவர் போலாஞர்.

'உற்ற காதலி ஞலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார்'

தலையில் கவிழ்த்ததொரு கூடையுடன் இருளில் வழிதடவிப் புறப்பட்டார் அன்பர். இருளின் உருகுபதம். வெளியிற் போஞல் தம் உருவமே மைக்குழம்பாய்விடுமோ என்ற அச்சத்தின் பேரில் ஆரும் வெளியில் தலைக்காட்டாது சாவதானமாக அங்கங்கு முடங்கிக்கொண்ட சமயம். பழைய பயிற்சிக் குறிப்பே கண்ணுக எப்படியோ வயலையடைந்து நென்முளை வாரிக் கூடையை நிரப்பிக் கொண்டார்.

விருந்தோம்ப லின்பத்தில் வேட்கை தளைந்து நிற்கையில் விதைத்த நெல்லையாவது விட்டுவைக்க இசைவு எப்படியாகும்? ''வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்'' என எப்பவோ சொல்லிவிட்டார் திருவள்ளுவர்.

இதுவரை விளைந்தவையாய்க் கிடந்தவை முற்ருக உண்ணப்பட்டொழிந்தன. மேலைக்கு வித்தாயிருந்ததும் விளைநிலத்தை விட்டு அகற்றப்பட்டாயிற்று. சித்தாந்த பரிபாஷையில், விளைந்தவை—அநுபவத்துக்குப் பக்குவப்பட்டவை. அவை சஞ்சித பிராரத்தங்கள். மேலைக்கு வித்தாயிருந்தவை ஆகாமியங்கள். மாறருக்கு அவைகளும் அற்றெழிந்தன. இவைகளும் அற்றெழிந்தன. 'மேலைக்கு வித்துமாகி விளைந்தவை யுணவு மாகி' என்ற சித்தியார்ப் பொருள் இத்தருணத்திற் சுவைக்கின்றது.

உத்தேசப்படி நெல் எடுத்துக்கொண்ட மாறர் மீண்டு வீட்டெல்லையளவும் வந்துவிட்டார். வழிமேல் விழிவைத்தபடியே வாசலில் நின்றுகொண்டிருந்த மனைவியார் அவர் வந்ததும் வராததுமாகவே கூடையை வாங்கி நெல்லைத் துப்பரவாக்கிக் கொண்டார். அடுப்பில் மூட்ட விறகில்லை. இது அடுத்த பிரச்சினை. வீடு மாறப்போகிருர் போலும் மாறர்! வீட்டுவரிச்சுகளை அறுத்து விறகாகக் கொடுக்கின்ருர். நெல் வறுத்துக் குற்றி அமுதும் ஆயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறிக்கினி யென்செய்வோம்? இது மனைவியார் வாய் மொழி. இது அவர் கேட்டமாதிரியாக இல்லை. கெஞ்சிய மாதிரியாகவும் இல்லை. இறைஞ்சியதாகவே அமைந்தது அதன் பண்பு. 'கறிக்கினி என் செய்வோம் என்றிறைஞ்சி னார் கணவனாரை' என்கின்றது சேக்கிழார் வாக்கு. இக் கட்டத்தில் இதைச் சொல்லுவதற்குத்தான் எத்தனை துணிவு வேண்டும்? அது பற்றிய அச்சம் இறைஞ்சுவித்தது மனைவி யாரை.

வழிகாட்டும் பரமன் இடையில் விடவா போகிறான் தன்பணியை. அன்பர் உள்ளத்தில் வழிபுலனாகின்றது. அடுத்தகணம் அவர் தமது வீட்டுக் கொல்லையில். குழிநிரம் பாச் சிறுபயிரினங்கள். வெள்ளத்துள் மூச்சடங்கித் திணறிக் கொண்டிருந்தவை. காலால் தடவி இனங்கண்டு கையாற் றடவிப் பிடுங்கிக் கைநிறைய எடுத்துக் கூடைநிறையப் பெய்து கொண்டார். அவற்றுக்கும் மீட்சி; அவருக்கும் மீட்சி யாய்ப் போயிற்று. பாசமுதலாகிய ஆணவசத்திகள் ஒட்டித் தப்பிக் கிடந்தனவெல்லாம் வேரொடு பிடுங்கப்பட்டவாறா யிற்று. 'பாசவே ரறுக்கும் பழம் பொருள்' செயல்தானே அது!

அந்த அருந்தருணத்தில் திருப்திக்குமேல் திருப்தியாக அமைந்தவை அக்கறிகள். அவற்றைப் பெறுவதில் மனைவி யார்க்கு மகிழ்ச்சி பெரிதாயிற்றாம். அந்த 'மனமகிழ் கறிகளை' ஆய்ந்து அட்டிற்றொழில் வன்மையினாலே வகைவகையான கறிபதார்த்தங்களு மமைந்தன. இனி அமுதூட்டுவதே பாக்கி.

இதற்கிடையில் அறிதுயிலோ? அயர்துயிலோ? வந்த மாகேஸ்வரர் துயில் கொண்டிருக்க வேண்டும். மாறர் அவரைத் துயிலுணர்த்த அருகிற் சென்றார். சேக்கிழார்க்குத் தம் குதூகலத்தை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம். 'உணர் விஞ லுணரவொண்ணா ஒருவரை உணர்த்தவேண்டி அணையமுன்' சென்றுநின்றார் என்கிறார். அணைந்துநின்ற அன்பர் பிரார்த்தனை, 'அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால் எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுது செய்தருள்க' என்று ஒலிக்கின்றது. நாயனார்க்கும் மனைவி யார்க்கும் ஒரே திகைப்பு. அந்தப்பக்கம் முழுவதும் ஒரே பெருஞ்சோதி மண்டலம்! அச்சோதிக்குள்ளாக, சிவபரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தேவியோடும் இடபவாகனத்திற் காட்சியளிக்கின்றார். சோதிக்கூடாகச் 'சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதி' ஒளிர்கின்றார். அருளிச் செய்கின்றார்.

'அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்புநின் றேவல் செய்து மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்கவென்றே அருள்செய்தான்எவர்க்கும்மிக்கான்'

மாறர்க்கும் மனைவிக்கும் இனி வாழ்வு சிவலோகத்தில். அங்கும் மகேசுர பூசைதான் போல இருக்கிறது. குபேரன் நிதியம் ஏந்திக்கொண்டு அவர்களின் ஏவல் மேவல் வினவி நிற்கும்படியாக ஏற்பாடாகியிருக்கிறதாம். கொடுக்கும்போது குறைவறக் கொடுக்கத் தெரிந்தவர் சிவபெருமான்.

அங்கு நிகழும் மகேஸ்வரபூசையெனில் அது இங்கு நிகழும் மகேஸ்வரபூசைகளுக்கான பிரேரகமாதல் கூடும். 'பரலோகம் முழுதாண்ட பான்மையோரே' என்று இவ் வடியார்களைப் பற்றித் திருத்தொண்டர் புராணசாரந் தெரிவிப்பதிலிருந்து இவ்வூகம் சரியானதெனத் தெரிகிறது. இந்த இளையான் குடிமாறநாயனார் எங்கள் மகேஸ்வரபூசை இலட்சியம்.

இக்கதை நிகழ்ச்சியின் சிறப்பிற் பெரும்பங்கு நாயனாரின் மனைவியாரைச் சாரும். மிகப் பத்தியமான பவ்வியமான பாத்திரம் அவர். 'மேம்படு கற்பின் மிக்கார்' என்று அவரைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார். கற்பிலக்கணம் மிக விரிவுபட்ட ஒன்று. பரபுருஷரை மனத்தாலுந் தீண்டாமை மட்டுமே கற்பிலக்கணம் என்பது சர்வசாமானியம். அதன் சிறப்பியல் புகளாக அமையக்கூடியவை வேறும் பலவுள. சுமுகமான சூழ்நிலையில் அவை பலரிடத்தில் நிலைபெறல் கூடும். விஷமமான சூழ்நிலையில் அவை சிலரிடமேனுந் தரித்தல் அசாத்தியம். இத்தன்மையில் மாறர்மனைவியார் ஒழுகலாறு ஒரு சாதனை எனலாம். கணவர் குறிப்பறிதல் மட்டிலல்ல, குறிப்புக்கமைதல் மட்டிலுமல்ல, ஆகவேண்டிய காரியத்தின் தகுதியறிந்து பகுதிபகுதியாக ஆகற்பாலதைத் தெரிவிக்கும் அடக்கம், அசந்தர்ப்ப வசமாக எதுவும் பேசாப் பொறுமை போன்ற அரும்பண்புகளை விஷமமான சூழ்நிலையில் கடைபோகக் கடைப்பிடித்திருக்கின்றார் அவர். இத்தன்மையே மேம்படு கற்பின் மிக்கார் என்ற போற்றுதலை அவர்க்குத் தந்திருக்கின்றது.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பொய்தரும் உள்ளமில்லான் பார்க்கிலன் போனான்'

சரித்திர இதிகாச இலக்கியப் புகழ் மலிந்த காவிரிப்பூம் பட்டினத்திலே ஒரு வணிகர். செல்வச் செழிப்பினால் மிக்கவர். எனினும், செல்வச்செழிப்பு நம்மவரை எந்நிலைக்கிட்டுச் செல்லுமோ அந்நிலைக்கு ஆளாகாதவர். நமக்குளதாம் செல்வச் செழிப்பு நம்மை என்செய்யும்? அசத்தியல்பாகிய உலக ஆசாபாசங்களிலே அளவுக்குமேல் நம்மை அழுத்தும். அழுத்தி அழுத்தி நம்மையும் அசத்தாம் நிலைக்கே இட்டுச்செல்லும். தன்னைப் பேணுவதற்கென்றே நம்மை இறைவன் படைத்திருப்பதாகக் காட்டவும் பார்க்கும். இங்ஙனம் நம்மைத் தன் வசப்படுத்தித் தனக்குப் பயன்படுத்துகிற செல்வத்தை அவர் தமக்குப் பயன்படுத்திக்கொள்கின்றார். சத்தியல்பாகிய தொண்டுநிலையில் நின்று அவர் தம்மைச் சத்தாக்கிக்கொள்ளும் நிலையை வருவித்தற்கு அது பயன்படுகின்றது.

சிவனடியார்கள் எதை விரும்பி வந்தாலும் அதை அப்படியே கொடுத்துவிடுவது. அவர்க்கு மற்றெக்குறை இருந்தாலும் அதைத் தம்முடைய உபயமாக ஏற்று நிறைவேற்றி விடுவது. இதற்கே அவர் செல்வமெல்லாம் செலவாகின்றது. இவ்வகையால் நாள் ஏற ஏற அவருடைய சத்தாம் நிலையும் மெருகேறி ஏறி முடிநிலை எய்தும்பதம். பதங்கண்டு பலனளிக்கத் திருவருள் முற்படுகிறது.

சிவபெருமானுக்கு ஒரு பிரியமுமில்லை என்பதும் இருக்கவே இருக்கிறது. என்னவோ நாமறியோம்! அடியார்களின் ஆன்மஞான உறுதி வைராக்கிய நிலைகளில் ஏதேனுமொன்றைத் தொட்டுத் தீண்டி அதைத் தலையெடுத்தாடவிட்டுக் காட்டுதலில் அலாதிப்பிரியம் அவருக்கு. இந்த நாயனாருடைய தொண்டுறுதியிலும் தொட்டுத் தீண்டிவிடக்கூடியதாக ஒரு திட்டமிட்டுக் கொள்கின்றார் சிவபெருமான்.

இக் கட்டத்தில், இக் கதையைச் சொல்லும் சேக்கிழாருக்கு ஒரு சிறு சந்தேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்பர் நாயகிக்கு மஃதறியவோ
பிரியா நங்கை தாணறி யாமையோ?"

உமாதேவியாரும் அறியத்தானே அல்லது அறியாமலோ ?

அறிந்திருந்தால் அது நடந்திருக்கவே முடியாது. அவ்வளவு காழ்ப்பான விஷயத்திலே காலூன்றி நிற்கின்றது அவர் திட்டம்.

பொன்மயமான திருமேனியில் புனிதமான வெண்ணீற்றுப் பூச்சு. இளமை கொழிக்கும் எழிலுரு. பரத்தை வீட்டுப் பக்கம் உலாவியதற்கான சில அறிகுறிகளும் உடலில் அங்கும் இங்கும். சாதியால் சிவவேதியர். இப்படியே புறப்பட்டுவந்தார் சிவபிரான். இவ்வாறு அவர் தாங்கிவந்தது மாயவண்ணம். வந்துகாட்டஇருப்பது (தம் தொண்டரின்) மருதவண்ணம் என்கின்றது சேக்கிழார் சொற்சித்திரம்.

அடியவர் வீட்டில் குளிர்ச்சியான வரவேற்பு. இன்முகம், எதிர்செலல், பாதபூசை, சத்காரம் ஆகிய அனைத்தும். அதற்கு மேல் உரையாடல்.

வந்தவர் விருப்பைத் தெரிந்துகொள்ள அவாவி நிற்கிறது அடியவர் முகபாவம். வந்தவரும் கண்டிப்பான பேர்வழி. தம் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கே நிபந்தனை யொன்றை முன்வைக்கின்றார். உரையாடல் தொடர்கிறது.

'உம் செயல்பற்றி நன்கு கேள்விப்பட்டுத்தான் வந்துள்ளேன். உம்மிடத்தில் ஒன்று வேண்டிக்கொள்ளுதற்குளது. அதற்கு உம்தரப்பில் ஏதும் மறுப்பிருக்கக்கூடுமோ என்பது சந்தேகம். அப்படியல்ல, கேட்பதற்கு இசையலாம் என்பது உம் நிலையானால் யான் அதைச் சொல்லலாம்.'

'யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில்
அன்னது எம்பிரான் அடியவர் உடைமை
ஐய மில்லை நீர்அருள் செய்யும்.'

இதற்கு, வந்தவர் பதில் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்த தீங்கு'.

அவ்வளவில், அடியவர் மகிழ்ச்சி தன்னை மறந்து ஒரு துள்ளுத் துள்ளுகிறது. ஏன்? நம்மிடம் உள்ளதொன்றைத் தானே கேட்கப்பெற்றது என் நல்லதிர்ஷ்டம்! இது என் பேரில் விளைந்த ஒரு பெருங் கருணையல்லவா, ஆஹா?, என்றிருக்கின்றது. அவர் உள்ளப் பரிமளிப்பு.

காலதாமசமில்லை. அடுத்தகணம் அடியவர் மனையாள் முன்னிலையில். அடுத்தகதை தொடுத்தகதை கிடையாது. 'இன்று உன்னை இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்.' அவ்வளவே பேச்சு.

உள்ளதெதையும் மெய்த்தவர்க்குக் கொடுப்பதே கணவரியல்பு என்பது மனைவிக்குப் பழக்கப்பட்டுவிட்ட விஷயம். இருந்தாலும், பெண் பெண்தானே! கேட்டதும் ஒரு சிறு கலக்கம். அதற்கு நிலைகொடுக்காமல் முந்திக்கொள்கிறது அவருடைய அறக்கற்பு. 'என்னுயிர்க்கொருநாத! நீர் உரைத்ததொன்றை நான் செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு' என்றுவிட்டார் மனைவியார். அதனோடமையாது கனிவு குழைவாகக் கணவர் பாதத்தில் வீழ்ந்து ஒரு வணக்கமும். அவ் வணக்கத்தைக் கௌரவிக்கு முகமாக அதற்குத் தான் தாழ்ந்துகொள்கிறது கணவரின் அத்தகைய வணக்கமொன்று.

அந்த உடனேயே வந்தவராகிய அந்தணர் பொறுப்பிற் சொந்த மனையாளைத் தந்து, 'யாது நானினிச் செய்பணி' என ஏவல் கேட்டுநிற்கின்றார் அடியவர்.

'வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே'

தானே வழித்துணையாகிய அவ்வந்தணர் தமக்கு வழிவிடுந் துணை வேண்டுமென்கின்றார். உடனே பரபரப்பாக ஆயத்தம் நடக்கிறது. தமது வாழ்க்கைத்துணையைத் தட்டிக்கொண்ட தம்வழித் துணைக்குத் தாமே வழிவிடுந் துணையாகத் தம்மைச் சித்தஞ் செய்துகொண்டார் அடியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொன்திகழ் அறுவை (ஆடை) சாத்திப்
பூம்பட்டுப் பொலிய வீக்கி (கட்டி)
வாளொடு பலகை (கேடயம்) ஏந்தி'

இப்படியாக ஒரே யுத்த சன்னத்தம். அவர்களை முன்போக விட்டு அடியவர் பின்போகின்றார். எங்கே யாரும் வருகிறார்களோ பார்ப்போம்! என்ற 'முஸ்தீப்பு'.

வந்தேவிட்டார்கள். அக்கம்பக்கம் அண்டை அயலெல்லாம்; உற்றார் உறவினர் சுற்றம் சூழல் ஒருமிக்க மண்டுகிறது. தமது மரபு வழிக்கு வந்துவிட்ட பழியை மீட்க முனைகிறார்கள் அவர்கள். அதற்கெதிரே, தமது உறுதி வழிக்கு வரமுயலும் பழியைப் போக்க முடுகுகிறார் இவர்.

உயிர்ப் பிச்சைக்கு மன்றாடுவனபோல மாதரசியைப் பார்க்கின்றன வந்தவர் கண்கள். 'இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்' என்றொலிக்கின்றது மாதரசியின் வாக்கு.

கடுஞ் சமராட்டம். ஓடிப் பிழைத்தவர் தவிர, மற்றையோர் அனைவரும் கூடிக்களத் தவிந்துவிட்டார்கள். வந்த இடையூறு விலகிவிட்டது. இனி நிர்ப்பயமான வழிநடை. திருச்சாய்க்காடு என்ற ஒரு ஊரெல்லை கிட்டுகிறது. 'இனி நீர் வரலாம்'. அடியவர்க்கு வந்தவர் கொடுத்த விடை.

வணங்கி மகிழ்ந்து கொண்டு, கிருதகிருத்தியனாகிக் கெம்பீர நடையிட்டுத் திரும்புகிறார் அடியவர். வந்தவர் திரும்பி இவரைப் பார்க்கிறார். இவருக்கோ அது இல்லை. நேர்வைத்த பார்வை நேரேதான். என்ன இது?

உடலுறுப்புக்கள் எல்லாம் அசேதனமே. எனினும் கண்ணுக்குமட்டும் மற்றவற்றுக்கில்லாத ஒரு வகைச் சேதனத் தன்மையும் உண்டு. அதனிடமுள்ள கண்ணோட்டம் என்பதொன்று அதற்குச் சேதனத்துவந் தருகின்றது. 'கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை' என அதை ஒரு அழகின் செல்வியாகக் கண்டு காட்டுகிறார் திருவள்ளுவர். அது இல்லாவிட்டால் கண்ணுக்குக் கண்ணாந்தன்மையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லை என்பது அவர் கட்சி. அது நிற்க, இக்கண்பற்றிய மற்றொரு செய்தி இங்கே.

இளைஞனொருவன் தன் புதுமண மனைவியைப் பிரிந்து அவசியார்த்தமாக நடையிடுகின்றான். காலோ, தன்பாதையில் விரைகின்றது. கண்ணோ திரும்பி (பின்தங்கிநிற்கும்) அவளைப் பார்க்கின்றது. பிரியமில்லாமலே பிரியாவிடை கொடுத்துவிட்டுப் பின்னின்று பரியும் அவளை அவன் கண்கள் பார்க்கின்றன. அவள் பரிவுணர்வினூடே பெரியதொரு கற்பனைப்புதிர், அவளுடைய மன அழற்சி அவ்வளவையும் அள்ளித் தூவிக்கொண்டு கிளம்புகிறது.

''மாலோதி நித்தம் தமியேன் வருந்தி வருடப்பெற்ற
காலோ நடந்தன கண்ணோ திரும்பின கற்றவர்க்குப்
பூலோக முந்தரும் மாவலி வாணன் பொருப்பிடத்தே
மேலோ ரிரங்குவர் கீழோரெந் நாளும் விரோதிப்பரே.''

இது அவள் அகவேதனையிற் கருக்கொண்டுயிர்த்த கவிதைச் செல்வம். இந்தக் கவிதாமூலம் அந்தக் கண்.

கண்ணின் மேன்மைக்குணம் அத்தகையது. இங்கே எங்கள் அடியவர் கண் திரும்பவேயில்லை. அங்கே அந்தக் கண் திரும்பியமையில் வைத்து மெச்சுகின்றது அவளுடைய அந்தராத்மா. இங்கே இந்தக் கண் திரும்பாமையை இடமாகக் கொண்டே மெச்சுகின்றது வந்தவருடைய அந்தராத்மா. அத்தகையவரை இனி விட்டுவிடலாகாது என்று அணைத்துக்கொள்கிறது.

'பொய்தரு முள்ள மில்லான்
பார்க்கிலன் போனு னென்று
மெய்தரு சிந்தை யாரை
மீளவும் அழைக்க லுற்றார்.'

சின்னாட் பழகிய அப்பெண்ணை அவ்விளைஞன் கண்கள் திரும்பி நோக்கின. பன்னாட் பழகியிருந்தும் தன் தர்மபத்தினியை ஒரு தரமேனும் பார்க்க இந்த அடியவர்கண் திரும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அதற்கிருந்த விசேடம் கண்ணோட்டம். இதற்கிருந்த விசேடம் பாசவைராக்கியம் அதுவும் ஒருவகையிலான சிறப்பு. இதுவும் ஒருவகையிலான சிறப்பு. அது இக அநுபவச் சிறப்பு. இது பர அநுபவச் சிறப்பு. அது இகாநுபவத்தில் மெய்யாய்க்கிடந்து பராநுபவத்திற் பொய்யாயொழியும். ஆதலால், அது ஒரு பொய்யான மெய். இது அங்ஙனமல்ல. ஆதலால், இது மெய்யான மெய். மெய்யுணர்வுக் காட்சியில் இதன் விளக்கம் இப்படியாகும். இவ் விளக்கமெல்லாங் கொள்ள முகந்துகொண்டு வெளிவருகின்றது, 'பொய்தரு முள்ள மில்லான்' என்ற தொடர்.

ஆன்மாவானது அசத்தைச் சார்ந்து அசத்தாய்நின்று அசத்தைஅறியும் ஒருகால்; சத்தைச் சார்ந்து சத்தாய் நின்று சத்தை அறியும் மறுகால். முன்னையது பெத்தநிலை. பின்னையது சுத்தநிலை. சுத்தநிலையே முடிவான பேறு என்கின்றது தத்துவ ஞானம். அதனால் அசத்தியல்புக்கு அவகாசங்கொடுத்து நிற்கும் அத்தனையும் பொய். அதன் மறுதலையே மெய்.

"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே"

இம் மணிவாசகத்தில் வரும் பொய்ம்மை-அசத்தியல்பு எனக் கொள்ளல் வேண்டும்.

இனி, இந்த அசத்தியல்பு எவர்க்கும் ஒருசேர அகலுமாறில்லை. பலவேறு நிலைகளிற் படிப்படியாக அகலுந் தன்மையது. இறக்கும் ஒருவனின் உயிர்ப்பிரகாசம் படிப்படியாக ஒவ்வோருறுப்பிலுமிருந்து விலகிக் கடைசியாகக் கண்ணிலிருந்தகலுமென்பர். அதேபாங்கில் இந்த அடியவரின் அசத்தியல்பும் எல்லாவற்றினும் விலகி வந்து வந்து கடைசியாக உள்ள கண்ணிலிருந்தும் விலகிவிட்டது. என்றால், அவரை விட்டு அசத்தியல்பு முற்றாகக் குடிபெயர்ந்துவிட்டது என்பது முடிவு. இந்த அடியவர் முற்றத்துறந்த முழுத் துறவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய்விட்ட இயல்பை, 'பார்க்கிலன் போனும்' என்ற இத் தொடரால் உணர்த்தவந்த நயம் இங்ஙனம் கண்டுணர நிற்கின்றது.

இன்னும், 'பொய்தரு முள்ள மில்லான்' என முன், வந்தவர் வாக்கில் வைத்தும், 'மெய்தரு சிந்தையார்' எனப் பின், தம் வாக்கில் வைத்தும் 'பார்க்காது போன' இவ் விர கசியத்தை இரட்டை விளக்கிட்டு விளக்கிய சேக்கிழாரின் உணர்த்துந் திறம் உவந்தின்புறற்குரியதாகும்.

முப்பத்தாறு செய்யுள்களாக அமையும் இச் சரித்திரத்து 144 அடிகளில் இவ்வொரு அடிதானே அந்த அடியவரின் ஆத்ம சுவரூபத்தை அள்ளி அணைத்துக்கொண்டிருக்கும் அரு மையே அருமை!

இங்ஙனம் உலகியலுக்கு விரோதமான ஒரு நெறியில் தம் ஆத்ம சுவரூபத்தைத் தோற்றுவித்தார் இந்த அடியவர். இவருக்கு இயற்கை என்ற பெயரன்றி வேறெப்பெயர் பொருந்தவரும்?

இப்படிச் சூக்கும சத்தாய்விட்ட இந்த நாயனர் தம் காதலியாருடன் அதி சூக்கும சத்தேயான சிவனடி நிழலில் இன்புற்றூர். அப்பேறருளும் பொருட்டாக, கூட்டிச்சென்ற பெண்ணைக் காட்டில் விட்டுவிட்டு, தாம் மறைந்து இடபா ரூடராய் வானில் காட்சிதந்து நின்ற சிவபெருமான் சந்நிதி யில் அவர் வாய்மொழிந்த, 'சொல்லுவதறியேன் வாழி......' என்ற பாடலின் தோத்திரபாவம் சும்மா சாமானியமன்று. தோத்திரநாயகமாகப் போற்றத்தக்கது அது.

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி என்ன.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இன்றெனக் கையன் செயதது யார் செய வல்லார் ?'

ஆயிரத்துத் தொளாயிரத் தறுபத்தோராம் ஆண்டு சித்திரை மாசத்தில் ஒருநாள். அந்தி மயங்கும் மாலைவேளை. பெண்ணையாற்றின் ஓர் ஓரத்திற் பெருகிய புண்ணிய நீரில் ஸ்நானம் பண்ணிய பூரிப்பு. ஈரப்பசுமையோடே அழுத்த மாக விழுந்த வெண்ணீற்றுப் பூச்சு. இவ்வாறு நாங்கள் நால்வர் திருக்கோவலூர் திருவீரட்டான மேலைக்கோபுர வாயிலில் நிரையாக அமர்ந்திருக்கின்றோம். மின்விளக்கொளி யில் மனதுக்கு ரம்மியமான இருக்கை.

நம்மைக் கடந்து போவாரும் வருவாருஞ் சிலர் சிலர். இடையில் 'அரோகரா' என்ற பேரோசை கேட்கிறது. யாரோ ஒருவர் நால்வர்முன்னும் நெடுங்கிடையாக நான்கு தரம் விழுந்து விழுந்து வணங்கியெழக் காண்கின்றோம்.

ஏனையா எங்களைக் கும்பிடுகிறுய்; நீ யாரையா? நம்மி லொருவருடைய கேள்வி இது.

'நான் இந்த ஊர்தானையா; சமயாசாரியர் நால்வரும் ஒருங்கு சேர்ந்தாற்போல இருக்கிறீர்கள். உங்கள் விபூதிக் கோலம் என்னை வசீகரிக்கிறது. எங்கே கொடுங்கள், அந்த விபூதியிற் கொஞ்சம் இங்கே' — இப்படி இருகையும் நீட்டிக் குனிந்து நிற்கின்றுர் அவர்.

என்ன இது? என்பதற்கிடையில், ஓ! அதுதான் இது என்று சொல்லிக்கொள்வது போலக் கிளம்புகிறது ஒரு ஞாபகம். 'ஓஹோ! மெய்ப்பொருள் நாயனுர் இருந்த ஊரல்லவா இது! இதன் மண்வாசனை இப்படி'.

மெய்ப்பொருள் நாயனுர் சேதிநாட்டு மன்னர். திருக் கோவலூரைத் தலைநகராகக் கொண்டிருந்தவர். சிவவேடத் தையே மெய்ப்பொருளாக நம்பி வாழ்ந்தவர். சிவவேடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையே சதா சிந்தை செய்பவர். 'எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் அஞ்சனமுங் கண்டால் ......' என்ற அப்பர் தேவாரப் பொருளையே பிரதிமையாகச் செய்துவிட்டிருக்கிறதோ என்று எண்ணும்படியாக இருப்பார். வேடதாரி யாரென்பதல்ல; வேடமே அவர்க்குப் பொருள். வேடந் தரிசனமான அளவிலேயே விழுந்து பணிவார். அவர் பால் விளைந்து முறுகியிருந்த பக்திவிநயப் பண்பாட்டு முதிர்ச்சி அத்தகையது.

அவருடைய அரண்மனை நுழைவு விதிகளில் அடியாரைக் கட்டுப்படுத்தும் பாங்கில் எதுவுமில்லை. அடியாரெவர் வரினும் தடையின்றி நேரே அரசர் சமுகத்தை அணுகலாம் என்ற பிரத்தியோக விதியும் உண்டு.

தமது அகப்பகை தீர்த்தற்குபாயமாக நாயனர் கொண்டிருந்த இந்நிலைமையைத் தனது அரசியற் பகை தீர்த்தற்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக் கருதுகிருன் அங்கொருவன். அவர் கையிற் பலமுறை தோல்விகண்ட முத்தநாதன் என்பவன் அவன். முக்தம் — மடமை. அவனுக்கு அர்த்தபுஷ்டியான பெயர் அது.

அந்த முக்தநாதன் பக்தவேஷம் பூணுகின்றுன். 'மெய்யெலாம் நீறுபூசி, வேணிகள் முடித்துக் கட்டி, கையினிற் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி' வெகு அலாதியான சிவனடியார் கோலம். வெளித்தோற்றம் விளக்கு. உள்ளூர (வஞ்சனை) இருள். 'மைபொதி விளக்கு' என வகையாக உவமிக்கிருர் சேக்கிழார்.

இப்படியே மாளிகையில் நுழைகிருன் முத்தநாதன். சம்பிரதாயப்படி எல்லாத் தடையும் தாமாகவே விட்டுக் கொடுத்துவிட்டன. கடைசித் தடையிலே நிற்கிருன் தத்தன் என்ற காவற்காரன். அவனுந் தடுக்கவில்லை. சந்தர்ப்பஞ் சரியில்லை எனச் சுட்டிக்காட்டுதல் மட்டுஞ் செய்தான். 'அநுமையான ஒரு ஆகமோபதேசம் செய்ய வேண்டும். முகூர்த்தமும் இதுவே. தவறினுற் பிழை' என்று சாட்டுச் சொல்லிக்கொண்டு உட்புகுந்துவிட்டான் முத்தநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயனத்திருந்த அரசர் பரபரப்பாக எழுந்து தேவியையும் அந்தப்புரப்பக்கம் போக்கிவிட்டு, அவனை வணங்கித் தவிசில் உட்கார வைத்துத் தான் கீழே இருந்துவிட்டார். உபதேசம் பெறுவதற்காக அவர் புலனடக்கித் தலைதாழ்த்தியதே தாமதம். புத்தகக் கவளியைத் திறந்த முத்தநாதன் அதனுள்ளிருந்த வாளைக் கையிலெடுத்தான். தான் கருதியதைச் செய்தே முடித்துவிட்டான். அவன் வஞ்சனைக்கு அது வெற்றிபோல. ஆனால் அரசருக்கோ தோல்வியில்லை. அரசர்,

'சிவவேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்' என்கின்றார் சேக்கிழார். என்னை? அந்நிலையிலும், சிவ வேடமே மெய்ப்பொருள் என்ற அவர் உறுதி சலித்ததில்லை. மற்றொரு விதமாய்ச் சொன்னால், முத்தநாதனின் வஞ்சனை அவர் கழுத்தைத் தீண்டியதேயன்றி அவர் உள்ளநிலையைத் தீண்டவில்லை எனலாம். அதுவே அவருக்கு வெற்றி.

முத்தநாதன் வலிந்து உட்புகுந்த அதே கணந்தொடக்கம் தத்தனின் மனம் அங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஏதோ அசுகைதெரிந்ததும் விறுக்கென உள்ளே பாய்ந்தான். அவன் வாள்வீச்சு முத்தநாதன் கழுத்தைக் கவ்வுதற்கிடையில், உயிருசலாடச் சோரும் அரசர் அச்சக்குறி காட்டித் தடுத்து விட்டார். அதிகம் பேச எப்படி வரும்? 'தத்தா நமர்'. ஆக இரண்டே இரண்டு சொல். தன்வடிவில் இது ஒரு சூத்திரம் (aphorism). நாயனார் சிவவேடத்தின்பாற் கொண்டிருந்த பக்தியுணர்வின் அழுத்தப் பரப்பனைத்தும் இதற்கு வியாக்கியானம். தத்தா! இவ்வேடம் பகைப் பொருளன்று. நம் வழிபாட்டு முன்னிலையான நண்புப் பொருள். அதனால் இவர் பகைவரன்று; நம் உறவர். என்று விட்டது அச்சூத்திரம். ஆடப் படமெடுத்த பாம்பை அடக்கி விட்ட மந்திரமாயிற்று அது.

செயலொழிந்தான் தத்தன். 'யாது நான் செய்கேன்' என்றான். தன் கடமை சார்பான உரிமையறத்தின்படி அவன் செய்யவேண்டியது எதுவோ அது தடுக்கப்பட்டு விட்டது. இக்கட்டத்தில், பொறுப்புணர்ச்சியுள்ள கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனின் உள்ளம் மற்ருேராற்ருல் வெளிப்படுதல் தவிர்க்க முடியாத ஒன்று.

'என் கடமையுணர்வைத் திருப்தி செய்ய எனக்கு எதுவுமே இல்லையா?' என்றெழும் தத்தனின் ஆத்திரக் குரல்தான் இந்த 'யாது நான் செய்கேன்'; இவ்வகையில் அப்பாவியாகிய அடிமையொருவனின் உள்ளநிலை புலனு கின்றது இங்கே. 'தாதனும் தத்தன்' என்று அவனைச் சுட்டும் சேக்கிழார் வாக்குச் சந்தர்ப்பாநுசாரமானது. இத் தகைய தத்தனின் கடமையுணர்ச்சி வேகத்தைத் தம் உள்ள உறுதியைக் கடைபோகச் செய்வதற்கு உசிதமான ஒரு வகையிற் செலுத்தித் திருப்தி செய்துகொள்ள அரசர் தவறவில்லை. அவர் வாயிலிருந்து வெளிவருகின்றது மற்ருே ரறிவித்தல்.

'எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ'.

என்றது அவர் ஆணை. இன்னமும் அரசர் சிந்தனையில் முத்தநாதன், எம்பிரான் அடியாரேதான். அவன் நகரை விட்டு வெளியேறுதற்கு ஆரேனும் ஏதேனும் ஓர் இடை யூறு விளைக்க இடமிருக்குமாளுல் அது இதுவரையும் அவர் பின்பற்றிய ஆத்மீகநெறிக்குப் பேராபத்தாய் முடிந்துவிடும். அவர்தம் ஆத்மீகக் கடமைநெறி தவறினதாகவும் வந்து விடும். 'நன்னெறி காத்த சேதி நாதனுர்' என, பின்வர விருக்கும் சேக்கிழார் புகழ்ச்சியின் தத்துவார்த்தம் முன் கூட்டியே இங்கு புலப்பட்டு விடுகின்றது.

அரண்மனையை விட்டு, முத்தநாதன் வெளியேறினுன். தத்தன் வாள்தாங்கி மெய்க்காவலனுய் அருகில் வந்தான். அதற்கிடையில் ஊர் திரண்டுவிட்டது. அவனை வழிவிலக்க நின்றவர்களிடம் அரசர் ஆணையைத் தெரிவித்து அவர்களை இடைவிலக்கிச் சேமத்துணையாய்ச் சென்று அவனுக்கு ஆபத்தில்லா எல்லையில் விட்டு விரைந்து மீண்டான் தத்தன். அரசரைப் பார்க்க ஆவலோடணுகினுன். தன் வாய்ச்செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பதற்காக, அரசர் ஆவிதாங்கிக் கொண்டிருப்பார் என்பது அவனுக்குத் தெரியும். வந்தது வருமுன்பே,

'வென்றவர்க் கிடையூறின்றி விட்டனன்' என்று தெரிவித்து விட்டான். முத்தநாதன் ஈட்டிய வெற்றியின் இலட்சணக் கேட்டைத் தத்தன் எப்படி மறக்க முடியும்! அதன் பாற் கொண்ட அருவருப்பு, அவமதிப்பு, ஆத்திரம் அவ்வளவுங் கணகணக்கின்றது அவன் இதற்குக் கொடுத்த விசேடணத்திலே.

'செய்தவ வேடங் கொண்டு
வென்றவர்க் கிடையூறின்றி விட்டனன்'

என்று அவன் கூறியதும் நன்றிக்களை தழுதழுக்க எழுந்தொலிக்கின்றது அரசர் குரல். அன்பு மிக்க தாதனுக்கு அரசரளிக்கும் நன்றியுபசார மடல் அது.

'இன்றெனக் கையன் செய்தது
யார்செய வல்லார்.'

இவ்வுபசார மடலின் சொற்சுருக்கத்திலும் அழகுண்டு. பொருட்பெருக்கத்திலும் அழகுண்டு.

இன்று : நாயனுருடைய தொண்டு நெறியிலே என்றும் நேராத ஒரு சந்தர்ப்பம் இன்று. அவர் தம்மியல்பாகிய உடல் மிடுக்கோ அதிகார மிடுக்கோ அற்றொழிந்த தருணம் இன்று. தத்தன் போல்வார் அச்சங் காரணமாகவோ சுய நலங் காரணமாகவோ தமக்குக் கீழ்ப்படிதற்குத் தம்நிலை லாயக்கற்றதா யிருந்த தினம் இன்று. முத்தநாதன் விதி தத்தனது கூர்வாளின் வாயிலிருந்த தினம் இன்று. தத்தன் வழக்கத்திற்கு மாருக, அரசராணையை மீறியும் பழிபூணுதிருத்தற்கு மட்டுமன்றி, அரசரைச் சார்ந்தோரின் புகழையும் வெகுமதிப்பையுந் தட்டிக்கொள்ளவும் வாய்ப்பிருந்த நாள் இன்று. திருக்கோவலூர் தனது அரசபக்தியின் துடிப்பைக் காட்டுவதற்கு அவகாசம் பெற்றிருந்த அரும் பெருந் தருணம் இன்று. எல்லாவற்றுக்கும் மேலாக அரசர் தழுவிய தொண்டியல் வாழ்வின் இறுதி யவசரம் இன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு : முன்னைய யான் வேறு; இன்றைய யான் வேறு. ஏன் அரசியலாயமோ மந்திரச்சுற்றமோ எதுவுமின்றி உவளகத்திருந்த யான் இன்றைய யான். என் அரசுந் திருவும் அற்றொழிய இருந்த யான் இன்றைய யான். உயிரனைய என் உறுதிநெறி கடைபோகாதிடைமுறியும் ஆபத்தில் இருந்த யான் இன்றைய யான். சாமானிய ஒரு காவற்காரனே, நினைந்தால், ஆட்டிப்படைக்கக்கூடிய அளவுக்கு இழிநிலை அவஸ்தையின் விளிம்பில் இருந்த யான் இன்றைய யான் (Utterly helpless).

ஐயன் : ஐயன் என்ற தமிழ்ச்சொல் ஆர்யன் என்ற வட சொல்லோடொப்பப் பொருள்படும். அவ் வொற்றுமை யால் அதன் திரிபே இது என்று காட்ட ஆசைப்பட்டோரு முளர். ஆர்யா :- பூஜ்யா:. ஆர்யரென்றால் பூசிக்கப்படத் தக்கவர். பூஜிக்சுப்படுந் தகுதியை ஒருவருக்கு விளைப்பது அவருடைய யோக்கியதை; தற்பெருமை தழுவாத கௌர வம்; அப்பழுக்கற்ற அமாநுஷீக இயல்பு. ஐயனுக்கும் அர்த்தம் இதுவே. இன்று இச்சந்தர்ப்பத்திற்குத்தகத் தன்னை அமைத் துக்கொண்டமை தத்தனது உயர்ந்த பெருங் கண்ணியப் பண்பு. அரசரின் அந்தரங்க சுத்தியை அணுவளவும் பிசகாமல் எடையிட்டுக்கொண்ட கணியம் அவன் கணியம். அன்றேல், முத்தநாதன் மேல் பொங்கியெழுந்த தன் உணர்ச்சிக் கதிப்பை உடனடியாக மடக்கித் திருப்பிக்கொண்டு முத்தநாதனுக்கு வாளேந்திச் சேவைபுரியுந் தன்மை அவனுக்குத் துர்லபமா யிருந்திருக்கும். இதனால் அவன் ஐயனேதான்.

செய்தது: செய்த + அது என்றும் இதைக் கொள்ள லாம். நினைத்தற்குஞ் சொல்தற்கும் அரியது என்ற பொரு ளில் நிற்கிறது இங்குள்ள 'அது.' வேதம் பிரமத்தை 'அது' ('தத்') என்றமை போல.

அரசர் இத்துணையும் தன்கண்ணேபோற் கருதி வளர்த்த சிவவேட அன்பாகிய பயிர், எதிரிவஞ்சனையாகிய நச்சுக் காற்றினாற் கருக இருந்த தருணத்தில் அதன் ஜீவத்தன்மை கெடாமற் செய்துவைத்த செயல்; அவர் தொண்டு இடை முறிய இருந்த தருணத்தில் தத்தன் தானே அதனை நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுறுத்துஞ் சகதனமாயமைந்து (Complimentary) கடை போகச் செய்த செயல் என்ற கருத்துக்கள் 'செய்த' என் பதனோடொட்டியுள்ளன.

**யார் செய வல்லார் ?:–** ஒவ்வொன்றுக்கும் ஏற்றவன் ஒருவ னிருப்பான் என்பார்களே. அதுவே இது. தத்தன் ஒருவன் இருந்தான்; செய்தான் அன்றி வேறு யாருமே செய்திருக்க முடியாது. அவ்வளவுக்கு அரசருள்ளத்தை அறியக்கூடியவ ராகவும், அதற்கு அமைந்தொழுகக் கூடியவராகவுமுள்ள மற்றொரு நம்பிக்கைப் பாத்திரம் இருத்தல் துர்லபம்.

இவ்வகையில் விளக்கந் தருதலினால், மெய்ப்பொருள் நாய னாரது தொண்டுணர்வின் சுவரூபத்தை எளிதின் உணரநிற் கின்றது இத்தொண்டர் 'இன்றெனக் ..........வல்லார்.'

இங்ஙனம் தத்தன் பற்றுக்கோடாகத் தன் தொண்டு பெற்ற வெற்றியின் சாயலிலே நாயனாரது உவப்புக் குளிர்ந்து கருணையாகி அவன்மேல் அருட்பார்வையாய்க் கனிகின்றது.

'நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந் தார்' என முடிகின்றது செய்தி.

தொண்டு வெற்றியாயிற்று. பலன் கைமேலெய்திற்று. 'திருநீற்றன்பு பாதுகாத்தளிப்பீர்' எனத் தமக்கு வாரிசாக உள்ளவரிடம் தமது இறுதி விருப்பத்தைத் தெரிவித்தார். அவ்வளவில் தமக்கு வெளிப்பட்ட இறைவன் பாதநிழலெய்தி விட்டார் மெய்ப்பொருளார்.

முத்தநாதன் தீங்கின்றித் தமது நகரின் கடையெல்லை சேர்வதற்கு யாதேனும் தடையிருக்கும் வரைக்கும் தம் தொண்டு கடைபோகாதெனக் கொண்டிருக்கிறார் இந்த நாயனார். பெரியார்களின் மெய்யுள்ளத்தின் பரப்பு (விரிவு) எவ்வளவினது எனக் காட்டுதற்குத் தக்கதோர் உதாரணம் இது.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிறிய என் பெரும் பிழை பொறுத்தருள் செய்வீர்'

கொலைக்குற்றமென்றாலும் ஒருவன் அறிவு தெளிவில்லா நிலையிற் செய்திருந்தால் அது மன்னிக்கப்படுகிறது. அறியாத குற்றத்துக்குத் தண்டனை யாண்டுமில்லை. இல்லாத சூலுக்கு எவளொருத்தியும் உத்தரவாதமாவதில்லை. செய்யாத பிழைக்கு மன்னிப்பு வேண்டுவார் யாருமிலர். இதற்கு நேர் மாறானதொன்று அமர்நீதியார் நிலை.

அமர்நீதியார் ஒரு பெருவணிகர், அடியார்க்கு அமுதூட்டிக் கந்தையும், கீழுடையும், கோவணமும் வழங்குங் கடப்பாடுடையவர். அக் கடப்பாடு அவர்க்கோர் சாதனை. அச் சாதனைக்கு ஒரு சோதனையாக ஒன்று நிகழ்கின்றது ஒருநாள்.

அன்று அவரிடம் வந்தார் அந்தணப் பிரமசாரியொருவர். அவர் அணிந்திருந்தது ஒரு கோவணம். கைத் தண்டில் மாட்டியிருந்தது இரண்டு கோவணம். இந்நிலையில் அவரை வரவேற்று அமுதுண்ண அழைக்கின்றார் நாயனார். உணவுக்கு முன் காவிரியாடித் திரும்பவேண்டுமென்கின்றார் பிரமசாரி.

தண்டிலிருந்த இரண்டில் ஒன்றை அவிழ்த்து நாயனார் கையிற் கொடுத்தார். நான் நீராடித் திரும்பும்போது மழை வரினும் வரலாம். அதை முன்னிட்டு இந்தக் காய்ந்த கோவணத்தை இகழாமல் ஈங்கு வைத்து நீர் யான் வந்ததும் தாரும் என்று சொல்லிப் போய்விட்டார். நாயனாரும் மிகச் சேமமான ஓரிடத்தில் பந்தோபஸ்தாக அதனைப் பேணி வைத்துவிட்டே மறுகருமம் பார்த்தார்.

ஸ்நானம் பண்ணினாரோ இல்லையோ யாரறிவார். காவிரிக்குப் போகத்தானும் அவருக்கென்ன அவசியம். தம்மிடத் திருக்கக்கூடிய கங்கையிலேயே தோய்ந்திருக்கலாமே என ஒரு ஹாஸ்யப் புதையல் இக்கட்டத்திற் சேக்கிழார் வாக்கில் வருகிறது. மறைந்திருக்கும் உண்மையை ஹாஸ்ய வாய்பாட்

டால் வெளிப்படுங்குங் கலையுங் கைவந்தவர் சேக்கிழார். அது எப்படி யிருந்தாலும், அவர் தம் வாயூரிபோல, கொட்டு மழையில் நனைந்து நனைந்தே வருகின்றார் பிரமச்சாரி.

கண்டமாத்திரத்தே வரவேற்றார் நாயனார். தாமசமில் லாமல் ஈரம் மாற்றுவித்து, தயார் நிலையிலுள்ள அமுது ஆறிச் சுவை கெடுமுன் ஊட்டவேண்டும் என்றிருந்தது அவர் அவசரம். அவசரப்பட்டென்ன! பிரமசாரிக்கு இன்னும் ஸ்நானக்கிரியை முடிவுறவில்லையாம். சொல்கிறார் சேக்கிழார். ஒருவேளை அப்படியிருக்கலாம்! சுவாமி தீர்த்தமாடித் திரும்பும் போது மழை வந்து நனைத்துவிட்டால் மறுபடி பிராயச்சித்த அபிஷேகம் ஆகியே தீரவேண்டும்தானே! இங்கே மழையில் நனைந்துவந்த பிரமச்சாரி சுவாமிகளும் பிராயச்சித்த அபிஷே கத்தை விரும்புவது இயல்புதானே.

இங்கே இவர் விரும்புவது சாமானியமான வர்த்தனி கும்ப நீரல்ல. 'தொண்டர் அன்பெனுந் தூயநீர் ஆடுதல். வேண்டுகின்றார் என்கின்றது சேக்கிழார் முன்னறிவிப்பு. அன்பரன்பே உத்தமோத்தமமான அபிஷேக நீரென்பது ஏலவே காளத்தியப்பர் வாயிலாகப் பிரசித்தமான செய்தி யுந்தானே. அவர் அங்கே கண்ணப்பர் அன்பு நீரிலாடினார். இவர் இங்கே அமர்நீதியார் அன்புக்குளத்திலாடப் போகின் றார். முன்னேற்பாடாக இறங்குதுறைக்குப் படியும் வெட் டிக்கொண்டார். அமர்நீதியார் வைத்த கோவணத்தை அவ்விடத்தில் இருந்து மறைத்த வகையாலே படிவெட்டிக் கொண்டார். 'கோவணக் கள்வர்' என்ற சேக்கிழாரின் புகழ்ச்சிப் பெயரையுந் தட்டிக்கொண்டார்.

'நான் தந்த கோவணத்தைக் கொண்டுவாரும்' இந்த இறங்குதுறையில் அந்த நீராட்டம் கால்கொள்கின்றது.

விரைந்தோடி வீட்டினுட் புகுந்தார் நாயனார் இதோ கொண்டுவந்து விடுகிறேன் என்பார்போல. பல்லாற்றான் ஆராய்ந்து தேடியும் அது அங்கு இல்லாத பொருளேயாய் நன்கு தெரிந்துவிட்டது. 'இகழாதே வைத்து' என்றும் 'நீர் தாரும்' என்றும் முன்பு அவர் அழுத்தமிட்டுக்கூறிய வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவர் நினைவிலிருந்து உறுத்துகின்றன. இன்றைக்கு இது ஏதோ சங்கடந்தான் போலிருக்கின்றது என்ற எண்ண முந் தலைகாட்டுகின்றது. ஆனால், அப்படியான ஒரு நிலை எதிர்வர இருப்பதாக நினைக்கவும் முடியவில்லை. அந்த மன வேதனையைச் சகித்துக்கொண்டு உள்ளே நிற்கவும் இயல வில்லை.

'நினைவ தொன்றிலர் வருந்தினர் நிற்கவும்மாட்டார்
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார்.'

கோவணம், தம்மை அறியாமலே தவறிப் போய்விட் டது என உள்ள தன்மையை அழாக்குறையாய் எடுத் துரைத்துப் புதிய கோவணத்தை ஏற்குமாறு இரந்து வேண் டினார். மன்னிப்புங் கோரினார்.

என்ன செய்துமென்? 'அட அப்படியுமாய்த்தோ! என் கோவணத்தைத் தட்டிக்கொள்ளத்தானோ, பெரிய கோவண தாதா என்று உம்மை நீர் பிரசித்தப்படுத்திக்கொண்டது.' என்ற பிரமசாரி அம்மட்டிலுமல்லாமல் மேலும் ஒருபடி விஞ்சி விடுகிறார். நாயனாரின் தொழிலையே தொட்டிழுத்துப் பேசுகிறார். 'ஒல்லை யீங்குறு வாணிபம் அழகிதே நுமக்கு' என்ற வார்த்தைக் கொடூரம் ஒருபுறம். எரிகிற சுவாலை பொங்கி எழுவதுபோன்ற ரௌத்திர தோற்றக் கொடூரம் ஒருபுறம்.' எல்லையில்லவன் எரிதுள்ளினாலென வெகுண்டான்'. இது சேக்கிழார் வாக்கில் அவர் நிலை. இந்த அருள் அகோ ரத்துள் அடங்கும் அருட் கொடுமையும் ஒருபுறம். 'கொடிற னார் தாம்போய்க் கோவணங்கொண்டு கூத்தாடும் படிறனார்' என்றிருக்கின்றது சம்பந்த சுவாமிகள் வாக்கில் அவர்நிலை.

அவர் அருளுதற்கும் ஓர் எல்லையில்லை. மற்றவர்களைப் பிடித்து ஆட்டுவதற்கும் ஓர் எல்லையில்லை. கடவுள் சில வேளைகளில் நம்மை யலைப்பது பயந்தவனைப் பாம்பாட்டுதல் போலிருக்கும் என்பார்கள். 'பாம்பு மாட்டுவர் பாசூ ரடிகளே' என்று அப்பர் சுவாமிகள் இதைக் கண்டுதான் சொல்லி யிருப்பாரோ? அவ்வாறே அவர் கொள்ளுஞ் சினத்துக்கும் எல்லையில்லை. 'காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது மணிவாசகம். அவர் சோதனை நுணுக்கத்துக்கும் எல்லையில்லை. இங்கே அமர்நீதியார் முன்னிலையில் அவர் காட்டுஞ் சினக்கதிப்பின் அளவின்மையையோ சோதனை யின் அளவின்மையையோ சுட்டுதற்கே சேக்கிழார் அவரை எல்லையில்லவன் என்கிறார்.

இனி, மறுபுறம் பார்த்தால் பிரமசாரிகள் நாயனருடைய தொழிலைத் தொட்டிழுத்ததாகவுள்ள பொருளைவிட மற்றுமொருபொருள் 'ஒல்லை யீங்குறு வாணிபம் அழகிதே நுமக்கு' என்ற தொடரில் அந்தர்ப்பவித்திருக்கின்றது. அதனை நாயனார் அப்பொழுது புலங்கொண்டிருப்பதற்கு அவகாசமேது? புலங்கொண்டிருந்தால், இராமாயணம் ஒன்றரைக் காண்டத்தில் முடிந்த கதையாயும் போய்விடும். பிரமசாரியின் பரிசோதன சாமர்த்திய ரசனையுஞ் சோடை போய்விடும். ஆதலால் அவர் புலங்கொளா தொழிந்ததும் நன்மைக்கே. எல்லாம் நன்மைக்கே யென்பது தானே யுண்மை. குறித்த பொருள் பின்பு தெரியவரும். அதுநிற்க,

இந்நிலையில், நாயனார்க்கு ஐம்பொறியுணர்வுகளும் நிலை கலங்கிப் போகின்றன. கண் என்ன பார்க்கிறது, செவி எதைக் கேட்கிறது என்ற விபாகமே இல்லை. முகங்கருகிச் சாம்பிப்போகிறது. தீனஸ்வரத்தில், நானே சிறியன்; என் பிழையோ பெரிது; பொறுத்தருள்வீர் என மன்றாடுகிறார். பொறுக்க வேண்டுதற்குக் காரணமும் காட்டுவார் போன்று, 'யான் அறிய வந்ததொன்றன்று' என்றும் கூறுகிறார். தன்னுணர் விழந்து அவரடி பணிந்து அயர்ந்தும் விடுகிறார். இங்ஙனம் இளிவரற் சுவை மலிய அமர்நீதியாரை வடித்துக் காட்டும் சேக்கிழார் செய்யுட்சிற்பம் மனோகரமானது.

''மறி கரந்துதண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறி கலங்கிய சிந்தைய ராய்முகம் புலர்ந்து
சிறிய என்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீர் அடியேன்
அறிய வந்ததொன் றன்றென அடிபணிந் தயர்வார்.''

என்பது செய்யுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்நீதியார் இப்படியெல்லாம் தவிப்பதன் உட்கிடை யாதாகலாம்?

கோவணத்துக்குக் கோவணம்; நியாயத்துக்கு நியாயம் என்ற சாமானிய ஒழுகியலறத்தில் நிலைபெறவில்லை அமர்நீதியார் நோக்கு. விருந்தாய் வந்த அடியவரை எப்படியாவது திருப்திப்படுத்தியாக வேண்டும் என்ற அன்பிய லறத்தில் நிலை பெறுகிறது அவர் நோக்கு. அவரைத் திருப்திப்படுத்தும் அன்பு நோக்கு இவருக்கு. இவரைத் திரித்தெடுக்கும் அருள்நோக்கு அவருக்கு. அவரருள் மறைப்பு (திரோதான) ரீதியான அருள். மறிகரந்து தண்டேந்திய என்றும் மறையவர் என்றும் சேக்கிழார் அத்திரோதானத்தன்மையைச் சுட்டிய செவ்வி உணரற்பாலது. இந்த முரண்பாடே இந்நிகழ்ச்சியின் சுவாரஸ்யமான அம்சம்.

நாயனர் நோக்கு அதுவே என்பதை அடுத்துவருஞ் செய்யுள் விடுத்து விபரிக்கின்றது.

'செயத்தகும் பணி செய்வனிக் கோவணமன்றி
நயத் தகுந்தன நல்லபட் டாடைகள் மணிகள்
உயர்ந்த கோடிகொண்ட டருளும்'

என வேண்டுகிறார் நாயனர். இவ்வேண்டுதலும் எக்கதிக்காளாகுமோ என்ற பேரச்சம் உடம்பின் தாங்குமளவுக்கு மிஞ்சி நின்று உதறியடிக்கும் பேரச்சம். பணிகிறார்; மீள எழுகிறார். இப்படிப் பலமுறை. 'உடம்பினி லடங்காப் பயத்தொடும் குலைந்து அடிமிசைப் பலமுறை பணிந்தார்' என்கின்றது சேக்கிழார் செய்யுள். அச்சச்சுவைக்கு அதிபொருத்தமான செய்யுள் இது.

இனி, இப்பயப் பிராந்தியை விளைவித்த பிரமசாரிகளின் சினம், நல்ல வேளையாக, இனியும் அதிகரித்தற்கில்லை. அது உறைநிலை (Freezing Point) எய்திவிட்டது. எந்தப் பெருவெப்பத்துக்கும் உறைநிலையுண்டு. அதைத் தொடர்ந்து உருகுநிலை இடம்பெறுவதியல்பு. அவர் சினத்துக்கும் உருகுநிலை தொடங்கிவிட்ட அறிகுறி அவர் பதிலில் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது வேண்டுமானாலும் இடலாம் ஆனால், என் கோவணத்தளவுக்கு நிறையிற் சமமாயிருக்க வேண்டும். இதுவே நிபந்தனை.

நாயனார்க்கு ஒரு கண்டம் வந்து நீங்கிவிட்ட மகிழ்ச்சி. ஆனால் ஒருவிசாரம். சமத்துவங் காண்பதெப்படி? பிரமசாரிகளிடம் மெல்லக் கேட்டார். அவர் தண்டிலிருந்த கோவணம் இவர் கைக்கு மாறியது. தராசும் நாட்டியாயிற்று. பிரமசாரிகள் கோவணம் ஒருதட்டில்; மறுதட்டில் நாயனார்கையிருப்பாகிய கோவணங்கள் முழுவதும் இட்டுப்பார்த்தாயிற்று. அதன்மேல் அங்கிருந்த துணிமணிகள் பட்டுப் பருத்திகளும் இட்டுப் பார்த்தாயிற்று. முன்பு நாயனார்க்கிருந்தது பிரமசாரியைத் திருப்தி செய்வதிலுள்ள கஷ்டம். இப்போ தலைகாட்டி நிற்பது தராசுத் தட்டைத் திருப்தி செய்வதிலுள்ள கஷ்டம். இவை எல்லாமிட்ட பின்னும் தட்டின் நிலை யாதெனில், 'அன்பர் தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு' என்றால், பார்க்கவேண்டியதுதானே!

ஏன் இந்த விபரீதம் எனப்படுகின்றது நமக்கு. விபரீதமென்ன அது வாஸ்தவந்தானே என்கிறார் சேக்கிழார். அப்படியானாலும், கோவணத் தட்டில் கோவண ரூபமாயிருப்பது இறைவரருள், மறுதட்டில் நாயனார் பொருள்வடிவாயிருப்பது அத்தனையும் அவருடைய அன்பு என்ற ரீதியில் பார்க்கும் போது அன்பைவிட அருள் பெரிது. அதனால் கோவணத் தட்டுத் தாழ்கிறதாகலாம் என்கின்றது எங்கள் நிறுவையியல் நோக்கு. அப்படியுமல்ல, அன்பு படியேறப் படியேற அதன் நிலைக்குத்தக அருள் தாழ்ந்து தாழ்ந்து கொடுக்கும், அது பொருள் தன்மை யல்ல அருள்தன்மை, அது அதன் வழக்கம் என்கிறார் சேக்கிழார். அது அவருடைய அருளியல் நோக்கு.

இது அருளியலநுபவத்தில் உளதாகும் ஒரு புதிர். சிவபிரான் அடியார்க் கெளியனாம் தத்துவம் இதுவே. சோமசுந்தரக் கடவுள் பிட்டுவாணிச்சி வந்திக்காகக் கூலியாளாக வந்த உண்மையுமிதுவே. சுவாமிமலையில் முருகன் மேலிருக்கச் சிவன் கீழிருந்த காட்சியழகின் தத்துவமும் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாகியும் பரத்துவ நிலையிற் சந்தேகம் ஏற்படவராது. 'கீழிருந்தும் கீழல்லார் கிழல்லவர்' என்ற குறள் இருக்குந் தனையும் அதற்கிடமில்லை. இவ்விளக்கத்தின் சார்பில்,

'முட்டி லன்பர்தம் அன்பிடும் தட்டுக்கு
முதல்வர் மட்டும் நின்ற தட்டு
அருளொடும் தாழ்வுறும் வழக்கால்'

என்ற செய்யுட் பகுதிதருஞ் சுவைப்பயன் அறிதற்பாலதாம்.

அங்ஙனமாயின் அன்புத்தட்டில் இன்னும் பண்டங்கள் ஏறினுல் அருள்தட்டுப் பின்னுந் தாழ்ந்து கொடுக்க வேண்டுமே? எனில், ஆம்! நிகழ்ச்சித் தொடர் அப்படித்தான் அமைகிறது. பிரமசாரிகள் அநுமதியுடன் துணிமணியல்லாத மற்றும் பண்டங்களையும் நாயனுர் அன்புத்தட்டில் ஏற்றினுர்.

'இடஇடக் கொண்டே
மல்குதட்டு மீதெழுந்தது
வியந்தனர் மண்ணோர்'

என்னும்படி ஆய்விடுகின்றது.

இந்நிலையில் நாயனுரின் மற்ருெரு வேண்டுகோள். 'தலைவ, யானும் என்மனைவியும் சிறுவனும் தகு மேல் துலையில் ஏறிடப் பெறுவதுன் அருள்' என்ருர் நாயனுர். இனி மறுப்பை எதிர் பார்க்க இடமில்லை. உறைநிலைக்தேறி உருகுநிலைக்கிறங்கிய சினத் (அருள்) துக்கு இனி உருகுநிலையே உருகுநிலைதான். உருகுநிலையெய்திய வெப்பத்தின் பலன் திடீர் மழை என்பர். இந்த விஞ்ஞானம் அந்த மெய்ஞ்ஞானத்தின் சாயல். இனி இங்கே மழையும் பொழியும் பார்க்கலாம்.

சம்மதத்தின் பேரில் மூவரும் அன்புத் தட்டில் ஏறினர். ஏறும்போது அவர்கள் சங்கற்பம் இருந்தபடி :-

'இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர்நிற்க'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் ஒரேவகையான சங்கற்பசித்தர்கள். துலை சமப் பட்டுவிட்டது. அடிமைத் தொண்டும் அருளும் சரிசமம் என்ற உண்மை புலப்படுத்தப்பட்டு விட்டது. முன் அன் புக்கு அருள் தாழ்ந்து நின்றது உபசாரம். இப்போ தொண் டுக்கு அருள் சமப்பட்டது உண்மை. மூவரும் திருநல்லூ ரிறைவரைத் தொழுதுகொண்டே ஏறினர். அவரும் தமது பிரமசாரிக் கோலத்தை ஒழித்து, தேவியுந் தாமுமாய் விசும் பிற் காட்சி தருகின்றார். பூமழை பொழிகிறது. மழையோடு மழையாய் இம்மூவர் மேலும் அவருடைய அருண் மழையும் பொழிகின்றது. பிரமசாரிகள் சினத்தின் உறைநிலை உருகு நிலையாய்ப் பின் மழைபொழிநிலையாய் விடுகின்றது. தராசு விமானமாய் மேலெழுகின்றது. அந்நிலையில் மூவரும்

'குறைவறக் கொடுத்த ஆதிமூர்த்தி யாருடன்
சிவபுரியினை அணைந்தார்'

என முடிகின்றது நிகழ்ச்சி.

இங்கே அருளும் அடிமைத் தொண்டும் ஒத்த செய்தி சாமானியமான ஒரு பௌராணிக சித்தாந்தமன்று, சாஸ்திர சிந்தாந்தமே.

''பொட்டிடத் தெங்கும் பிதற்றித் திரிவேனை
ஓட்டடித் துள்ளுள்ள மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம நொந்தது வாணிபம் வாய்ந்ததே''

— திருமூலர் திருமந்திரம்.

அங்கு, 'ஒல்லை யீங்குறு வாணிபம் அழகிதே நுமக்கு' என்றதில் அந்தர்ப்பாவிதமெனச் சுட்டப்பட்ட பொருளும் இங்கு 'வாணிபம் வாய்த்ததே' என்றதன் பொருளும் ஒன்றே.

அன்றியும் சினம் முறுகியதென்றும், அதுவே உருமாறிக் கருணைமழை பொழிந்ததென்றும் இங்கு கண்டதும் சாஸ்திர சித்தாந்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முற்சினம் மருவு திரோதாயி கருணையாகி'

— *சிவப்பிரகாசம் 48.*

இப்பொருளையே கூறுகின்றது.

பெரியபுராணம் என்று பெயர்தான். ஆனால், அதிற் பௌராணிகம் (வெகு பூஜ்யம்) தீரஇல்லை. சகலமும் சித்தாந் தமே. பெரியபுராணச் சிந்தனைகள் சித்தாந்த விளக்கத் திறவு கோல்களாயிருக்கும்.

நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொ டங்கொரு வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றேஇவ் வகலிடமே.

— *அப்பர்—திருநல்லூர்த் திருவிருத்தம்* 7

*சிவ சிவ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ !

எவரெவர்க்கும் அவரவரையறியாமலே அவரவர்க்குள் மற்றொருவர் இயல்பாகவே புகுந்துநிற்கும் அதிசயம் ஆத்மீக உலகப் புதிர்களுள் ஒருபெரும் புதிர். சிவத்தினது அநாதியான இருப்புநிலையே அது எனவும் பேசப்படுகின்றது. அங்ஙனம் அநாதியாகவே சிவம் உயிரினுள் இருந்துகொண்டு 'காட்டுமுபகாரம்' என்பதோர் பேருபகாரம் புரிந்து வருகிறது. உயிரின் இம்மை மறுமை அம்மை என்ற எல்லா நிலைகளிலும் அது உயிர்க்கு அறிவித்தும் அநுபவிப்பித்தும் வரும் அந்த இரகசியம் சைவசித்தாந்த அரங்கில் ஒரு முக்கிய கட்டமுமாம். சர்வசாதாரணமாக உலகில் ஒருவர் ஒரு பொருளைக் காணுதல் என்ற அன்றாட நிகழ்ச்சியை உதாரணமாகக் கொண்டே சைவசித்தாந்தம இவ்வுண்மையை விளக்கும்.

உடலுறுப்புக்களில் கேட்பது செவி, முகர்வது மூக்கு என்பது போலக் காண்பது கண்ஆதல் வெளிப்படை. ஆனல், காணும் கண் ஒவ்வொன்றற்கும் அதன் பின்னணியில் உயிருணர்வு நின்றுதான் காணுதல் என்ற செயல் நிகழவேண்டியாகின்றது. அதேபோல், உடலில் இருந்துகொண்டு ஏதாவதொன்றை அறியும் — அநுபவிக்கும் உயிரும் அதன் பின்னணியிற் சிவம் இருந்துகொண்டு அறிவிகும் உபகாரத்தினுலேயே அநுபவிக்கிறது என்பது சைவசித்தாந்த விளக்கம்.

இருந்தும், நமக்கு இப்போதைக்கு இவ்வுண்மையநுபவம் பூஜ்யந்தான். ஏன்? கண்காணுதல் என்ற அன்றாட அலுவலில் தானும் கண்ணின் பின்னணியில் உயிருணர்வு நிற்கக் காணும் நேர் அநுபவம் கூட நமக்குப் பூஜ்யந்தானே! நம் கண் ஏதாவதொன்றைக் காணும்போதில் அதன் பின்னணியில் உயிரறிவு நிற்பதை நாம் இன்றளவுந் தான் கண்டதில்லை. ஆனல், இன்றளவும் இல்லை என்றதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக என்றுமே இல்லையென்ருய்விடாது. அதனை நேர் அநுபவ மாகக் காணும் வாய்ப்பு நமக்கு நமக்காகும் பக்குவ தசையில் வந்தேயாகும் என்கிறது நமது ஞான பாரம்பரியம்.

தற்போதைக்கு நமக்குப் புரியாப் புதிராயிருக்குஞ் சிவம், தமக்குக் கேட்கின்ற செவியாயும், சுவைக்கின்ற நாவாயும், காண்கின்ற கண்ணுயும் இருந்த நிலையைச் சுந்தரர் தம் செந்தமிழில் தெரிவிப்பர். அவ்வகையில், பார்க்கின்ற உயிர்க்கு அச்சிவமே பரிந்திருக்கும் பண்பையும் அவரே தெரி விப்பர். அப்படி நமக்காகத் தான் பரிந்திருக்குஞ் சிவத்தை நாம் மறக்கலும் ஆகுமோ என அவரே நம்மை இடித்துரைத் தும் விடுவர்.

“ கார்க்குன் றமுகி லாய்ப்பொழி வானைக்
கலைக்கெல் லாம்பொரு ளாயுடன் கூடிப்
பார்க்கின் றவுயிர்க் குப்பரி வானைப்
பகலுங் கங்குலு மாகிநின் ருனை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
ஆரூ ரானை மறக்கலு மாமே.”

— சுந்தரர் செந்தமிழ்

இவர் வாக்கில் இது போல்வன இன்னும் பல. திரு முறையாசிரியர் ஒவ்வொருவர் தரப்பிலும் இந்த அநுபவ வெளிப்பாடு மெத்த மிகத் தாராளம். இது எங்கள் ஞான பாரம்பரியம்.

சிவஞான போதம் பதினெராஞ் சூத்திரம் மெய்ஞ் ஞானத்தின் முடிநிலை அநுபவ விளக்கம். அதன் பிரகாரம், ஓர் உயிர் தன் சுத்தநிலையில் சிவம் தனக்குக் காட்டா யிருக்குந் தன்மையை உணர்வதுதான் தாமதம், ஒரே அன் பாய்ப் பிரவாகிப்பதே மேல், அதன் பண்பாய் விடும். உண்மையன்பின் ஊற்றுக் கண் அது. அங்ஙனம் நிகழும் அன்பு ‘அயரா அன்பு’ என்ற ஒரு தனிரகம். அயரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புநிலை கைவந்த் உயிர்க்குச் சிவனருளாற் சிவன்கழலிற் செறிதலே ஒரே பராக்காயிருக்கும் என்ற விளக்கம் ஏற்படு கின்றது. குறித்த சுந்தரரும் அந்த வர்க்கமே. 'ஆரூரானை மறக்கலுமாமே' எனச் சுந்தரர் மொழிவது அயரா அன் புக்கு ஒரு விமர்சனம். 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என்ற அந்தப் பதினொராஞ் சூத்திர இலக்கணத் துக்கு இலக்கியம் இந்த, 'ஆரூரானை மறக்கலுமாமே' எனுஞ் சுந்தரர் விளக்கம்.

இங்ஙனஞ் சிவனை அயர்க்க (மறக்க) மாட்டாப் பரிவு மிகுதியினாலே சதா,

'அன்பே அன்பேஎன்று அன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும்'

நிலையில் அகிலமறியும் மற்றொருவர் மாணிக்கவாசக சுவாமி கள். அதே மாணிக்கவாசகசுவாமிகளால் அன்பின் மேலெல் லைக்கு 'இவர்தான்' என்று பெயர் சுட்டி உணர்த்தப் பட்டவர் கண்ணப்ப நாயனார். அன்பின்மையின் சுவரூபத் துக்குத் தாம் எவ்வளவு பொருத்தமோ அந்த அளவு அன் புண்மையின் சுவரூபத்துக்குக் கண்ணப்பநாயனார் பொருத்த மானவர் என்ற மணிவாசகரின் ஆர்வமதிப்பீடு, கண்ணப்பர் அன்புநிலை மதிப்பீட்டில் ஒரு மலையிலக்கு.

காளத்தி மலைச் சிகரத்தை இலக்காக வைத்தே கண்ணப்பர் அன்புநிலையுயர்வைச் சரித்திரம் உணர்த்தி யுள்ள பொருத்தமுங் குறிப்பிடத்தக்கதே.

காளத்தி மலைச் சிகரத்தைக் கண்ணப்பர் அடைந்த முத லவசரத்தில் அவருக்கு அங்கொரு சிவலிங்க தரிசனம். கண்டது காணுமுன்னமே,

'அடியனேற் இவர்தா மிங்கே அகப்பட்டார் அச்சோ!'

என ஆய்விடுகிறது கண்ணப்பரின் அகவிருத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் உயிர்க்குயிராய் இருப்பதிலும் உயிர்ப்புக் குயிர்ப் பாய் நிற்பதிலும் அதிசயமுறுதற் கதிகமில்லை. அங்ஙனம் உள்ளத்தே தான் நின்றபோதும் உயிர்ப்போடு உயிர்ப்பாய் நின்றபோதும் அதுதான் கள்ளத்தே நிற்பதுதான் பெரு வியப்பு என்பர் அப்பர் சுவாமிகள். அவ்வளவுக்குக் கள்ளத்தே நிற்குங்கலை கைவந்தது சிவம். சிந்தை முயற்சியால் எவ் வளவுதான் செறிந்து செறிந்து நிற்பவர்க்கும் அவர் அறிந்து கொள்ள அகப்படாது நிற்கும் கள்ளம் சிவத்தின் கள்ளம். அது காரணத்தால் காலாகாலமாகச் சிவத்தைக்காண முயன் றவர்களில் ஏமாறியோர் தொகையே ஏராளம் என்பது சைவமெய்யியல்தரும் செய்தி.

''ஆயத்துள் நின்ற அறுசமயத் தோரும்
காயத்துள் நின்ற கணக்கறிவா ரில்லை''

என்பது திருமூலரின் பொதுமட்டான அபிப்பிராயம். நிட்டை கூடியிருந்த நிலையிலேயே வெகுநாட் கழிந்து தம்மை மூடிப் புற்றெழுந்து புற்றாய்ப் போனவர்கள், அவ்வகையில், தம்மை மூடி மரமெழுந்து கிளைத்து மரமேயாய்ப் போனவர் கள், புனலுங் காற்றுந் தவிர மற்றொன்றுந் துற்றாது வற்றி வரண்டு வெற்றுயி ராக்கையராய் (முதுகந் தண்டில் வயி றொட்டியே போமளவிற்கு) இருந்து தவமுயல்வோர்கள், இந்த வகையில் மற்றும் பல தரப்பினர்கள் தாமுஞ் சிவத்தைக் காணுதயருங் கண்ணிறுவி நிலையைத் திருவாசகம் வகை வகையாய்ச் சித்திரிக்கும். இத்தகைய சிவம், எவரெவரும் தம்முயல்வால் அணுக அணுக அகப்படாச் சிவம், அகப்பட் டது, கண்ணப்பநாயனுர்க்கு. அது உண்மையில் அதிசயமே யாதல் சொல்லவேண்டா. அயலவராகிய அவதானிகளுக்கு மட்டுமல்ல; அக்கண்ணப்பர் தமக்குமே அது அதிசயந்தான். அவர் தம் உள்ளுணர்வாகிய அதிசயத்தின் புறவெளிப்பா டாய்த் தொனிக்கின்றது, 'அச்சோ' என்ற அச்சொல்.

அந்நிலையில் அவருக்கு முன்னிலையாகச் சிவலிங்கம் இருந்த தென்பதே தவிர அவர் கண்டது சிவலிங்கத்தையேதானல்ல. அதிற் சொரூபித்து நின்ற சிவத்தையேதான். அதுவேதான் அவருக்கு அகப்படவந்ததும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கத்தைக் காண்பார் ஒவ்வொருவருஞ் சிவத்தைக் காண்பவரல்லர். தம்முள்ளே சிவத்தைக் காண்பவருக்கு மட்டுந்தான் அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆகாசலிங்கம் என்ற எல்லாவகைச் சிவலிங்கங்களிலுந்தான் பிரகாசித்திருக்கும் நிலையைத் தோற்றுவது சிவத்தினியல்பு.*

அந்நிலைமையையும் சிந்திக்க வைப்பது இப்பதம். எங்ஙனம்? அகப்பட்டார் - அகத்திலே பட்டார் - உள்ளே காட்சிப்பட்டார் என்பது இப்பதத்தின் ஒரு தொனி. அகப்பட்டார் - என்வசமாயினார் என்பது இதன் மறுதொனி. இரு தொனியையும் ஒருங்ககப்படக்கொண்டு நிற்கிறது இந்த 'அகப்பட்டார்' இங்கே.

என்றால், மேல் எண்ண என்ன இருக்கிறது? இறங்கு துறையே நீச்சல், கண்ணப்பநாயனாரைக் காளத்திச் சிகரத்திற் சேக்கிழார் எடுத்துக்காட்டும் ஆரம்பக் கட்டமே பதினோராஞ் சூத்திரப் பொருளைப் பிரதிபாதிக்கும் முழுமெய்ஞ்ஞான வடிவம். இனி அன்பாயுருகி யுருகி அன்பின் படிவமாய்ப் போதலொன்றே அவருக்கு ஒரே பராக்காகவேண்டியது. பதினோராஞ் சூத்திரமும் அதைத்தான் சொல்கிறது. சேக்கிழாரும் அதைத்தான் சொல்கிறார்.

'அடியனேற் கிவர்தா மிங்கே அகப்பட்டார் அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற'

அங்ஙனம் அன்பே படிவமாய்விட்டவர், அதுவரை தான் வேடகுலத் திண்ணனாயிருந்த அந்நிலைக்கே 'கல்தா' கொடுத்துவிட்டார். அதுவரை, தான் தேகமயனாய் இருந்தநிலைபோய் அண்ட (சிதாகாய) மயனாய்விட்டார். அதாவது தான் தேகியாய் இருந்தநிலை போயிற்று. தான் சுத்தத் தனி ஆத்மா

* சாமானிய வழிபாட்டானராகிய நம்மவரும், பாவனைவகையினாலாவது அகத்திலே சிவந்தோன்றக் கண்டுகொண்டேதான் வழிபடற்குரியோம். அத்தன்மையை நம்மிடத்தில் வருவிப்பதற்காகத்தான் பிரதானமாகக் கோயில் செல்வதன்முன் அநுஷ்டான நியமம் விதிக்கப்பட்டது. இவ்விதியின் ஞானப்பொறுதி இவ்வளவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாம் நிலே வரலாயிற்று. தான் தேகந்தாங்கி – தேகி – யாய் இருந்தநிலே இல்லேயாகவே, தான் விண் செய்பவனும் விண் அனுபவிப்பவனுமாந் தன்மையும் இல்லேயாயிற்று. அது ஆயிற்று. எனவே, விண்விளேவுக்கு மூலகாரணிகளான மும் மலமுங் கூட்டோடே இல்லேயாயிற்று. இது ஒரு அசாமா னியமான கட்டம். என்னே?

அவர் இன்னமுந் தேகத்திலேதானிருக்கிறுர். ஆனுல், தேகமே தாஞென்ற உணர்வில்லே. ஏதேதோ எல்லாஞ் செய்கிறுர். ஆனுல், வழமையான 'நான்', 'எனது' களின் தலேயெடுப்பில்லே. அத்துடன், ஆணவஞ் செய்யும் மறைப்பு மில்லே. கன்மம் விளேக்கும் ஆசையுமில்லே. மாயை தரும் மயக்கமுமில்லே. எனில் எஞ்சியிருப்பதென்ன? உணர்வு மய மான உயிரும் அதனுருக்கமான அன்பும் மாத்திரமே. உணர்வு வேறு உணர்வுருக்கம் வேறல்லவே. அந்த ரீதியில். அவர் ஆத்துமம் வேறு, அன்பு வேறல்லவே. ஆத்துமமே அன்புருவாயிற்று. அவர் அன்பே பிழம்பாய்விட்டார் என் கிறது சேக்கிழார் வாக்கு.

"முன்புதிருக் காளத்தி முதல்வனுர் அருள்நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னுனுற் போல்யாக்கைத்
தன்பரிசும் விணயிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவிணரோ."

இங்ஙனஞ் சேக்கிழார் எடுத்து விளக்குவதன் பின்னணி யுஞ் சிந்தனேக்கு ரசமானது. என்னே? இவருடன் துணேயா கச் சென்றிருந்த நாணனுங் காடனும் இவருக்கு ஏதோ சாமானிய தெய்வப் பைத்தியந்தானுக்கும் என்றுதான் எண் ணினுர்கள். இது என்ன நேற்றுவந்ததுதானே, சூட்டோடு சூடாக முயன்ருல் மாற்றிவிடலாம் என மதித்தார்கள். கையோடே தந்தை நாகனேயும் தமது தெய்வ ஆவேசக்காரி தேவராட்டியையும் போய்க் கொணர்ந்து இரவோடிரவாகவே எல்லாச் சாமர்த்தியமுந்தான் பண்ணிப்பார்த்தார்கள். இன் னமும் தேகமயனுகத்தான்—இன்னமும் அகப்புறப் பற்றுக் களோடுதான்—இன்னமும் மோக மயக்கநிலேயில்தான்—அவர் இருப்பதாகவே அவர்கள் கருத்து. தேவராட்டியின் பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் மயக்கந் தெளியும். நாகனைக் காண்டலால் பற்று மேற் கொள்ளும். தந்தைப் பாசத்தினால் அவர் பழையநிலைக்கு மீளலாம் என்ற எண்ணமே அவர்கள் செயல்திட்டத்தின் பின்னணியாயிருந்திருக்கும். ஆனால் எல்லாமே வியர்த்த மாயிற்று. தங்கள் திட்டம் சும்மா சாத்தியமல்ல. கஷ்ட சாத்தியமுமல்ல, அசாத்தியமே அசாத்தியமெனக் கண்டு தீட்டிய திட்டத்தை மட்டுமல்ல ஆளையே கைவிட்டுவிட் டார்கள், என்ற செய்தி இச் செய்யுளுக்கு முந்திய செய் யுள்வரை வெளிப்பட்டிருக்கக் காண்போம். இந்தப் பின் னணியில் வைத்தே சேக்கிழார், 'அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தினளவினரோ' என்றல் குறிப்பிடத்தகும்.

இங்கு அவர் என்றது நாகன் தேவராட்டியொடு வந்த நாணன் காடர்களை. அன்பு பிழம்பாய்த் திரிவார் என்றது அவர் இன்னுந் தேகமயனல்ல, வினைவயனுமல்ல, மும்மல வசத்தனுமல்ல எனத் தெளிவித்தபடியாம். யாக்கைத் தன் பரிசு, வினை இரண்டு, சாருமலம் மூன்று என வெவ்வேறு வகுத்து மூன்றும் ஒரேபேச்சில் 'அற' என்றுவிட்டது அந் நிலைக்கு இன்னது காரணம் எனக் காட்டியபடியாம்.

இன்னும், இப்படி அன்புபிழம்பான நிலை ஏற்படும் விஷ யத்தில் அவரறிவுக்கு வியஞ்சயமாய் உடன்நின்ற சாதனமோ முன்னிருந்த சாதனமல்ல; அதனின் வேறு எனச் சொல் லாமல் அமையாது. முன்பெல்லாம் அவர் அறிவுக்கு வியஞ் சகமாயிருந்த சாதனம், உலகராகிய நம்மவர்க்குப்போல, வினைவழிப்பட்ட போக இச்சையிற் செலுத்துவதாகிய மனம், இப்போ வியஞ்சகமாய் உடனிற்பது தன்பதியாகிய சிவ னையேயன்றி, சாமானியபோகத்தின் தலைக்கறுப்புங்கூடக் காணவிடாத (பராசக்தி) திருவருள். திருக்காளத்தி நாதனார் திருவருள்—அவர் இவரை நோக்கிய நோக்கு—அதுவே,

'முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்' எனச் செய்யுள் முதலில் ஏதுவாக நிறுத்தப்பட்டு அதன் பயன் பின் தெரிக்கப்பட்டு, ஏதுவும் பயனுமாக ஒருங்கு முடித்து, அன்புபிழம்பாதலுக்கு ஆதாரந்தோற்றி, 'அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தின் அளவுபடாமை' என்றதற்கு அது காரணமா யினமையுந் தெரிவித்து, நிறைவுறும் இச் செய்யுளமைதி சிந்தனைக் கினியதாம்.

மேலும், கண்ணப்பர் சரித்திரமிருந்தபடிக்கு, அவர் இனியும் இறைச்சி தேடிப்போகிருர், தன் வாயிலிட்டு எச்சியு மாக்குகிருர், அதையே நைவேத்தியமுமாக்குகிருர், மேலும் வேட்டையாடவும் போகிருர்.—இவையெல்லாம் என்ன? அறிவாசாரரீதிக்காயினும் சமயாசார அநுட்டானத்துக் காயினும் இவை ஒவ்வுமா? என்று நிச்சயம் விசாரிக்கவும், விளங்காதே திகைக்கவும் உள்ளது, உலகராகிய நம்மவர் கருத்து. அந்த நம்மயக்க விசாரத்துக்கும் பொருத்தமான பரிகாரமாகப் பயன்படத்தக்கவாறு நடுநிலை விளக்காய், 'அன்பு பிழம்பாய்.. ... என்ற இத் தொடர் நிற்குந்திறம் நயக்கற்பாலதாம்.

அவர் அன்பு பிழம்பாய்த் திரிபவர். இனி, அவர் 'நும் கருத்தின் அளவினரோ', அவர் நினைவு செயல்கள் 'நும் கருத்தின் அளவினவோ என அத்தொடரே எதிர்த் தாக்குத லாக நம்மைக்கடிதலுந் தகவே தரும்.

இங்ஙனம் அன்பு பிழம்பாய்விட்ட கண்ணப்பர் தம் தனி மையை அறிந்திலர். காளத்தியார் தனிமையையே அறிகின் ருர். தம்பசியை அறிந்திலர்; காளத்தியார் பசியையே அறி கின்ருர். தம் பாதுகாப்புத் தேவையை அறிந்திலர்; காளத் தியார் பாதுகாப்புத் தேவையையே அறிகின்ருர். 'அவனு டைய அறிவெல்லம் நமையறியும் அறிவென்றும்'—எனக் காளத்தியாரே சிவகோசரியார்க்குக் கனவிற் கூறியதாகச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளவாருன இவையனைத்தும் வேறெ வையுமல்ல, அயரா அன்பின் அரன்கழல் செல்லுமென மேற்காட்டிய அதே மெய்ஞானப் பண்பின் பரிமளிப்பான விலாசங்கள், கண்ணப்ப நாயனர், அயரா அன்பின் அரன் கழல் சென்றதெவ்விதம்? என்ற விசாரத்துக்கு, 'அது இவ் விதம்' என விளக்கந்தரும் பாங்கில் அமைந்தவை இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அயரா அன்பின் அரன்கழல் செல்லும் பண்பிற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல அமைகின்றது அவர் வரலாற்றில் ஆருவதுநாள் நிகழ்ச்சி. கண்ணப்பர் வழமைபோலவே அன்றும் தமது பூஜைநைவேத்யத்திரவியங்களுடன் காளாத்தியாரை நோக்கி வந்துகொண்டிருக்கிருர். என்றுமில்லாதவாருக அன்று அபசகுனங்கள் மிகுகின்றன. வேடர் அநுபவ பரம்பரையில் அபசகுனம் என ஆட்சிப் பட்டு வந்த பறவைகள் சிலபலவின் குறுக்கீடு நேர்கிறது. சகுனங் கண்டவர் எவருந் தமக்கேதும் ஏற்படுமோ எனக் கவல்வதே சாமான்ய தர்மம். ஆனுல், இக்கட்டத்திலும் அவர் நிலே, அயரா அன்பின் அரன்கழல் சென்றவாறேயாயிற்று. என்னே? சகுனங் கண்டது காணு முன்பே, 'அத்தனுக் கென்கொல்!' என இடிக்கின்றது அவர் நெஞ்சு. ஏதோ நடந்தே விட்டது என்ற பாங்கில் ஒரு அச்சம். 'அஞ்சுவ தாங்கே அணங்காகும்' என்பது பழமொழி. இங்கும் அது உண்மையே யாயிற்று.அன்றைக்கெனக் காளத்தியார் தமது வலக்கண்ணில் இரத்தப் பெருக்கு நிகழ இருக்கின்ருர்.

கண்ட மாத்திரத்திற் கொண்ட பதை பதைப்பும், விழுந் தடித்துப் புரண்டழுதலும், துடைக்கவும் இரத்தம் நில்லாமை கண்டு வஞ்சினங்கொண்டு அவ்வெஞ்செயல் செய்தாரைத் தேடிப்பழிவாங்க முயலலும், மூலிகை தேடித் தேடிப் பிழிந்து பிழிந்தலுத்தலும், அயர்ந்து போய் விழுதலும், 'ஊனுக்கூன், என்னும் வழக்கியல் நினைவு வரவே, 'மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தன்கண் முதற்சர மெடுத்து வாங்கி முதல்வர்தங்கண்ணிலப்பு'தலும் நிகழ்கின்றன. பட்டதுக்கேற்ற பலன் ஆய்விடுகிறது. ஒரே அக்களிப்புக்கூத்து.

'நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர் கூத்து மாடி
நன்றுநான் செய்த இந்த மதியென நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னலே உன்மத்தர் போல மிக்கார்.''

இனி, இந்நிலேயில் முற்ருக மறைந்தே விட்டிருந்த 'கலி' மறுகவுந் தலே காட்டுகிறது. நாதனரின் மற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலும், உதிரம் மண்டுகிறது. ஆனால், இத்தடவை பதட்டமில்லை. பதட்டத்துக்குப் பதில் தெம்பு. 'மருந்து கை கண்டேன்' என்ற தெம்பு. தெம்போடு திருப்தியுங் கூட. 'இன்னுமுண் டொருகண்' என்ற திருப்தி. தெம்புக்குந் திருப்திக்குந் தோதான தீரமும் அப்புறம். 'தம்பிரான் தன் திருக்கண்ணில் இடக்காலூன்றி, உண் ணிறை விருப்பினோடும்' தம் மறுகண்ணில் அம்பு சொருகுந் தீரம். இந்நிலையிற் கண்ணப்பர் எதற்குந் தயார் ஆனால், காளத்தியார் தயாரில்லை: இன்னமுந் தரிக்க அவர் தயாரில்லை? கண்தோண்டுங் கையைத் தடுத்தவாறே, காளத்தியார் வாக்கு – நில்லு கண்ணப்ப – ஒருதரம்போல் மூன்று தரம் ஒலித்தெழுகின்றது. கண்ணப்பரிடம் தாம் பெற்றுக்கொண்ட கண்ணிருக்கும் பக்கமாகிய வலது பக்கத்திலேயே கண்ணப் பரை நிற்க நிறுத்திக்கொண்டார் காளத்திநாதர். திருக் காளத்தி மூலவர் சந்நிதியில் என்றும் இதேகாட்சி.

அன்பு பிழம்பான கண்ணப்ப நாயனார் அயரா அன்பின் காளத்தியாரைக் கண்டதுமுதல் தமது இடக்கண்ணில் அம்பு சொருகும்வரை — அரன்கழல் சென்று நின்ற நிலை ஈது.

'காளத்தியான் அவனென் கண்ணுளானே' என்றார் திரு நாவுக்கரசு சுவாமிகள் பின்னொருகால். அதற்கு முன்னோடி யாகவே, காளத்தியார் கண்ணப்பர் கண்ணே தம் கண்ணாக, இல்லை, கண்ணப்பரே, தம் கண்ணாக விளங்க இருந்துவிட்டார்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இங்கிது தன்றற் போதாது என்னையுங் கொல்ல வேண்டும்'

பாராளும் பண்புமிக்க மன்னனெருவன் தன் உடைவாளைச் சிவனடியாரொருவர் கையில் தந்து கொண்டு அவர் முன்னே தன்னைப் பலிக்கடாவாக்கித் தலைதாழ்த்தி நிற்கின்முன். அரசியலாதிக்கமும் ஆண்மைவீறும் வேறு. அன்பியலொழுக்கமும் ஆண்டானடிமைத் திறமும் வேறு. குறித்த மன்னன் புகழ்ச் சோழர். சிவனடியார் எறிபத்தர்.

புகழ்ச்சோழர் தலைநகரான கருவூரில் வாழ்ந்த ஒரு சிவனடியார் எறிபத்தர். பெயர்க் காரணம் பின்னல் தெரியவரும். சிவனடியார் எவருக்கேனும் எங்கேனும் ஏதேனும் தீங்கு நேரின் அங்கே அப்பொழுதே சென்றுதவுதற்குத் தம்மைத் தயார் நிலையில் வைத்திருப்பவர், அதற்கென்றெரு மழுப்படையுந் தாங்கியுள்ளவர் அவர். அவர் நிலையிவ்வாறுக,

அக்கருவூரிலுள்ள திருவானிலை என்னுஞ் சிவாலயத்தில் மாலைத் திருத்தொண்டு புரியும் அன்பருமொருவர் அங்கே. சுவாமிக்கு மாலை கட்டிச் சாத்துந் திருத்தொண்டுக்கு மகா யோக்கியதையுள்ளவர். அதற்கநுகுணமாக அவர்பால் நிரம்பித் ததும்பிய பத்திமையும் பரிவும் அளப்பரியன. பெயர் சிவகாமியாண்டார். அத்திவ்விய பெயருடன் புண்ணிய முனிவர் என்னும் தொடரும் சேர்த்து அவரை நமக்கு அறிவிக்கின்முர் சேக்கிழார். 'பூதநாயகன் புண்ணிய மூர்த்தியே' என்னும் அப்பர் தேவாரம். அப்புண்ணிய மூர்த்திக்குத் தொண்டு புரிதற்கான புண்ணிய சொரூபர் என்றே அவரைக் கணித்துள்ளார் சேக்கிழார்.

வைகறையில் நீராடி நியமம்பண்ணி, வாய்கட்டி, ஆராய்வாகப் பூக்கொய்து அழகான பூங்கூடையில் நிரப்பிக் கொண்டு, அத்தனைக்குத் தூய்மையான மெய்யன்பும் இதயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற் கொண்டு மிருதுவான கையினுல் தண்டுமொன்றூன்றிக் கொண்டு அவர் கோயிலை நோக்கிச் செல்லுங் காட்சி மிக ரம்மியமாயிருக்கும்.

ஒருதினம், அவர் பூங்கூடையைத் தமது தண்டிற் கொளுவித் தொங்கவிட்டுத் தோளிற் சுமந்துகொண்டு வீதிவழியே போய்க்கொண்டிருக்கின்றூர். அன்று மகாநவமிக்கு மங்கல நீராடி மதர்ப்பினுற் பாகரையும் மதியாது அலைந்து வந்து கொண்டிருக்கின்றது அரசருடைய பட்டத்துயானை. அது சிவகாமியாண்டாரைத் தொடர்ந்தோடி வந்து பூங்கூடையை எட்டி இழுத்து நிலத்திற் சிந்தியகன்றது. தம்மிறைவன் முடி மேலேறவேண்டிய பூ படிமேற் சிதறிக் கிடக்கக் கண்ட சிவ காமியாண்டார்க்கு ஏற்பட்டுவிட்ட பதைபதைப்போ சொல் லுந் தரமன்று. அதன் வழிவந்த உத்வேகத்தினுலே தம் கைத்தண்டை ஓங்கியபடி ஆனையையடிக்கத் தொடர்ந் தோடினுர். முதுமை மிகுதியாற் கால் தளர்ந்து விழுந்து கிடந்து தரையிலடித்துப் புலம்புவாராயினர்.

''களியா னையினீ ருரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா''

என அவர் ஓலமிடுஞ் சத்தம் அங்கெங்கோ வந்த எறிபத்தர் செவியையடைகிறது. தாமசமின்றி மழுவுந் தாமுமாய் ஸ்தலத் துக்கு விரைந்தார். நிலைமையை அறிந்தார். சண்டமாருதம் விரைந்தாற்போற் பாய்ந்தோடிச் சென்று மழுப்படையைச் சுழற்றியபடி யானையை எதிர்த்துப் பாய்ந்தார். யானையும் எதிர்த்துப் பற்றக் கையைக் கோலிச் சுழற்றியது. அதற் கிடையில் அதன் துதிக்கை துண்டாடப்பட்டு விட யானை அலறிக்கொண்டு விழுந்து மாண்டது. அதனேடு சம்பந்தப் பட்ட பாகர் பரிக்கோற்காரர் என ஐவர் அவர் மழுவுக் கிரையாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைக்குச் செய்தியெட்டியது. 'ஆரோ யானையைக் கொன்ருராம்' என்ற அளவே அரசர்க் கெட்டிய செய்தி. யாரோ பகைவர் செயல் என்ற நிலையில், சேனைகளைப் பின் வரப் பணித்துவிட்டு அரசர் குதிரையொன்றில் ஸ்தலத்தை யடைந்துவிட்டார். தன் எதிர்ப்புக்கு விஷயமாக அங்கே எதுவுமில்லாமை அரசர்க்கு ஆச்சரியமாயிற்று. சிவனடியா ரொருவர் மழுப்படையோடு அங்கே நிற்கிருர் தான்! ஆனுல், அவரே தன் யானையையும் பாகரையுங் கொன்றவர் என அரசர் எண்ணுவதற்கேதுவில்லை. அதனுல், தற்செய லாக அவ்விடம் வந்த ஒருவராக அவரைக் கருதிக்கொண்ட அரசர் வென்றவர் யாவர்? என்ருர் உரத்த குரலில்.

முன் கொலைக்குத் தப்பிநின்ற பாகர் அரசனை அணுகி, உண்மையைத் தெரிவித்தார்கள். அரசருக்கோ ஆராய்ச்சி எழுந்தது.

மழுவோடுதான் நிற்கின்ருர். ஆனுல் இவரோ சிவனடி யார். சிவனடியாராமொருவர் தக்கதொரு காரணமின்றி இச்செயல் புரிந்திருக்கமாட்டார். ஆதலால் என் யானை புரிந்த பிழை ஏதோ இருக்கவே இருக்கும் என்பது அவர் முடிபு.

உடனடியாகச் சேனைவரவு விலக்கப்பட்டாயிற்று. அரசர் குதிரையை விட்டிறங்கினுர். அந்நிலையில் அரசர்க்குத் தன்னைப் பற்றிய நன்மதிப்பும் ஒருபுறம்; அவமதிப்பும் ஒருபுறம். அச்சம், நாணம் கழிவிரக்கம் என்பனவும் ஒவ்வொருபுறம்.

இந்த மதயானை யெதிர்ப்பில் இந்த அடியவருக்கு ஏதும் நிகழாதிருந்தமை அடியேனது நற்றவப்பலன் எனத் தன்னைப்பற்றிய நன்மதிப்பு. இப்புண்ணிய சீலர் இவ்வளவு சினங் கொள்ளுதற்கேதுவான ஒரு செயலுக்குச் சார்பா யிருக்க வைத்தது என் பாபபலன் என்று தன்னைப்பற்றிய அவ மதிப்பு. அவரிடம் எப்படி இதனைத் துணிந்து விசாரிப்ப தென்ற அச்சம். இவரை எதிர்க்கவா படைவரச் செய்தேன் என்ற எண்ணத்தால் நாணம். படையை அழைத்துப் படா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோபம் பண்ணியமை என் ஆராய்வின்மையால் இவருக்கிழைத்த அவமதிப்பாயிற்றே என்ற கழிவிரக்கம்.

இத்தனைக்குமிடையில் தயங்கியொதுங்கி அவர் சமுகத்தை அணுகிய அரசர் தமது கழிவிரக்கத்துயரை முதலிற் கழிய விடுகின்றார். 'ஈதறிந்திலேன் அடியேன்; அங்குக் கேட்ட தொன்று' என்றார். நிகழ்ச்சியின் உண்மை வரலாற்றை அங்கிருந்து புறப்படுங்கால் யான் அறிந்திருக்கவில்லை என்றால், அறிந்திருந்தேனாயின், ஆனை குதிரை அணிவகுப்புகளில்லாமல், தாளமேளமில்லாமல் நிலைமைக்கு அமைவாக அடக்க ஒடுக்கமாக வந்திருப்பேன் என்பது அவர்குறிப்பு. இதையடுத்து அவர் வாக்கில் எழுகின்றது ஒரு ஆசங்கையையுள்ளிட்ட ஒரு குறையிரப்பு.

'மறிந்தஇக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மான
எறிந்ததே போதுமோ தான் அருள்செயும்'

என்பதே அக்குறையிரப்பு. என்ன பண்பான பணிவான பவ்வியமான வினா இது! அரசரும் சாமானியரல்லர். அடியார்க்கடியராந் தகைமையுள்ளவர் என்பதை இதனால் தோன்ற வைத்தார் சேக்கிழார். இவ்வாசங்கைக்கு அடியவர் பதில் பின்வருமாறு அமைகின்றது.

சென்னி, இந்தப் பட்டத்து யானை சிவகாமியாண்டார் என்ற அன்பர் சிவபெருமானுக்குச் சாத்தக் கொண்டுசென்ற பூங்கூடையைப் பறித்துச் சிந்திற்று. அதனால், பறித்த அக்கையைத் துணித்து இதனைக் கொன்றேன். யானை இத்தீங்கு செய்யும் சார்பைத் தவிர்க்கவேண்டிய பொறுப்பாளராகிய பாகரும் பரிக்கோற்காரரும் அது செய்யத் தவறியமையால் இறக்கவேண்டியவராயினர். இதுவே இங்கு நிகழ்ந்தது.

ஆன்றமைந்த உள்ளச்சாயலைப் பிரதிபலிக்கும் ஒரு அமைதியான விளக்கம். அரசர் கொண்ட ஆசங்கைக்குத் தகுதியான விடை. போதுமோ? என்ற சங்கை வேண்டியதில்லை என்ற தொனிப்பும் அமைந்திருக்கின்றது. சென்னி என்று அரசரை விளித்ததிலிருந்தே, அரச நிலையை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு அலட்சியமாக மதித்துள்ளார் எனத் தெரிந்துவிடு கின்றது. அத்தனைக்கு லௌகிகத்தை எடுத்தெறிந்த தொண் டுள்ளம். அதுவே அவர் சுவரூபம்.

தம் விளக்கத்தை அடியவர் எடுத்து மொழிந்த அமைப் பின் ஒரு அம்சம் அரசருடைய ஆராய்ச்சியை ஊக்குவிக்கின் றது. 'போதுமோ?' என்ற சங்கை வேண்டியதில்லை யென் பது நன்கனந்தொனிக்க அவர் கூறியிருந்தபோதும்கூட அந்த அம்சம் அரசரின் ஆராய்ச்சியைத் தூண்டவே செய்கிறது. அது வருமாறு:

பூங்கூடையைப் பறித்துச் சிந்தியதற்காக யானை தண் டனை பெற்றுக்கொண்ட தென்றால், அதை விலக்கிவைக் காமைக்காக, அப்பொறுப்புக்குரியராயிருந்த பாகரும் பரிக் கோற்காரரும் தண்டனை பெற்றுக்கொண்டனரென்றால், இவற்றுக்கு எசமானனாயும், இவற்றை ஏவித் தொழிலிற் செலுத்தியவனாயும் இருக்கும் யான், இங்ஙனம் தம் கடமை யிற் சோர்வு காட்டும் ஏவலரைப் பணியாட்களாகக்கொண்ட பாபத்துக்குரியனான நான், என் ஏவலரால், பிரஜைகளால், பிறவற்றால், நிகழும் எதற்கும் பூரண உத்தரவாதியாக என்னை அமைத்துள்ளயான், அவ்வகையில், இன்று நிகழ்ந்த சிவாபராதத்திற்குச் சார்புவகையாற் பொறுப்பேற்கவேண் டியவனான யான் தண்டனைக்கு விலக்காதல் எப்படித் தகும்?

என்றிருந்தது அரசர் ஆராய்ச்சி. தம் தெய்விக உள்ளப் பாங்கிற்கும் நீதிநெறி நேர்மைக்கும் அபராதங் கழிக்க அவா வும் சிந்தைத் தூய்மைக்கும்ஏற்ப அரசர்க்கு அது சரியாகவே பட்டது. பட்டதெனில், உடனடித் தண்டனை யேற்ப தொன்றே அவர் செய்யக் கிடப்பது அதன் வழிநின்று அரசர் அடியவரின் பாதங்களை வணங்கி,

'இங்கிது தன்னாற் போதாது
என்னையும் கொல்ல வேண்டும்'

என்னையும் கொல்ல வேண்டும் என்றார். என்னையும் என்ற பதத்திலுள்ள 'உம்' மகா சத்து வாய்ந்த ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இங்கு மேல் விமர்சித்த அத்தனை கருத்துக்களையுந் தழுவிநிற்கும் அழகைச் சொல் இலக்கணக் கண்ணுல் ஒரு தரமும் அடியாரிலக்கணக் கண்ணுல் மறுதரமும் நோக்கி இன்புறலாம்.

அங்ஙனஞ் சொல்லிய அளவிலமையாது, தம் உடைவாளைத் தாமே யிழுத்து அடியவர் கையை நோக்கி நீட்டிக் கொண்டும் நிற்கிருர். ஏன் அவர் கையில் மழுவிருக்கின்றது தானே! என்ருல், மங்கலப் பொருளாகிய மழுவுக்கு மாசூட்டி விடக்கூடாதென்ற அச்சம் இருப்பதாகச் தெரிவித்துங் கொள்கின்ருர். இந்த இவர் நிலையை என்னென்பது? அரசியலறத்தில் சாமானியமாய்ச் சமாளிக்க வேண்டிய இவ்விஷயத்தில் இத்தனை நுணுக்கமும் அவசியந்தாஞ என்றெழும் சங்கையை எப்படி விடுவிப்பது?

நாம் கருதும் சாதாரண அரசியலறமாஞல் அது வேறு. இவர் தழுவிநிற்பது ஆத்மவியலறம்; ஆத்ம ஈடேற்றத்துக்கு அநுசரணையாக உள்ள அறம். இந்த ஆன்மவியலறம் முன்பு நாம் இயற்பகையார் விஷயத்திற் கண்டபடி அசத்தியல்பு நீங்குதலையே முக்கிய சாதனையாகக் கொண்டுள்ளது. அரசியலறமாயினுஞ்சரி, வாழ்வியலறமாயினுஞ்சரி சாதாரண நிலையில், நேருக்குநேர் அமையும் தொடர்பை மட்டுங் கவனிக்குமளவில் நின்றுவிடுவன. ஆத்மவியலறம் அங்ஙனமாகாது சார்புநிலையில் அமையுந் தொடர்பிலுங் கவனஞ் செலுத்துவது. ஒரு தீங்கோ பழியோ நேர்முக சம்பந்த மட்டில் நீக்கிக் கொள்ளப்படுமளவில் அது திருப்தி பெருது. அதன்மூலம் வேரோடி எந்த ஆழத்திற் கிடந்தாலும் அந்த ஆழம்வரை கண்டிக்கப்பட்டால் மட்டுமே ஆத்மவியலறம் திருப்தியுறுவதாகும். முன் தொடர்பு மட்டுமன்று, பின் விளைவுமப்படியே ஆத்மவியலறத்திற் கருதப்படும். மெய்ப்பொருள் நாயஞர் தம்முன்னிலைக்கப்பாலும் தமது சிவவேட அன்பு தீங்குறுதலாகாது என விரும்பியதும் மநுவேந்தன் தன்னுடைய மகன், பசுக்கொலையேதுவாகப் பின்பிறப்புகளிற் துன்புற இடம்வைக்கக் கூடாதென்று விரும்பியதும் அதஞலேயே. இவர்கள் சேணிடையுந் தீங்கடையாத் திருத்தொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டர்கள். பின்னே, முன்னே எத்தொலைவில் தம் சார்பான தீங்கு, பழி இருந்தாலும் அது தமது அசத்தியல்பு நீக்கத்துக்குப் பெருங்குறையாம் என்பது அவர்கள் கருத்து. அதனுல் தமது அசத்தியல்பு நீக்கத்திற்குச் சாதகமாக அமையக்கூடிய எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் நழுவவிடாது தாமாக வரவேற்பது அவர்கள் பண்பாகும். இங்கும் புகழ்ச் சோழர் அரசியலறச் சார்பில் தமது அசத்தியல்புதீர வாய்ந்த இச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது தழுவிக்கொண்டிருக்கின்ருர் எனக் கொள்ளவேண்டும்.

இது இவ்வாருக, அரசர் தன்னைக் கொல்லுமாறு வாள் எடுத்துக் கொடுத்து நிற்கும் இந்நிலையில் அடியவர்க்கோ சிந்தனையலைகள் சுழல்கின்றன. தன்னைக் கொல்லுமாறு இவராற் கேட்கப்படுமளவுக்கு என்னில் என்ன கேடுதான் முனைந்திருக்கிறதோ! இவருடைய இந்த அன்பியலுக்குக் கங்கேது? கரையேது? இவர் நீட்டும் வாளை நான் வாங்குவதெப்படி? சிலவேளை, இவ்வளவு உத்வேகத்தில் நிற்குமிவர், நான் வாளைப்பெற விரும்பாமைகண்டு தன்னைத்தான் மாய்த்துக்கொண்டால் என்செய்வது? என்ற சிந்தனையோட்டத்தில்.

இந்த இறுதிச் சிந்தனை அவர்பால் வலுத்துக்கொண்டது. அவ்வகையாலாகக்கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதே தம் முதற் கடமையெனத் துணிந்துகொண்டார். அதனை வாங்குதலும் செய்தலோடொக்குமோ என்றவகையில் ஆன அச்சமும் அவரை உலுப்புகிறது. எப்படியோ வாங்கிக்கொள்கின்ருர் வாளை.

அதன்விளைவாக அரசர்பால் நிகழ்ந்த மெய்ப்பாட்டுக் குறிப்புக்கள் அவரைத் தூக்கிவாரிப்போட்டாற்போலாயின. 'ஒருவன் முகனுரைக்கும் உண்ணின்ற வேட்கை' என்பர், அரசருக்கு அப்பொழுதிருந்த முகபாவம், தான் கொலையுண்டு குறைதீரப்போவதுபற்றி. அவருக்கிருந்த உள்ளுவகையை அள்ளித் தெளித்துவிட்டமாதிரி இருந்தது. அன்றியும் கையிரண்டும் கூப்பித் தலைதாழ்த்திப் பலிக்கமைந்து நிற்கும் அவர் பாவனையும் வேறே தனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைமை அடியவருளத்திற் பெரும் புயலைக் கிளப்பி விடுகின்றது. அட! தன்னை யான் கொல்லப்போவதாகவே இவர் உண்மையில் நம்பிவிட்டார். இந்த நிலைக்கு யானே உத்தரவாதி. ஆம்! நான் இவருக்குத் தீங்கு நினைத்தவனே யானேன், ஆதலால், இதற்குக் கழுவாயாக என்னைத் தீர்த்துக்கட்டுவதே என் கடமை என்ற புரட்சிகரமான முடிவுக்கு அவர் வந்துவிட்டார்.

அக்கணமே தன்கழுத்தில் வாளை மாட்டி அரிய ஆரம்பித்தும் விட்டார். அரசரோ திணறிப்போயினார். 'நான் நாசமாய்ப் போவேனாக' எனத் தன்னைத் தான் சபித்துக்கொண்டே தன் சவிமுழுவதுங் கூட்டி அடியவருடைய கையையும் வாளையும் அசையவொட்டாமற் கவ்விப் பிடித்துக்கொண்டார். அரசருடைய அழுங்குப்பிடி அடியவரின் அழுந்திய துணிவுக் கெதிரிடையாகிப் பெருவேதனை நிகழ்கின்றது.

இரண்டு பேரன்பர்கள். ஒருவரன்பினளவை மற்றவரளக்க முடியாத நிலை. இந்த அன்புப்பெருக்குகளின் அலை மோதல் இப்படியான ஒரு இடுக்கணைத் தோற்றுவித்திருக்கின்றது. ஒருவரும் தாமாகத் தம்பிடியை விட்டுவிட முடியாத நெருக்கடிநிலை. இவர்களுக்கிடையில் மத்தியஸ்தம் வகித்தல், இவர்கள் இருவரன்புக்கும் பொதுநிலைப் பொருளாகிய இறைவனுக்கன்றி ஏனையர்க்கு முடியாது. அப்படியே நடந்தும் விடுகிறது.

'களமணி களத்துச் செய்ய கண்ணுத லருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலருங் கேட்ப.'

யானை மலரைச் சிந்தும் நிகழ்ச்சியானது. சம்பந்தப்பட்ட தொண்டர்களின் தொண்டின் பெருமையை உலகறிய வைக்கும்படியாகச் சந்திர சூடாமணியாகிய இறைவனருளால் நிகழ்ந்தது. — இது அவ்வசரீரி விபரம்.

அசரீரி எழவே யானையும் எழுந்தது. பாகரும் எழுந்தனர். பரிக்கோற்காரரும் எழுந்தனர். அடியவரும் வாட்பிடியைக் கைவிட்டார். அரசர் காலில் விழுந்தார். அரசரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவாளைத் தூர வீசிவிட்டு அடியவர் காலில் வீழ்ந்தார். இருவரும் ஒன்றுபட்டு அசரீரி தந்தவனைப் போற்றினர்.

யாவும் அவன் செயலேயாதல் பின்னும் புலப்படத்தக்கவாறு, சரிந்த பூங்கூடை நிமிர்ந்தது. சிதறிய மலர்கள் கூடையில் ஏறி நிறைவுற்றன. சிவகாமியாண்டார் மற்றைய நிகழ்ச்சிகளில் எவ்வாறு மனம்பற்றினுரோ தெரியாது. இப் பூங்கூடை நிகழ்ச்சி கண்டு பெருவாழ்வுற்றது மட்டும் தெரிய வந்துள்ளது.

உயிர்த்தெழுந்த யானைமீது அரசர் ஏறிச்செல்லத் தாம் கண்டுமகிழ விரும்பி அடியவர் அங்ஙனமே வேண்டி அவ்விருப்பம் நிறைவுறப்பெற்ருர்.

எறிபத்தநாயனுர் இவ்வகையில் திருத்தொண்டியற்றி வாழ்ந்து சிவகணநாதத் தலைவராம் பெரும் பேறுற்ருர்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆ! ஆ! என் குற்றேவல் அழிந்தவா!'

தம்பால் வந்த அடியவர் வேண்டுதலை நிறைவேற்றும் விஷயத்தில் அவலப்பட்டவர்கள் அறுபத்து மூவரில் மூவர். திருநீலகண்ட நாயனூர்க்கு ஓடு விஷயமான ஒரு பிரச்சினையில் தவிப்பு ஏற்பட்டது. அமர்நீதி நாயனூர்க்குக் கோவணம் சம்பந்தமான ஒரு பிரச்சினையிற் கடுந்தவிப்பு ஏற்பட்டது. இவ்விருவர் விஷயத்திலும் சம்பந்தப்பட்ட அடியவர்கள் நேருக்குநேர் எதிர்நின்று பண்ணிய ஆக்கினையால் நிகழ்ந்த தவிப்புக்கள் அவை. இனி, மற்றொருவர் தவிப்பு நிலையோ இவர்களில் இரண்டாமவர் தவிப்பு நிலையை விடவும் எத்தனையோ படியால் உயர்ந்தது. அவர் தம்மைத் தாமே தீர்த்துக்கட்டுமளவுக்கு உயர்ந்தது. ஆனால், இவர் விஷயத்திற் சம்பந்த அடியார் முன்னிலையில் இல்லை. முன்னிலையில் மட்டிலுமல்ல அந்த அண்டையயலிலும் இல்லை. ஒருமுறை வந்தவர் ஏதோ சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டுப் போயேவிட்டார். மீள அந்தப்பக்கம் திரும்பவேயில்லை. இருந்தும் அவர் சொன்ன சொற்குறிப்பையே முன்னிலைப்படுத்திக்கொண்டு இவர்பட்ட தவிப்பு மிகச் சுவாரஸ்யமானது. இதயத்தைத் தீண்டிவிடக் கூடியது.

இந்த நாயனூர் காஞ்சீபுரத்தில் வாழ்ந்தவர். சலவைத் தொழிற் குலத்தினர். 'தூசொலிக்கும் ஏகாலிக்குலம்' என்பது அக்குலத்தின் பழைய பெயர். தம் தொழில் இடங்கொடுக்கக் கூடிய அளவில் அவர்க்கும் ஒரு தொண்டு கைவந்திருக்கின்றது. தமது திரிகரணங்களையும் சிவன்பாலே செல்ல வைத்துக்கொண்டு சிவனடியார்களுக்குத் துணிவெளுத்துக் கொடுப்பது அவர் சிவத்தொண்டு. அவர்க்குப் பெயரமைந்தவாற்றிலும் ஒரு சூக்ஷ்மம் உண்டு. தம் தொண்டொழுக்கத்தில் அடியார் குறிப்பை உணர்ந்து அதைக் கடைபோகக் காப்பாற்றும் தன்மை அவருடைய விசேட சிறப்பியல்பாயிருந்தது. இந்தச் சூக்ஷ்மத்தோடுகூடிய பெயர் அவர் திருப்பெயர். அவர் பெயரை அறிவிக்குஞ் சேக்கிழார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புண்ணியமெய்த் தொண்டர்திருக்
குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத்
தொண்டரெனுஞ் சிறப்பினார்'

எனக் காரணவிளக்கத்துடன் மொழிந்திருப்பக் காண்கின்றோம். திரு என்ற அடைமொழி மற்றுஞ் சில நாயன்மார் பெயரோடும் இணைந்துள்ளது. ஆனால் தொண்டர் என்ற பதம் பெயரோடியைந்து வழக்குற்றது இவரொருவருக்கேயாம். இவர் தொண்டின் மகிமை பற்றியே இது இங்ஙனம் ஆயிற்றெனலாம்.

இவர் அயலறியா அப்பிராணியாக, காஞ்சீபுரத்தில் ஒரு கோடியிலே வாழ்ந்தவர். அடியார்கள் ஆரேனும் வருதலுண்டு. அவர்கள் ஆடையை வாங்கி அவர் குறிப்பின் வண்ணம் வெளுத்துக் கொடுப்பார். அவர் தொழிலுக்கும் ஆத்மீக இயல்புக்கும் அமைந்த பொருத்தமே பொருத்தம். அடியவர் துணியை அழுக்கு நீக்க நீக்க அவருடைய ஆத்துமத்தைச் சார்ந்த மல அழுக்கும் நீங்கி நீங்கி வருகிறது. வெளுக்குந் துணி வெளுக்க வெளுக்க அவர் ஆத்துமமும் வெளுத்து வெளுத்துப் பிரகாசித்து வருகிறது. இவ்வகையால் செய்யுந் தொழிலுக்கு உயர்ந்த ஊதியம் பெறுந் தொழிலாளியாக அவர் விளங்குகிறார்.

ஒருநாள் அவரை நாடி அடியவரொருவர் வந்தார். அன்று அவர் அணிந்திருந்த துணியோ அழுக்கின் அசல். அடியவரோ முதுமையின் முதிர்பதம். காலமோ கடுங்குளிர் கொடுக்கும் கூதிர்காலம். நேரமும் பிற்பகல். வந்தவர் மிகக் கண்டிப்பானவர். ஒரு நிபந்தனையின் பேரிலேயே துணியைக் கையளிக்கின்றார். 'இக்கந்தையைக் கைவிடவோ எனக்கோ இசைவில்லை. இக்குளிரில் இது இல்லாமல் நான் சமாளிக்க முடியாது. பொழுது மறைவதற்குள் வெளுத்துலர்த்தித் தருவீரேல் ஏற்றுக்கெள்ளும்' என்பது நிபந்தனை. அப்படியே செய்வதாக வாக்களித்துக் கந்தையை ஏற்றுக் கொண்டார் நாயனார். அடியவர் பின்னும் ஒரு வற்புறுத்தல். 'இன்றே இதை வெளுத்துலர்த்தித் தராதொழிவீராகில் இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழஉடல் இக்குளிரில் அடைய இருக்கிற கதிகேட்டுக்கே நீரே ஜவாப்தாரியாவீர்' என்று அவர்மேற் பழிபோட்டாற் போலக் கூறி அவர் போய்விட்டார்.

அன்றைக்கே வேறிடங்களிலும் இது போன்ற சோதனைக்கு ஏற்பாடாகியிருந்ததோ அல்லது தனக்குத்தான் ஏன் ஆடை? தான் திகம்பரன்தானே என்றதனுலோ, கந்தையைக் கொடுத்ததும் கொடாததுமாகவே அவர் போய்விட்டார். ஆனல், இங்கு அவர் நிற்பதிலும் நில்லாமையிலுமோ அல்லது திரும்புதலிலும் திரும்பாமையிலுமோ தங்கியிருக்கவில்லை நாயனுரின் பணி. அவர் குறிப்பின் வழியது அது. அவர் நிற்காவிட்டாலும் அவருடைய குறிப்பு இவர் முன் நின்றுகொண்டேயிருக்கிறது. எப்படியாவது செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கையின் பேரில் நாயனுர் துணியை நீர்க்கரைக் கெடுத்துச் சென்றார். பரபரப்பாக உவர்மண் பிசைந்து அவித்துத் தோய்க்கக் கையிலெடுத்ததுதான் தாமதம். வந்துவிட்டது மழை! மழையோ மழை, கொட்டு மழை, திக்குத்திகந்தமெலாம் ஒருங்கே இருண்டடைத்துப் பொழியும் இராட்சத மழை! மழைபொழியத் தொடங்கவே நாயனுர் மனம் அழியத் தொடங்கி விடுகிறது. அந்நிலையில்

'அசைவுடைய மனத்தன்பர்
அறிவுமறந்து அருந்தவர்பால்
இசைவுநினைந்து அழிந்துஇனியான்
என்செய்கேன் எனநின்றார்'

இனி யான் என் செய்கேன் என்ற இக்கூற்றே அவர் உள்ள நிறை நிலைகலங்கி ஆட்டங்கண்டு விட்டமை தெரிக்கிறது. அந்த ஆட்டத்துக்குத் தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றது அடியவர் சொன்ன அந்தக் கனரகமான கண்டிப்பான வார்த்தை. 'ஒலித்தின்று தாரீரேல் இந்தவுடற் கிடர் செய்தீர்' என்ற அறுதி வாக்கியம்; அது பற்றிய நினைவு.

இத்தவிப்பிற் கிடையிலும் அவர் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு சிறு நம்பிக்கையின் ஆவல். தொடங்கிய மழை ஒருக்காலாயிலும் விடுந்தானே என்று அந்த எல்லையை வைத்தகண் வாங்காமலே பார்த்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓவாதே பொழியுமழை ஒருகால்விட் டொழியுமெனக்
காவாவி திருத்தொண்டர் தனிநின்ருர் விடக்காணுர்.'

ஒன்றன்மேல் ஒன்ருய் அடுக்கித் தொடர்ந்து வரும் துன்பத் தொடர்ச்சி ஒருகால் ஒழியும் என்று நப்பாசையால் நலிகின்றன வாழ்க்கையில் விடிவு காணத் துடிக்கும் எத்தனையோ சென்மங்கள். 'பொழிகின்ற துன்பப் புயல், எப்போ நிற்கும் என்று ஏக்கற்றுக் கிடக்கின்றன மணிவாசகஞர் போன்ற எத்தனையோ மஹாத்மங்கள். இங்கே ஏகாலிப்பிராஞர்க்கு அப்படியான பெரும் பலன் பற்றிய நோக்கு எதுவும் இல்லை. எனினும் அந்த அருந்தவர் குறிப்பைக் கடைபோகப் போற்றவேண்டுகின்ற ஆவலிஞல் இவரும், ஓவாதே பொழியுமழை ஒருகால் விட்டொழியுமென எதிர்பார்த்திருக்கின்ருர். இவர் சார்பில் அமைகின்ற இக்கவிதைச் செழுந்தொடர் அநேகம் அநேகம் ஆத்மாக்களின் உள்ளத் துடிப்பைப் பிரதிபலித்து நிற்கின்றது. நித்திய ஜீவத்துவம் பெறும் பத்தியமான ஒரு அருந்தொடர் இது.

மழையோ விட்டபாடில்லை. நாயஞர்க்குச் சிந்தனையவலம் பெருகுகின்றது. என் ஆத்மத்துக்கு ஒரேஒரு ஆறுதல், ஒரேஒரு ஆசீர்வாதம், அந்தக் குறிப்பைக் காப்பாற்றுதலே. 'மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன்' என்றும், 'தாரீரேல் இந்தவுடற் கிடர் செய்தீர்' என்றும் அந்த அருந்தவர் உணர்த்திய குறிப்பொன்றுள்ளதே! இதோ பகை ஒன்று உருத்து வருவதுபோல மாலைக்காலம் வருகிறதே, அவர் மெய்குளிரப்போகின்றதே! என் குற்றேவல் வியர்த்தமாகின்றதே! சீ! சீ!! இனி எனக்கென்ன குற்றேவல். அதற்கினி நிலையெங்கே என இசைக்கின்றது அவருடைய உள்ளத் தவிப்பின் இரண்டாம் வேகம்.

மேவார்போற் கங்குல்வர
மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆவாஎன் குற்றேவல்
அழிந்தவா எனவிழுந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன், என்செய்கேன் என்றெழுந்தது முதல் வேகம். இது இரண்டாம் வேகம். நாம் திருத்தொண்டு என வழங்குவது அவர் வாக்கில் குற்றேவல் என ஒலிக்கிறது. இந்த நாயனுரின் ஆத்ம ஸ்வரூபத்தைத் தாங்கிநின்றது அவருடைய திருத்தொண்டு ஒன்றே. அதாவது குறிப்பை நிறைவேற்றித் திருப்தியுறுதல் ஒன்றே. இங்கே இப்பொழுது அத்தொண்டுக்கு நிலையில்லை. எனவே அவர்க்கும் நிலையில்லையேதான். குற்றேவல் அழிந்தது என்னும் உணர்வு தோன்றினதுமே அவர் விழுந்துவிட்டார். 'அழிந்தவா என விழுந்தார்' அர்த்த கௌரவமான ஒரு படைப்பு. ஆ! ஆ! அழிந்தவா! தவிப்போ தவிப்பு.

நாயனுருடைய இவ்வுள்ளத் தவிப்பின் மூன்ரும் வேகத்தைக் கவ்விப்பிடித்து அமைத்துக் காட்டும் செய்யுள் ஒன்று அடுத்து வருகின்றது. முன் செய்யுளிற் போலவே உள்ளத் துடிப்பின் அநுகரணம் இச்செய்யுளோசையிலும் பிரதிபலிக்கின்றமை காணலாம்.

விழுந்தமழை ஒழியாது மெய்த்தவர்சொல் லியஎல்லை
கழிந்ததுமுன் பொலித்துமனைக் காற்றேற்க அறிந்திலேன்
செழுந்தவர்தந் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செயலென்று துணிந்தெழுவார்.

நாயனுரின் உள்ளத்தவிப்பை விசேஷதரமாக உருக்கி வடித்த உயிரோவியமாய்த் திகழும் இச்செய்யுள் சொற்ரெறுஞ் சுவையுணர நிற்கின்றது. தொடங்கிய நிலையிலிருந்து சற்றேனுந் தணியாது இதுவரை ஒரேயடியாய்ப் பெய்கின்றது மழை என்பார். விழுந்த மழை என்றும், என்குற்றேவலுக்கமைந்த அவகாசம் காலாவதியாய் விட்டது என்பார் மெய்த்தவர் சொல்லிய எல்லை கழிந்தது என்றும், மழையைப் பாராமல் துணியை வெளுத்துக் கொண்டுபோய் வீட்டிற் காற்ருடக் கட்டியாவது கொஞ்சமேனும் ஈரமுலரச் செய்திருக்கலாமே. அந்த முன் யோசனை என் மூளையில் வரவில்லையே என்பார், முன்பொலித்து மனைக்காற்றேற்க அறிந்திலேன் என்றும், அடியவர் உணர்த்திய குறிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியம் பண்ணிக் 'குறிக்கோளிலாது கெட்டேன்' என் பார் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த என்றும், நானு மொரு தொண்டனு என்பார் தொழும்பனேன் என்றும் கூறுவராயினர்.

நடந்து முடிந்தது முழுவதற்கும் தன்னையே உத்தர வாதியாக்கிப் பரிந்துருகிப் பதைபதைக்கும் ஒரு தொண் டுள்ளச் செவ்வியை இங்கே காண்கின்றோம். தன் தவற்றுக் காகத் தானே தனக்கு முடிவு செய்துகொள்ள முந்தும் உள்ளக்கதிப்பை, 'இனி இதுவே செயல்' என்ற தொடர் நாகரிகமாகத் தெரிவிக்கின்றமை இதன்கண் மற்றோர் சிறப் பாகும். இத்தொடர் தெரிப்பதுகொண்டு, என்னதான் செய்து விடுவாரோ என்ற அங்கலாய்ப்பு ஏற்பட இடமிருக்கின்றது.

மேல் வந்தவற்றுள், 'முன்பொலித்து மனைக்காற்றேற்க அறிந்திலேன்' என்ற சிந்தனைப் பகுதி முக்கியத்துவம் பெறு கின்றது. தன்னை முழுத்த உத்தரவாதியாக அவர் துணிந்து கொண்டதற்கு ஆதாரமாயிருக்கிறது இந்தச் சிந்தனை. கடைசி நேரத்தில் அவருக்கு லப்பியமாகக் கூடியதாயிருந்தது அவ் வொரு செயலே. அதனை நிகழாவண்ணஞ் செய்துவிட்டது மூளையின் நிர்மூடத்துவம். அதாவது முன்யோசனை பண்ணு நிலைமை. உதவ வேண்டிய தருணத்தில் உதவாத மூளை, அதைத் தாங்கும் தலை — அதை இனியேன்; அதற்குத் தக்க சிட்சை கொடுத்தலே இனிச் செய்யவுள்ளது. இதனைச் சூசகமாகக் கொண்டிருக்கின்றது 'இனி இதுவே செயல்' என்ற தொடர். அதற்குச் சிட்சை இதுதான் என அவர் கருத்திலமைத்துக் கொண்ட ஒன்றைக் குறிக்கின்றது 'துணிந்தார்' என்னும் பதம். சட்டென அது நடைமுறைக்கு வரப்போகிறதென் பதைத் தெரிவிக்கிறது எழுவார் என்ற சொல்.

சீட்டாட்டக்காரன் 'துரும்பைக்' கவிழ்த்துவைத்தது போலிருக்கிறதே இந்த 'இனி இதுவே செயல்.' இதற்குள் என்னதான் கிடக்கிறதோ? இது இந்நேரம் எங்கள் அங்க லாய்ப்பு. அந்த அங்கலாய்ப்புக்கு வேண்டுவது கிடைப்பது இனிது இலகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையையே அடித்துச் சிதைக்கப்போகிறார். அதுவே குறித்த, தொடராற் சூசிக்கப்பட்டது. கந்தை அடிக்குங் கல்லில் தலையை அடித்துடைக்க மோதுகிறார். ஒருபுறம், அக்கல்லின் ஓரமாக எழுந்து தலையைத் தாங்கிப் பிடித்துக் கொள்கின்றது ஒரு கை. அது, 'அணிவளைத் தழும்பர்மலர்ச் செங்கை' என்பது பாடல். வளைத்தழும்புற்றவர் இவர்; தலை தழும்புறாமல் தாங்கிக் கொள்கின்றார். மறுபுறம் அவரே தேவி சமேதராய் இடபவாகனத்திவர்ந்து நாயனார் காணக் காட்சி தருகின்றார். முன், கந்தைகொடுத்தகன்றவர் பின், முதல் முறையாகவும் கடைசிமுறையாகவும் இப்போதான் வந்திருக் கிறார். முன் அடியார் வேடத்தில் மறைந்து வந்தவர் இப் பொழுது சிவனும் உருவில் வெளிப்பட்டு நிற்கின்றார். தலை தப்பினது தம்பிரான் (புண்ணியம்) கருணையாயிற்று.

அவ்வளவில் மலர்மழையும் மங்காத சோபையுமாக அவ்விடச் சூழ்நிலை மாற்றம் பெறுகின்றது. அத்துணையும் விடாத மழையும் இப்போதான் விட்டிருக்கின்றது. அது விட்டதெங்கே? அதுதான் மலர்மழையாயிற்று எனக் கொண் டாலுமே நயமாயிருக்கும். நீர்த்தன்மை போய் மலர்த்தன்மை ஆயினதே தவிர மழை மழையேதான். 'வானிறைந்த புனல் மழை போய் மலர்மழை யாயிட' என்பது செய்யுள்.

இச்சூழ்நிலையில் தான் போற்றிய உண்மையைத் தழுவிச் சுவரூபித் தெழுந்து நிற்கும் நாயனாரின் நிலையை எழுதிக் காட்டுகின்றார் சேக்கிழார்.

**'மெய்த்தொண்டர்**
**தானிறைந்த அன்புருவாய்க் கைதொழுது தனிநின்றார்.'**

நிறைந்த அன்புருவம். அந்த அன்புக்கு அமைதி செய் கின்றது கூப்பிய கை. இவ்வாறு அவர் நிற்கின்ற நிலையே ஒருதனி. மழை ஒருகால் விடும் என்று எதிர்பார்த்த இடத்தும் அவர் தனிநின்றார். இங்கும் தனிநின்றார். அங்கே அங்கலாய்ப் பில் தனி, இங்கே அமைதியில் தனி. நாமறிந்தவாறு அவர் தொண்டும் ஒருதனி. அவருழந்த உழப்பும் ஒருதனி. அவரெய் திய பேறும் ஒருதனி. அவர் இங்குந் தனி, அங்குந் தனி — தனிநின்றார், நல்ல விமர்சனம். சிவபெருமான் ஏகாம் பரமணைந்தார். நாயனார் சிவலோகம் அணைந்தார்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றவர்தந் திருப்பெயரோ வேறொருபேர்

சார்ந்ததன் வண்ணமாதல் ஆன்மாவின் சொரூப இலக்கணம் என்பர். அசத்தைச் சார்ந்தால் அது அசத்தின் வண்ணமாய் நிற்கும். சத்தைச் சார்ந்தால் அது சத்தின் வண்ணமாய் நிற்கும். இந்த ஆன்மப் பண்பு அதற்கு அநுபவப் பேறு நிகழ உதவுகின்றது. பாசத்தைச் சார்ந்து பாசத்தின் வண்ணமாகாதவரை ஆன்மாவுக்குப் பாசப்பேறு அநுபவமாக வராது. அவ்வாறே பதியைச் சார்ந்து பதியின் வண்ணமாய் ஆகாதவரை பதிப்பேறும் அநுபவமாய் வராது. இவற்றில் முன்னையது பெத்தநிலை, பின்னையது சுத்தநிலை என்பர். இருநிலையிலும் அதன்நிலை சார்ந்ததன் வண்ணமாதலே.

'யாதொன்று பற்றினதன் னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீஉன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையேம் யாம்'

தாயுமானுரின் சிதம்பர ரகசியத்தில் வரும் உபதேச உண்மையிது.

ஆன்மாவுக்கு அறியுந்தன்மை உண்டேனும் அது தானுயறிவதன்று. அதற்குச் செயற்படுந்தன்மை உண்டேனும் தானாகச் செயற்படுவதன்று. இத்தன்மையை முன்னிட்டுத் திருவருள் அதனுடன் என்றும் நீங்காது உடனாய் நின்று அறிவித்துச் செய்வித்தும் வரும். அதன் தொழிற்பாட்டியல்புகள் ஐந்துவகையாய்ப் பேசப்படுவதாகத் தத்துவப் பிரகாசம் என்ற நூல் தெரிவிக்கின்றது. அவற்றிலொன்று 'பற்றியது மெய்யாக்கல்' எனப்படும். ஆன்மா எதைப் பற்றிற்றோ அதை மெய்யெனவே கொண்டு நிற்கும். பெத்த நிலைக்கு இது தற்காலிகமானது. சுத்த நிலைக்கு இது நிரந்தரமானது. இப்படித் தம் சுத்தநிலையில் பற்றியதை மெய்யாகக்கொண்டு அப்பற்று நிலையில் உலகறியப் பிரகாசித்த மகாநுபாவர் அப்பூதியடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்பால் மற்றவர்க்குப் பற்று நிகழ்தல் இருவகையா லிடம்பெறும். நேர்முகத்திற் கண்டு பயிலுதலினுல் நிகழ்வ தொன்று. ஒருவரின் அமாநுஷ்ய இயல்புகளை, அவர் புகழைக் கேள்வியுறுதலால் நிகழ்வதொன்று. முன்னையதைப் புணர்ச்சி யால் வரும் பற்று என்றும் பின்னையதை உணர்ச்சியால் வரும் பற்று என்றும் கூறுவர். புணர்ச்சியால் வரும் பற்றினும் பார்க்க உணர்ச்சியால் விளையும் பற்றே உறுதித்தன்மையாற் கூடியதென்றும் புணர்ச்சி பெற்றிருந்தும் உணர்ச்சி இல்லாத வழி நண்பு பலன்படாதென்றும் உரைப்பர் திருவள்ளுவர்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்'

என்பது குறள். அப்பூதியார் உணர்ச்சிவளத்தால் உறுதி பெற்ற பற்றுமிகுதி வாய்ந்தவர்.

இவ்வப்பூதியடிகள் திங்களூரில் வாழ்ந்த ஒரு அந்தண மேதை. செழிப்பான இல்லறவாழ்வில் இருந்தவர். பழுத்த சிவபக்தராகிய வைதிகர். திருப்பழனத்தின்மேல் அப்பர் அருளிய தேவாரமொன்று அவரது வைதிகப் பண்பையுஞ் சிவ பக்திச் செழிப்பையுந் தொடுத்து வர்ணிக்கின்றது. திருப் பழனப் பெருமான் திருவடிகள் அப்பூதியாரின் முடியை அலங் கரிப்பனவாக அத்தேவாரம் பாராட்டுகின்றது.

'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே'

பழனத்தான் திருவடிகள் அப்பூதியார் குஞ்சிக்கு முடித்த பூவென்று அப்பர் சுவாமிகளே பாராட்டும்போது அவருடைய சிவபக்திச் செழிப்புக்கு வேறும் என்ன அத்தாட்சி வேண்டியிருக்கின்றது. அழலோம்புதலால் புறவாழ்விற் சூழும் கலியெல்லாம் போக்கினுர், சிவபக்தியால் அகவாழ்வில் மலியும் கலியெலாம் அகற்றினுர். இவருடைய ஆத்தும உயர் பேறு நிறைவுறுதற்கு இன்னுமொன்று வேண்டியிருந்தது. அதுவும் ஆண்டவன் கிருபையாற் கிடைத்துவிடுகிறது. 'தொண்டலால் துணையு மில்லை தோலலா லுடையு மில்லை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதற்கிணங்க, தொண்டு நெறியாக ஒன்றைப் பின்பற்றவும் விழைந்த அவருக்குத் 'திருநாவுக்கரசு' நாயனர் செய்தி எப்படியோ எட்டிவிட்டது. அச் செய்தியின் தத்துவார்த்தத்தைத் தன்னுணர்வில் தெளிந்துகொண்டார். திருநாவுக்கரசர் செய்தியில், அவர் திருத்தொண்டின் உறைப்பினுல் சமணக் கொடுமைகளினின்று தப்பிப்பிழைத்த சம்பவம் அவர் உள்ளத்தை அள்ளிவிட்டது. தொண்டினுல் அம்மைப் பலனெய்தியவர்கள் பலரிருக்கலாம். நம்போல்வாருக்கு அது எப்படி விளங்கும். தொண்டினுல் அம்மை மட்டிலுமன்றி இம்மையிலும் பயனெய்தியவர்களன்றே நம்போல்வாராற் புரிந்துகொள்ளப்படற்குரியர். அத்தகையோர் இத்திருநாவுக்கரசரைப்போல வேறு யாருளர்? என்று தம் நெஞ்சோடு பலகால் உசாவி உசாவி விடையின்மைகண்டு, திருநாவுக்கரசே திருநாவுக்கரசுதான்! என்ற துணிவு அவரிடந் தழும்பிப்போயிற்று.

அதன்மேல் தொண்டென்று அவர் எதைக் கருதினுலும் அது திருநாவுக்கரசாகவே அவருக்கிருந்தது. அந்த நாமத்தை விலகி எதுவும் அவராற் கற்பனை பண்ணப்படக்கூட அவகாசம் இருக்கவில்லை. அவர் பள்ளிக்கூடத் தர்மம் ஏற்படுத்தினுல் அது திருநாவுக்கரசு. பொதுக் கிணறு, குளம் அமைத்தால் அது திருநாவுக்கரசு. இப்படியே அவருடைய திருநாவுக்கரசுணர்வு நாளடைவில் விருத்தியுற்று அவருடைய வீடு வாசல் நிலம்புலம் புத்திர பௌத்திரர் எதுவும் அவருக்குத் திருநாவுக்கரசேயாய் விட்டன. திங்களூரின் பிரதான குடியிருப்பாளராகிய அவர் காரணத்தால் திங்களூர் முழுவதும் வெகு விரைவில் திருநாவுக்கரசு என்ற பெயர் மயமாய்விட்டது. எந்தக் கோணத்தில் திரும்பினுலும் அப்பெயர் எவர் கண்ணிலும் எளிதிற்படக்கூடியதான அறிவித்தற் பலகைகள் எங்குமாயின.

இந் நிலையில் ஒருநாள் தற்செயலாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பழன தரிசன முடித்துத் திங்களூர்ப்பக்கம் போயினுர். அவர் திங்களூர்க்குப் புதியவர். திங்களூரும் அவருக்குப் புதியது. எங்கு பார்த்தாலும் திருநாவுக்கரசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறதே! இதன் மர்மம் யாதாயிருக்கலாம் எனச் சிந்தித்தார். இப்படி இப் பெயரைப் பிரகடனம்பண்ணுபவர் யார் என்று விசாரித்தார். ஆளைக் கேள்வியுற்றவுடனே அவரைச் சென்று காணும் வேட்கை உளதாயிற்று. அப்பூதியாரின் புணர்ச்சி பழகாத, உணர்ச்சி நண்பராகிய சுவாமிகள் அவர்வீட்டு வாயிற்படிக்கே வந்துவிடுகின்றார்.

ஆரோ அடியவர் என்ற அளவில் அவரை வரவேற்கும் அப்பூதியார், விழுந்து வணங்கி,

'முடிவில்தவஞ் செய்தேன்கொல்
முன்பொழியுங் கருணைபுரி வடிவுடையீர்
என்மனையில் எழுந்தருளிற்று என்'

என இன்மொழி பகர்கின்றார். ஆளை அறியா நிலையிலேயே இவ்வளவு பரிவென்றால் அறியவரும்பொழுது எப்படி இருக்குமோ?

'தரிசனந் தன்னிலீதென் சிந்தையைப் பிணிக்கு மென்றால்
பரிசனந் தனில் என்னுங் கொல்'

என்றார் அங்கொருவர். அதேபோல இதுவும் ஆகப்போகிற ஒரு இரசனை எங்களுக்கு இருக்கவே இருக்கிறது. அது பிறகு.

அப்பூதியார் இன்மொழிக்கு அப்பர் பதில் :-

திருப்பழனந் தரிசித்துவரும் வழியில், நீர்வைத்து நடாத்துந் தண்ணீர்ப்பந்தல் முதலாய தர்மங்களைக் கண்டுங் கேட்டும் உம்மைத் தரிசிக்க இவ்விடம் வந்தோம் என்பது பதில். தம் பதில் முடிவில் ஒரு ஆசங்கையையுங் கிளப்புகிறார் அப்பர்.

சிவனடியார்க்கென்று நீர் அமைத்த அத்தரும நிலைகளி ளெல்லாம் நும்பெயரை எழுதாது வேறொரு பெயர் எழுத வேண்டிய காரணமென்? என்பது அப்பர் கேள்வி.

தூங்கிக்கிடந்த சர்ப்பக் குருளையைச் சிறுசுள்ளியால் தொட்டுவிட்ட மாதிரியாயிற்று நிலைமை. சர்ப்பக் குருளை தொட்டுவிட்ட சுள்ளிக்கெதிரே படம்விரித்தெழும். அப்பூதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் உணர்வும் வேறொரு பேர் என்ற அப்பர் கருத்துக்கெதிரே அதை அடாசி எழுகின்றது. அவரைக் கண்ணின்று கண்ண றக் கண்டிக்கின்றது. ஒழிவு மறைவின்றிச் சொல்வதானால், அப்பர்மேற் காய்ந்து விழுகின்றார் அப்பூதியார். 'நன்றருளிச் செய்திலீர்': உம்பேச்சு அழகற்றதாயிருக்கின்றது. உம்பேச்சு உமக்கு அழகல்ல. அதென்ன வேறு? அதென்ன ஒருபேர்? இதென்னையா விபரீதம்!

'நாணிலமண் பதகருடன் ஒன்றியமன் னவன்சூழ்ச்சி......
திருத்தொண்டின் உறைப்பாலே... ...
வென்றவர்தந் திருப்பெயரோ வேறொரு பேர்!'

என்றே அடாசிவிட்டார்.

உரோசமற்ற சமணர் சேர்க்கையால் மயங்கி அவர்கள் வஞ்சனைகளில் ஒன்றிவிட்ட பல்லவன் செய்த சூழ்ச்சிகளைத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்ற அந்த மகாநுபாவர் பெயரையோ நீர் வேறு ஒருபேர் என்று அத்தனை அலட்சிய மாகச் சொல்லிக்கொள்கின்றீர் என அவர் முகத்தெதிரே விளாசுகின்றார் அப்பூதியார். வேறொருபேர் என்ற சொல் புலப்படுக்கும் அலட்சியபாவம் அப்பூதியார்க்கு அடியோடு பிடிக்கவேயில்லை. அவ்வளவில் விட்டாரில்லை. மேலுந் தொடர் கிறார். 'திருத்தொண்டின் உறைப்பாலே இம்மையிலும் பிழைப்ப' தென என்போல்வாருந் தெளிய அத்தகைய செம்மையான திருவருட் சாதனையை நிலைநாட்டிய அந்தப் பெயர்பற்றி இத்தகைய கொடுமொழியுரைத்தீரே! அதுவும் என் காதிற்பட உரைத்தீரே! அகிலமறியக் கடலில் மிதந்து கரையேறிய அவர் பெருமையை இந்தவுலகில் அறியாதவர் எவர்தான் இருக்கமுடியும். சிவவேடதாரியாயிருந்தும் இது அறியாதிருக்கிறீரே. இம் மங்கலவேடத்தில் நின்று இந்த அமங்கலம் பொழிகின்றீரே! நீர் யார்? சொல்லும். இப்படி முடிகிறது அப்பூதியாரின் ஆத்திரக் குமுறல்; கனரகமான கண்டனத் தாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகள் பாடு எப்படியிருந்திருக்கும்? 'அந்த மில் புகழா னன்புக் களவின்மை கண்டேன்' என்றே அவர் உள்ளம் வியந்திருக்கும். இம்முகத்தெதிரே விளாசியெழும் அப்பூதியாரின் உத்வேகக்கனல் தணியத்தக்கதாக, தண்ணிய தணிந்த பவ்வியமான பணிந்த செவ்விய சொற்களால் தன் னுண்மையை வெளிப்படுத்துகின்ருர் அப்பர். இந்தத் 'தெருளு முணர்வில்லாத சிறுமையேன் ஆகிய யானே அவர்' என முடி கின்றது அப்பரின் அருள்மொழி.

இம்மொழி அப்பூதியாரின் உள்ளநிலையை ஒரு குலுக்குக் குலுக்கித் தூக்கித் திருப்பி நிமிர்த்தி விடுகின்றது. அவ ரிடம் நின்ற உத்வேகம், உணர்ச்சித்துடிப்பு, ஆத்திரம், ஆக்கு ரோஷம் அத்தனையும் எங்கொளித்தனவோ தெரியவில்லை.

'கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார்.'

அவருடைய ஆத்திரநிலை மெய்ப்பாடுகள் அவ்வளவும் அன்புநிலை மெய்ப்பாடுகளாய் மாறின. பெயரையே பூசித்த வர் பொருளைப் பூசிக்க வாய்த்தால் எப்படியிருக்கும்! ஆனந்த முற்றுத் துள்ளுகின்ற ஐந்து வயதுப் பாலனுய் ஆகிவிட் டார் அப்பூதியார். ஆடினுர், ஓடினுர், பாடினுர், குதுகலித் தார், கூத்தாடினுர், ஓடி ஓடி அறிவித்தார், வீட்டினுள்ளிருந் தார் எல்லாரையுஞ் சேர்த்துத் திரட்டிக் கொண்டுவந்து விட்டார்.

பெரியதோராரவாரக் களிப்பு அவர் வீடு முழுவதும் அலையெறிகின்றது. அப்பர் சுவாமிகளுக்கு ஆசனம், அர்க்கி யம், பாத்தியம், பாதபூசை எல்லாம் மிகப்பிரமாதம். முடி வில் திருநீற்றுக்காப்பேந்தி நின்று திருவமுதுகொள்ள விண் ணப்பமாகின்றது. அநுமதியுங் கிடைத்தாயிற்று.

மிகத் துரிதமான ஏற்பாடுகள். அமுதுவகை அனைத்தும் தயார். வாழைக்குருத்துக் கொண்டுவர அப்பூதியாரின் மூத்த மகன், மூத்த திருநாவுக்கரசு ஏலவே வாழைத்தோட்டத் துக்கு அனுப்பப்பட்டுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன திருவுளமோ! வாழைக்குருத்தைக் கொண்டுவந்து சேர்த்த மகன், வாழையிலிருந்து தீண்டிய சர்ப்ப விஷவேகத் தால் பெற்ருர் முன்னிலேயிலேயே துடித்து விழுந்திறக்கின்ருன்.

இந்நிலேயில் யாது செய்வது என்ற பிரச்சினே. அதற்கிடை யில் எது அவசியம் என்ற வினு முந்திக்கொள்கிறது. பெற்ருர் தீர்மானத்தில் அதற்கே முதலிடங் கொடுக்கப்படுகின்றது. 'அற இது தெரியாவண்ணம் அமுது செய்விப்போம்' என்று கணவரும் மனேவியும் அந்தரங்கத் திட்டம் வகுத்துக்கொள் கின்ருர்கள். ஆர்க்கும் அசுகை புலப்படாத 'குசுகுசு' தீர் மானம். சடுதியிற் பையனின் சடலம் மறைக்கப்பட்டாயிற்று.

'உண்டோ அன்பினுக் கரியது?' என்ருர் அங்கொருவர். அப்பர்க்கு அமுதூட்டலில் முனேந்த அன்பு பிள்ளேக்காகப் புலம்பும் நிலேயைப் பின்தள்ளி வைத்துவிட்டது. அதற்கிடை யிலும், 'என்ன இது! அப்பர் அமுது செய்யக் காலந்தாழ்க் கிறதே!' என்ற ஒரு மன உளேச்சல்.

'அமுது செய்தெங் குடிமுழுதுய்யக் கொள்வீர்' என்று அப்பரிடம் அழைப்பு நிகழ்கின்றது. அப்பர் போசன பீடத் தில் அமர்ந்துவிட்டார். அமுது கறி படைக்குமுன்னர் அப்பர் விபூதி வழங்குகின்ருர். நாயனுர்க்கும் மனேவியார்க்கும் அளித்ததன்மேல் இனி, புதல்வர்க்கு வழங்கும் தருணம்.

எங்கே மூத்தவன், காட்டும் இங்கே, விபூதி சாத்த என் றது அப்பர் ஆணே. 'இப்போ திங்கவன் உதவான்' அப் பூதியார் பதில்.

அப்பூதியாரும் மனேவியும் அதிமகாசமர்த்தர். அகத்தி லுள்ளதை முகம் எப்படியுங் காட்டாதமையாது. பொய்ச் சாட்சி சொல்விக்கப் பொருத்தமில்லாத பிரகிருதி முகம். அவ்வகையிற்கூடப் புதல்வன் துயரம் புலப்படாவகையில் இருந்தது, அவர்கள்பாலமைந்த அதிசயப் பெருமை. அது சும்மா சாமானியமல்ல. அவ்விரு உள்ளமும் அசத்தியல்பி னின்று நீங்கிச் சத்தியல்பைத் தலேப்பட்டதனுலாய பெருமை. இக்கட்டத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இப்போ திங்கவன் உதவான்' என்று அநாயாசமாக ஆசாரசுத்தமாக அப்பூதியார் மொழிந்தபோதில் அப்பர் சுவாமிகள் ஏதோ திருவருட் குறிப்பால் அவரெதிர் நோக்கு கிறார். அப்போது, திருவருட் செயலால், அப்பூதியார் உளத்தில் அவர் வைராக்கிய உறையைப் பிய்த்துக்கொண்டு ஏதோ ஒரு தடுமாற்றம் தலைகாட்டுகிறது. அப்பரின் அருட் கண்ணொளி அதனைக் கண்டுகொள்ளுகிறது. அவ்வளவில் அப்பூதியார் நிலையை மடக்கிப் பிடித்துக்கொண்டார் அப்பர்.

'இவ்வுரை பொருந்தென் உள்ளம்
என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும்' என்றார் அப்பர்.

இனியும் எப்படித் தப்பித்துக்கொள்வது. பயந்து இரங்கி ஒருவாறு உண்மையை வெளியிட்டுவிட்டார்.

'ஓ! நல்ல காரியஞ் செய்துவிட்டீர்களே. ஆர்தான் இது செய்வார்' என்ற ஒரு கருணைக் கடிவினோடு அப்பர் சுவாமிகள், ஆவி தீர்ந்த சடலத்தை நோக்கி, 'ஒன்று கொலாமவர் சிந்தை யுயர்வரை' என்ற திருப்பதிகம் அருளிச்செய்த மாத்தி ரத்தே புதல்வன் உயிர்த்தெழுந்தான். சுவாமிகளிடம் விபூதி யும் பெற்றுக்கொண்டான்.

ஆரம்பத்தில் அமுதுக்கழைத்தபோதே அப்பூதியார் வாய் மொழி, 'அமுதுசெய் தெங்குடி முழுதுய்யக் கொள்வீர்' என் றமைந்திருந்தது. அதை இப்போது நினைவுகொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் நிகழும்போது எப்படியோ பலர் அங்கு குழுமிக்கொண்டனர். புதல்வன் உயிர்த்ததுபற்றிய ஏகப் பட்ட அக்களிப்பு மற்றெல்லோருக்கும். அப்பூதியார்க்கும் மனைவியார்க்கும் மட்டும், 'என்ன! எம்புதல்வன் அப்பர் அமுதுண்டலுக்குத் தாமதம் பண்ணிவிட்டானே!' என்ற ஒரு குறுகுறுப்பு. பார்க்கவேண்டியதுதானே ஆட்களை! அவர்கள் அவர்களேதான்; உண்மையான மெய்யன்பர்களேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மேல் அமைதியும் அக்களிப்பும் மிகுந்த ஒரு விருந்துபசாரம் இனிது நடந்தேறிற்று. அப்பூதியாருங் குடும்பமும் அப்பர் அருளுக்குப் பூரணபாத்திரமாயினர். அப்பர்சுவாமிகள் சிலநாள் அங்கேயே தங்கியிருந்து திருப் பழனப் பதிகத்தில் அப்பூதியாரைச் சிறப்பித்துப் பாடிப் பிரியாவிடை பெற்றகன்றுர்.

அப்பூதியாருக்கு, ஆளைக் காணுமுன்னே அப்பர்பால் அன்பு முற்றி விளைந்திருந்தது. அவர் எந்த ஒரு விசேடகாரணத்தினுல் அப்பரை அபிமானித்தாரோ அதே விசேடம் அப்பூதியார் விஷயத்திலும் நடந்துவிட்டது. 'எவன் எதை உபாசிக்கின்றுனே அவன் அதை அடைகின்றுன்' என்ற (பிருகதாரண்ய) உபநிடதவாய்மை வெளியாய்விட்டது. அவ் விஷயம் சம்பந்தப்பட்ட வகையில் அப்பர் சுவாமிகள் அப் பூதியார்க்குத் தெய்வமாம் நிலையும் ஆய்விட்டது. எங்ஙனம்? 'ஐயப் படாது அகத்த துணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்' என்ற வள்ளுவர் வாய்மையின் வண்ணம். அப் பூதியார் நெஞ்சிற் தடுமாற்றத்தை அப்பர் அறிந்த அதனை இது அலாக்காகச் சுட்டுகின்றது. அன்றியும், அப்பர் அப் பூதியாரோடு சிலநாள் உடனுறைந்தமையாலாம் பேறும் அப்பூதியார்க்கு லப்பியமாய்விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, அப்பர் சுவாமிகள் அப்பூதியாரைத் தமது தேவா ரத்திலேற்றி அமரத்துவம் தந்தும்விட்டார்.

இந்தப் பெறுபேறுகளுக் கெல்லா மிடமான அப்பூதி யாருக்கு இனி அப்பரே ஊதியம் என்பதற்குத் தடையில்லை.

'இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம்,'

என்ற சேக்கிழார் வாக்கு அக்ஷரலக்ஷம் பெறும்.

இந்த அப்பூதியார் இறைவனடிநீழல் சேர்ந்தார் என மேலுங் கூறுவது மிகையாகும்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வருகின்ருர் திருநாளைப்போவாராம் மறைமுனிவர்'

வாக்கியங்களில் வழமையாகப் பின்னிற்கும் பயனிலை முன்னிற்பதால் நேருஞ் சுவையுணர்வு இலக்கிய வளா கத்தில் ஒரு புதிர். சுவாரஸ்யமான ஏதுமொரு உணர்த்துதல் விசேடம் அதனேடு ஒட்டியிருத்தல் தப்பாது. சிலவேளை, அது ஒரு குதுகலக் குறிப்பை உணர்த்துவதாயிருக்கும். சில வேளை சந்தேகாஸ்பதமாய் இருந்ததொன்று காரியப்பட்டு விட்ட விசேடத்தைக் குறிப்பிடுவதாயிருக்கும். பெரிய புராணத்தில் வரும் இத்தொடர் இந்த இருவகை உணர்த்து தல்களையுந் தழுவி நிற்குந் திறத்தை உற்றறிதலிற் சுவை யுண்டு.

இத்தொடரின் அந்தரங்கம் என்ன என்பதை இனங் கண்டு கொள்ளுவதில் இதற்கு முன்னணைந்து நிற்குந் தொடரின் சேவை குறிப்பிடத்தக்கது. 'அருமறைசூழ் தில்லை யினில் ஆடுகின்ற கழல் வணங்க' என்ற அத்தொடரின் பங்கு மகத்தானது. அதைவிட மகத்தானது தன் பய னிலையை முன்னிட்டுப் பின் நிற்கும் எழுவாயாகிய திரு நாளைப்போவார் என்ற பெயர்.

ஆம்! அவர் நாளைப்போவார். ஏன்? எதனுல்?

வரலாறிருந்த வண்ணம், 'ஒப்பிலவர் நந்தனூர்' என்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இத்திருத்தொண்டர் சாமா ணிய மாநுடங்கள் போலாது பிறப்பிலேயே சாமுசித்த ராய்ப் பிறந்துவிட்டவர். சம்சித்தி: என்ருல் நன்முறையில் வாய்ந்த சித்தி. சாம்சித்த: என்ருல் நன்முறையில் வாய்ந்த சித்தி உடையவர். இவ்வடமொழிப் பெயர் தமிழுக்கு மாற்றலாகும் போது இறுதியிலும் இடையிலும் இரு மாற்றங்களை வேண்டிச் சாமுசித்தர் ஆயிருக்கின்றது. எனவே, சாமுசித்தர் என்ருல் நன்முறையில் வாய்ந்த சித்தி பெற்றுள் ளவர், பூரணசித்தி பெற்றுள்ளவர் என்ருகும். சித்தர் என்ற பெயர் சிவனுக்கே முதன்மையானது. சிவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தவருக்கும் அவன் சார்பிலேயே இப்பெயர் ஆயிற்று. 'சிவனுவான் அவனேதான் சித்தன் சித்தன்' என்று காரைச்சித்தர் கனகவைப்பு என்ற நூலின் பாயிரங் கூறும். அதற்கிணங்க, சித்தி என்பதும் சிவப்பேற்றுக்கே முதன்மையானது. ஆகவே, சாமுசித்தர் என்பவர் சிவனை அடையும் பேற்றுக்குப் பூரணதகுதி பெற்றவர்; அதற்கு முன்னோடி நிலைகளாகிய, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், குருவருள், மும்மலநீக்கம் எல்லாம் ஏலவே பெற்றுள்ளவர் ஆவர். சாமுசித்தராய்ப் பிறப்போர் எவரெனினும் எடுத்த பிறப்பிலேயே சிவனை அடைந்துவிட வேண்டியவர். நந்தனுரும் அதற்கென்றே பிறந்தவர்; அவ்வாய்ப்புக்குரியவரே. அவருக்கு வேறெங்குமல்ல; சிதம்பரத்திலேயே முத்தி என்ற ஏற்பாடு எப்பவோ முடிந்த காரியம்.

சீவர்கள் விஷயத்தில் இங்ஙனம் ஏலவே 'தொடராமுறி' பண்ணி வைத்திருக்குஞ் சிவன், காரியமாதற்குரிய கடைசிக் கட்டத்தில் விஷமப்பாங்கான, எக்கச்சக்கமான, ஒரு விபரீத சூழ்நிலையை உருவாக்கி அதுமூலம் சம்பந்தப்பட்ட சீவனின் உள்விளைவின் விலாசங்களாகிய பக்தி, வைராக்கிய, வினய, பரவச நிலைகளை ஊர்ஜிதஞ் செய்துவைத்தல் திருத்தொண்டர் வரலாறு முழுமையினுஞ் சிறப்பியல்பாயுள்ளது போலவே நந்தனுர் விஷயத்திலும் அமைந்து போயிற்று.

சேக்கிழார் நாயனுர் அவரைச் சித்திரிப்பதன் படிக்கு, அவர் சர்வ சாதாரணமான ஒரு இயற்கைச் சூழலின் பின்னணியில் மிளிரும் ஒரு புண்ணிய சொரூபம். அவர் பதியாகிய ஆதனூரை 'நீற்றலர் பேரொளி நெருங்கும் அப்பதி' எனச் சேக்கிழார் செய்யும் வர்ணனை அது ஒரு புலைப்பாடி என்ற நினைவின் மணமே தட்டாமற் பண்ணி விடுகின்றது. நந்தனுர் இருப்புக்குப் பின்னணியாய் அமைந்ததனுல் அந்த ஊருக்கு வந்திருந்த சிறப்பு அது என்பதே மேல். பிறந்து அறிவுச்சுருள் விரியத் தொடங்கிய அக்கணந் தொட்டுச் சிவன் பற்றியதே அவர் அறிவு. சிவன்பால் நிகழ்வதே அவர் அன்பு. அதை விட்டு வேறென்றை அறிவதோ மற்றென்றை அன்பு செய்வதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் ஆத்துமம் அறியாத தொன்று. சிவனை அன்பு செய்யும் உரிமை எல்லா உயிர்க்கும் ஏகபோகமானது. பிறப்புச்சார்பான எந்த ஒரு சூழ்நிலையும் அதற்குக் குந்தகமல்ல என்பது சைவத்தின் அகிலமளாவிய பொதுமைக் காட்சியில் மலர்ந்த ஒரு புதுமைப் பண்பு. நந்தனார் விஷயத்தில் இது நிதர்சன மாயிற்று. எனவே அவர்க்கு வாய்த்திருந்த சாம்சித்த நிலை அதனைத் துலாம்பரமாக்கும் 'எக்ஸ் றே' ஆயிற்று.

வெறும் நினைவினால் மட்டுமல்ல; தம் தொழில் திறன் மூலமாகவும் அவர் சிவனையே நினைகிறார். சிவனன்பையே தழுவுகிறார். சிவப்பணிக்கே உதவுகிறார். சுவாமி அபிஷேகத் துக்குத் திவ்விய திரவியமான கோரோசனை, கோயில் வாத் தியங்களுக்காம் தோல், வார், நரம்பு ஆகியன தேடி உப கரித்தல், கோயில் வீதி பெருக்குதல், குளந் தோண்டுதல் ஆகியன எல்லாம் நடக்கின்றன. கோயிலைச் சுற்றிச் சுற்றிக் கும்பிட்டுக் கூத்தாடித் தட்டமிட்டும் சந்நிதியில் நின்று உருகிப் பெருகி ஆனந்தநடனமிட்டுங் களிக்கின்றார். இவை யனைத்தும் நடைமுறை வியவகாரங்களாகின்றன.

பக்குவ முதிர்ச்சி பெற்ற சீவன்விஷயத்தில் அதற்குப் பரிவு பண்ணும் நோக்கொன்றே சிவபெருமான் நோக்கு. தன் சந்நிதியினின்று ஆனந்தக்கூத்தாடி மனமழியும் இப்பா வன சீவனுக்காக அவர் தாமாகவே, 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று நந்தியை விலக்கிக் கொடுத்தார். அதே சிவலோகநாதன் சந்நிதியில் ஒருபோது விழுந்து கும்பிட் டெழுந்து செல்கின்றார் நந்தனார். அவர்பால் முற்றிமுறுகி யிருந்த அன்பின் உளத் தொழிற்பாடான பரவச நிலை யையும் உடற்சார்பான மெய்ப்பாட்டின் அசைவையும் தம் அகக்கண்ணால் நோக்குஞ் சேக்கிழார்க்குப் 'புளிக்கண் டவர்க் குப் புனலூறுமாறுபோல்' ஆவலூறுகிறது. அதைச் சந் தர்ப்பமாகக்கொண்டு நந்தனாரின் அன்பியற் செழிப்பைச் சொல்லாலுங் குறிப்பாலுந் துலங்கக்காட்டிவிடுகின்றார். அவர் அவ்விடத்துப் பணிந்த பணிவிலும், எழுந்துசெல்லுஞ் செலவினும் சேக்கிழாரின் அன்பியல் வர்ணனை களைதட்டிப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'பவலோகங் கடப்பவர்தாம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து**
**சுவலோடு வாரலேயப் போவார்'**

என்ற அவ் வர்ணனையில் பணிவிட்டுப் பணிந்தெழுந்தமை சொல்லாலுணர்த்தியது. சுவலோடு வாரலேயப் போனமை குறிப்பாலுணர்த்தியது. இரண்டும் அவரன்பியல்பையே உணர்த்தின. முன்னேயது உளச்சார்பில் வைத்துணர்த்தியது. பின்னேயது உடற்சார்பில் வைத்துணர்த்தியது.

நம் மனதால் எண்ணி, 'நாம் பணிகிறேம்' என்ற உணர்வுடன் பணிவது நம்மியல்பு. இதில் மனதின் தொழிற்பாடும் 'நான் பணிகிறேன்' என்ற உணர்வின் தொழிற்பாடும் இடம்பெறுதல் தப்பாது. இது பணிவிடாத பணிவு. நந்தனர் பணிவு இதற்கெதிரானது. அது அவர் மனதையும் அகங்காரத்தையுங் கடந்த அவர் பரவசத்தினுல் நிகழும் பணிவு. அது பணிவிட்ட பணிவு. பணியாமற் பணிந்த பணிவு என்றுஞ் சொல்லலாம். மனதை மட்டுமல்ல பொறிபுலன் கரணமெல்லாவற்றையுந் தன்னுளடக்கி மேலிட்டெழும் இத்தகைய பரவசப்பணிவு உடல்கொள்ளா அளவு விதிர்விதிர்ப் போடும் கூடியது. 'மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன்' என மாணிக்கவாசகர் குறிப்பிட்டது போன்ற இப்பரவசநிலேயில் உடலசைவு மிகும். 'சுவலோடு வாரசையப் போவார்' என்பதில் தங்கியுள்ள குறிப்பு இது. சுவல்—தோள். பரவசத்தாலான உடலசைவின் அதிர்ச்சி தோளளவிலல்லாது தோளிற் கிடந்த வாரையும் அசைவித்து விடுகிறது. 'சுவலோடு வாரசைய' என்ற இத்தொடர் அவர்தம் அன்பசைவு மெய்ப்பாட்டின் அளவின்மைக்கு ஒரு அறிகுறியாம். இது சொல்லாலன்றிக் குறிப்பாலுணர்த்தப்பட்ட நந்தனர் அன்பமைதிப் பரிமளிப்பு.

இத்தகைய பக்குவப் பழமாகிய நந்தனர் பூர்வநியமப்படி சிதம்பரம் போகவேண்டியவர். அதற்கு அநுகுணமான ஆவலும் நீங்கா நினேவாய் எழுந்து விடுகிறது. ஆனுல் 'நாளேக்குப் போவோம்' எனத் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் தயக்கமும் ஒன்று. 'உறுகுலத்தோ டிசைவில்லே' என்ற ஒரு சாட்டு அவரது போதல் முயற்சிக்குக் குறுக்கீடாக நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத் தொடக்கெல்லாம் நீங்கிப் பிறப்பிலேயே சாமுசித்தராயிருந்துவிட்ட நந்தனுருக்கும் இப்படி ஒரு தடையா? இது நியாயமான சந்தேகமே. நம் புறமுக அறிவநுபவங் கொண்டு இதை நாம் பலவாறு விமர்சிக்கலாம். ஆனுல், ஆன்மாநுபவப் பெருவீதியில் இதுவுமொரு தரிப்பிடம் என்கின்றது சைவசித்தாந்தம். குருவருளால் மலநீக்கம் பெற்றுச் சுத்தநிலை உற்றவர்க்கும் கன்மம் ஒழிந்த போதிலுங் கன்ம வாசனைத் தாக்கம் உண்டு. பெருங்காயப் பானையிலிருந்த பெருங்காயம் முற்றுக வழித்துத் துடைத்து எடுக்கப்பட்ட பின்னரும் அதன் மணம் நீங்கா திருப்பது போல் இதுவுமிருக்கும் என்பர். சுத்தநிலை பெற்ற உயிரும் உடல் சம்பந்தியாய் இருக்கும்வரை அதன் சூழ்நிலை பற்றிய வாசனைகள் அதனைத் தாக்குதல் தப்பாது.

'மலமகல் பவரும் புவிமீதே மாநுட வடிவந் தனையெய்திச்
சிலபக லெனினும் பயில்காலைச் சேர்தரும் மலவாதனை'

என்ற திருவாதவூர்ப் புராணமுடையார் கூற்றையும் அறிதல் நலம். அத்துடன், பவ்விய ஆத்மாவாகிய நந்தனுரைக் குறித்த சூழ்நிலையில் இட்டுவைத்ததுங்கூட அதே வாசனையாய்த் தானிருக்கக் கூடும் என்பதையுஞ் சிந்தித்தல் நலம். அது சரியாயிருக்கும் என்பதற்கு ஆதாரமும் உண்டு; அது பின்னுல் அறியவரும்.

'சாதிகுலம், பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை' எனவும்,
'யான் இடர்க்கடல்வாய்ச் சுழிசென்று
மாதர்த் திரைபொரக் காடிச் சுறவெறிய
அழிகின்றனன்' எனவும்,
'ஈர்க்கின்ற அஞ்சொ டச்சம்
வினையேனை இருதலையே' எனவும்,
'புலனு லலைப்புண் டலைந்த
வெறுந் தமியேனை விடுதிகண்டாய்' எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபோல் இன்னும் பலவேறு விதமாகவும் மாணிக்க வாசக சுவாமிகள் வாக்காக வருவன அனைத்தும் இத்தகைய வாசனு தோஷங்களேயாம். இந்தப் பாவனு சீவனுகிய நந்த னூர்க்கும் அது அவ்வாறே முன்னிற்கின்றது.

இருந்தும், ஆகவேண்டியது ஆகியே தீரவேண்டும். அந்நியமப்படி அவர் எப்படியோ ஒருநாள் சிதம்பரஞ் சென்றே விடுகின்றார். ஆனல் உள்ளே புகவில்லை. அங்கும் அவருக்கு அதே குறுக்கீடு. 'இன்னல் தரும் இழிபிறவி இது தடை' என்ற ஒரு உணர்வு. இப்படியிருக்கிறது வாசனு மலத்தின் செய்தி.

உயிர்க்குயிராயிருந்து உதவவேண்டியவற்றை உதவும் பாங்கில் சிவபெருமான் நிலை அனைவர்க்கும் பொது. ஆனல், பெத்தநிலை உயிர்கள் கன்ம பலபோகமே வேண்டிநிற்ற லால் சிவன் அவர்கள் விஷயத்தில் இயலும் விதமும் சுத்தநிலை யுயிர்கள் சிவபோகமே வேண்டிநிற்றலால் சிவன் அவர்கள் விஷயத்தில் இயலும் விதமும் வேறுபட்டவை. பெத்தநிலை யுயிர்களுக்குத் தான் தோன்ருது தலைமறைவாய் நின்று தமது திரோதான சக்திமூலம் கன்மபலபோகங்களைக் கொடுத்து, அவர்கள் பாடு பயன்களில் தான் சம்பந்தப்படாது, அது அவர்கள் பாடெனவிட்டிருப்பார். அதற்கெதிர் சுத்தநிலை யுயிர்களுக்குத் தமது பராசக்தியோடு வெளியாய் நின்று அவர்கள் பாடுபயன்களுக்குத் தம்மை ஈடு கொடுத்துத் தக்க பரிகாரம் பண்ண முன்னிற்பார்.

இவ்வியல்புக் கிணங்க நந்தனர் விஷயத்தில் அவர் கருணை முந்துகிறது. அவருக்கிருக்கும் வாசனுமல தோஷத்தை ஒழிக்க வழிசெய்கின்ருர். 'இன்னல் தரும் இழிபிறவி இது தடை' என்ற உணர்வோடு துயிலும் நந்தனர் கனவிலே தோன்றி,

'இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்'

என உணர்த்துகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலறியா அன்பினுல் தம்மையே வேண்டிநிற்கும் நந்தனுரை அயலறியாமலே சிவன், தம்பால் அழைத்தற்கு ஏதுமொரு இடைஞ்சலும் இருத்தல் சாலாது. அவர் சர்வ வல்லவர், தடைபடா ஆணையினர் என்பது பிரசித்தம். ஆனுல், ஆத்மீக அநுபவப்பேறு என்ற நெடும் வழிப்பயணத்தில் ஒவ்வொரு திருப்பத்திலும் நிகழ வேண்டும் மாற்றம் ஒவ்வொன்றும் குறித்த உயிருணர்வில் மாற்றம் நிகழவைப்பதாய் அமைய வேண்டுதல் அவசியம். இருவினையொப்பு என்ருல் கடவுள் தாஞக இருவினைகளையுஞ் சமன்படுத்திவிடுவதல்ல; சம்பந்தப்பட்ட உயிருணர்வில் இன்ப, துன்ப; இத, அகித பேதமற்ற சமநிலை ஏற்படுதலே இருவினையொப்பு, மலபரிபாகம் எனிலும், மலசக்திகள் தன்னை விட்டு விலகிப்போன ஒரு விடுதலை யுணர்வுநிலை உயிருணர்வில் ஏற்படுதலே மலபரிபாகம். அவையேபோல்வதே வாசனுமலநீக்க விஷயமும். இழிபிறவித் தோஷமாய் நந்தனுர் உணர்வைப் பந்தித்திருக்கும் அவரது வாசனு தோஷம் அவர் உணர்வுபூர்வமாக உணரத்தக்கவாறு அவரைவிட்டு விலக வழிசெய்வது இங்கு சிவன் செயற்பாங்கு. எரியையும், முப்புரிநூல் மார்பரையும் இங்கு இயைத்ததன் இரகசியம் பற்றி இவ்வாறு சிந்தித்துணர்தல் தகும்.

நந்தனுர் கனவில் நிகழ்ந்த ஆணைக்கு அநுகுணமாகத் தில்லைவாழந்தணரிடத்திலும் ஆணை நிகழ்கிறது. அவர்கள் தாமாகவே நந்தனுரைத் தேடி வருகிருர்கள். ஏன் வந்தீர்கள்; என்ற வினுவுக்கு அவகாசம் வைக்காமலே, 'ஐயரே! அம்பலவ ரருளால் நும் முன்னணைந்தோம் வெய்ய அழல் அமைத்துமக்குத் தரவேண்டி' எனச் சொல்லிக்கொண்டு முன்வந்து விடுகின்ருர்கள். கேட்ட மாத்திரத்தே 'நானுய்ந்தேன்' என்று விடுகிருர் நந்தனுர். அவ்வளவே அவர் வாசனு மலம் பறந்ததற்குச் சரி. இந்த உணர்வு விடுதலையாகிய மானசீகப் பேறளவில் அமையாது. உடல்நிலை மாற்றமாகிய சாரீரகப் பேறும் உடன்நிகழ வேண்டியாகிறது. எரிமூழ்கியதும் அதுவும் கைகூடிப் போகிறது. சாமுசித்தராகிய நந்தனுருக்கு அந்தச் சரீரம் நேர வந்ததும் வாசனு தோஷமான ஏதோ ஒரு விளைவு என்ற எம் அநுமானம் சரியென்றே படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செந்நீமேல் எழும்பொழுது
செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினர்.''

வாசனு தோஷத்தால் வந்த உடற் சொரூபம் நீங்கவே அந்தணனை அவர் உளச் சொரூபம் புலப்பாடாகிறது. என்னே குதூகலம்!

'அருமறைசூழ் தில்லையினில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்'

நாளைப் போவோம் என்றவர் (இன்றே) வருகின்றார். 'இன்னல் தரும் இழிபிறவி' இது தடையென்று தயங்கினவர் சற்றுந் தயக்கமின்றி வருகின்றார். (சிதம்பர) எல்லையில் நின்று தியங்கியவர் தில்லை நடராஜாவை அணுகி வருகின்றார். அவர் வருகையே முன். ஆரென்பது பின்.

சிவ சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்நெலைச் சார்ந்தொழுகு
பொருளெனவே பரிந்துருகு
அந்நலத்தாரும் [illegible]".

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

# விஷய சூசிகை

பக்கம்

அன்பு நிகழ் வகை ... 1
அகமுக அன்பு புறமுக அன்பு ... 2
மெய்யன்பு எது ? ... 3
'அன்பே சிவமாவது' உண்மை விளக்கம் ... 4 – 5
அன்பு நெறி, அறிவு நெறி ... 6 – 7
மெய்யன்பு நிலைக்களங்கள் ... 8
ஞானத்தின் யதார்த்தநிலை ... 9
பன்னிரண்டாஞ் சூத்திரம்
பன்னிரண்டாந் திருமுறை இயைபு ... 10
அண்டம் பிண்டம் — அசைவு மயம் ... 11 – 12
'அரங்கிடை நூலறிவாளர், அறியப்படாததோர் கூத்து' விளக்கம் ... 14
நடராஜ மூர்த்தத்தின் தனித்துவம் ... 15 – 16
பதஞ்சலி — நடராஜஸ்துதி ... 16 – 17
சொல்லும் திறம் வல்லார் சேக்கிழார் ... 18 – 19
'தயா மூலோதர்ம:' — விளக்கம் ... 20
சீவ இரக்கமே அரசியலின் உயிர் மூச்சு ... 21
பிராயச்சித்தம் — என்ன? ... 22
தர்மம் தலைகாப்பது — எப்படி? ... 23
கடமை வழியதே ஈடேற்றம் ... 26
சிவன் பரிசோதனைத் திறம் ... 28
'பேதியா ஏகம்' — செம்பொருள் ... 30
வைதிகம் — ஸ்மார்த்தம் ... 32
ஞானமே முதலாம் நான்கு ... 33 – 34
சூத்திரர் பண்பு ... 35
அடியார்க் கமுதளிப்போர் பொறுப்பு ... 37
'மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி' ... 39
'மேம்படு கற்பு' ... 41
ஒரு அலாதிப் பிரியம் — சிவத்திற்கும்! ... 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| மனைவி பாதத்திற் கணவர் ... | 47 |
| இரட்டை விளக்கிட்ட விளக்கம் ... | 48 |
| அது மண்வாசனை ... | 49 |
| அவர்க்கு வெற்றி; ஆனால் இவர்க்குத் தோல்வி இல்லை ... | 51 |
| 'யாது நான் செய்கேன்' — பொருள்நிலை ... | 52 |
| 'ஐயன்' — என்றதேன்? ... | 54 |
| பெரியோர்களின் மெய்யுள்ள விரிவு ... | 55 |
| இறங்குதுறைக்குப் படி ... | 57 |
| 'எல்லையில்லவன்' — எவ்வாறு? ... | 58 – 59 |
| அன்புநோக்கும் — அருள்நோக்கும் ... | 60 |
| அருளியற் புதிர் ... | 61 |
| விஞ்ஞானம் — மெய்ஞ்ஞானத்தின் சாயல் ... | 62 |
| சித்தாந்த விளக்கத் திறவுகோல் ... | 64 |
| ஞான பாரம்பரியம் ... | 66 |
| மணிவாசகரின் ஆர்வமதிப்பீடு ... | 67 |
| கள்ளத்தே நிற்குங்கலை ... | 68 |
| கண்ணப்பர் அன்பும் ஞானத்தின் வழியதே (அகப்பட்டார் — இரு தொனி) ... | 69 |
| சைவ அநுட்டானத்தின் ஞானப்பொறுதி ... | 69 |
| நடுநிலை விளக்கு ... | 72 |
| 'அஞ்சுவ தாங்கே அணங்காகும்' ... | 73 |
| அவர் தயாரில்லை ... | 74 |
| ஆண்மை வீறு வேறு அன்பு வீறு வேறு ... | 75 |
| நன்மதிப்பும் அவமதிப்பும் — ஒருங்கே ... | 77 |
| லௌகிகத்தை எடுத்தெறிந்த தொண்டுள்ளம் ... | 79 |
| 'என்னையும்' — 'உம்' ... | 79 |
| வாழ்வியலறம் — ஆத்மவியலறம் ... | 80 |
| புயலும் — புரட்சியும் ... | 82 |
| தொழிலும் தொண்டும் — பொருத்தம் ... | 85 |
| நித்திய ஜீவத்துவம் பெறுந்தொடர் ... | 87 |
| அர்த்த கௌரவமான ஒருபடைப்பு ... | 88 |
| 'இனி இதுவே செயல்' — சூசிப்பது ... | 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| தலைதப்பினது தம்பிரான் கருணை | ... | 90 |
| இங்குந்தனி ; அங்குந்தனி | ... | 90 |
| 'பற்றியது மெய்யாக்கல்' | ... | 91 |
| உணர்ச்சிவழி நண்பு | ... | 92 |
| திருநாவுக்கரசு திருநாவுக்கரசே தான் | ... | 93 |
| ஒரு இரசனை | ... | 94 |
| அதென்ன வேறு? அதென்ன ஒரு பேர்? | ... | 95 |
| கனரகமான கண்டனம் | ... | 95 |
| பொய்ச்சாட்சி! — முகஞ்சொல்லாது | ... | 97 |
| அவர்கள் அவர்களே தான்! | ... | 98 |
| 'எவன் எதை உபாசிக்கிறானோ அவன் அதை அடைகிறான்' | ... | 99 |
| சம்சித்தி — சாமுசித்தர் | ... | 100 |
| ஒரு புண்ணிய சொரூபம் | ... | 101 |
| சைவத்தின் பொதுமைக் காட்சியில் புதுமைப் பண்பு | ... | 102 |
| பணி விட்ட பணிவு | ... | 103 |
| வீதியில் ஒரு தரிப்பிடம் | ... | 104 |
| சிவனருளும் விதங்கள் — வேறுபாடு | ... | 105 |
| நந்தனார் விஷயத்தில் எரியும் பூசுரரும்— ஏன்? | ... | 106 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் மறுநூல்கள்

1. மாவைப் பிள்ளைத்தமிழ் — உரையுடன்
வெளியீடு: மாவையாதீன முத்தமிழ் மன்றம்

2. குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்
வெளியீடு: குழந்தைவேற்சுவாமிகள் சமாதிக் கோயில் திருப்பணிச் சபை

3. திருக்குறிப்புத்தொண்டர் புராண ஆறுமுகத் தம்பிரான் உரை விளக்கக் குறிப்புகள்
வெளியீடு: யா. கூ. த. ப. விற்பனைக் கழகம்

4. சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்
வெளியீடு: மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம்

5. சித்தாந்தச் செழும்புதையல்கள்
வெளியீடு: ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியா பீடம்

6. நாவலர் பிள்ளைத்தமிழ் — உரையுடன்
வெளியீடு: காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம்

7. சிவாலய பூசையில் தமிழ் வேதம்
வெளியீடு: ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கம்

இன்னும் அச்சேற வேண்டியவை:

மாவைப் பள்ளு
சிவாலய சேவை
சேக்கிழார் பிள்ளைத்தமிழ் — விளக்க உரை

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — 6309/1-84.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org